OCT. 52

கண்ணன்

தீபாவளி மலர்

விலை ரூ. 1

உனக்குத் தெரியுமா?



1. உலகத்திலேயே மிகவும் நீளமான ரெயில் பாதை ருஷ்யாவிலுள்ளது. ரீகாவிலிருந்து விளாடிவாஸ்டாக் வரையுள்ள இந்த ரெயில் பாதையின் நீளம் 6000 மைல்கள்.

2. சந்திரனில் ஒரு நாள், பூமியில் இரண்டு வாரங்களுக்குச் சமமானது.

3. செங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைக்கும் சூயஸ் கால்வாயின் நீளம் 101 மைல்கள். குறைந்த அளவு அகலம் 196 அடி 10 அங்குலமுள்ளது.



4. பருத்திகளிலேயே சிறந்தது மேற்கு இந்தியாவில் ப்ரோச் என்னும் இடத்தில் விளையும் பருத்திதான். அதற்கு ப்ரோச் என்றே பெயர்.



5. கடந்த ஒரு நூற்றாண்டில் 40,000 வெவ்வேறு தலைகளுள்ள நெருப்புப் பெட்டிகள் ஸ்விடன் நாட்டில் வெளி வந்திருக்கின்றன.



6. ஒரு மைல் கன அளவுள்ள கடல் நீரில் 17,000,000 டன் எடையுள்ள உப்பு இருக்கிறது.

—சுந்தரராஜன், பம்பாய்.

84200

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 NOV 1952



உலகத்தில் உண்டான
பல கடவுள் உருவங்களில்
நம்மைக் கண்ணன்
தான் இழுத்தது — எப்போதும்
இழுத்தது. இழுத்ததைக் கட-
வுளை நம்புவோம் நம்பி
பூஜிப்போம், பூஜித்து
உய்வோம்

ராஜகோபாலாச்சாரி

கண்ணன்

தீபாவளி மலர்

பொருளடக்கம்

மலர்: 3 *இதழ்: 10*

ராஜாஜியின் ஆசி 1
குழந்தைகளே! 4
பிச்சாண்டி - *கி. சந்திரசேகரன்* 5
அரசகுமாரன் சோதனை - *கி. வா. ஜகந்நாதன்* .. 12
பந்தயப் பித்தன் - *தி. ஜ. ர.* 17
கண்ணன் பாட்டு - *நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை* 20
யானை ராஜா - *'ராஜி'* 22
கதையைக் கேளு, பாப்பா! - *கொத்தமங்கலம் சுப்பு* 26
புஸ்வாணம் - *சுகி* 28
மைல் ரேஸ் வீராசாமி - *ஆர்வி* 33
நட்சத்திரக் குழந்தைகள் - (போட்டோ) .. 38
குற்றவாளி - *'ஸேனு'* 44
வேடிக்கைக் கணக்கு - *'யோகம்'* 49
அபாயச் சங்கு - *நீலம்* 51
ஸ்பெஷல் ஆட்டம் - *'ஜா ஜவி'* 56
மரக் குதிரை - *பட்டு* 62
போலீஸ் திருடன் 65
தீபாவளி நாடகம் - *ஜி. எஸ். மணி* 67
சூரியகாந்தி - *ச. கு. கணபதி ஐயர்* 73





இயற்கை விநோதங்கள் - வே. ரா. சுந்தரராமன் 77
ஒரு ரூபாய் - எ. டி. விஜயா 79
விருந்துச் சாப்பாடு - எஸ். ரங்கநாயகி 81
அத்தான் கிளி - மஞ்சேரி ஈசுவரன் 88
எண்ணிலே படங்கள் - 'மூட்டை' 91
புளியமரத்துப் பேய் - பெ. தூரன் 92
ஜெட் விமானம் - புரொபஸர் விஞ்ஞானம் .. 97
நீலப் பாவாடை - ஸரோஜா ராமமூர்த்தி .. 102
நம்ப முடியாத கதைகள் - 'தம்பி' 106
நாணயம் - எல்லார்வி 110
அம்மாவின் கவலை - அழ. வள்ளியப்பா .. 113
கண்ணன் - ஒரு திருடன் - சங்கரசுப்பு 115
சங்கரன் சாமர்த்தியம் 121
சத்திய மோதிரம் - கி. ரா. 122
பொழுது போக்கு - சுந்தரம் 127
கேட்டீர்களா! 128
மூவர்ணப் படம்.
ராதா - கிருஷ்ணன் விளையாட்டு
புகைப் படங்கள்.
நேரு, பாபு ராஜேந்திர பிரசாத், ஸர் எஸ். ராதா கிருஷ்ணன், ஜெனரல் கரியப்பா.

ஓவியர்கள் : ஸாமி, சங்கர், மகான், சுசி, சுப்பு, சீமா.

போட்டோ: சங்கர், என். ராமகிருஷ்ணு, சந்தா மியான், பி. என். சர்மா.

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

கங்கா ஸ்நானம் ஆச்சா? கடவுளைக் கும்பிட்டீர்களா? பெரியவர்களை வணங்கினீர்களா? அப்படியானால், பேஷ்! இதோ இருக்கிறது, உங்கள் கண்ணன் மலர்!

புத்தாடை உடுத்து மத்தாப்பூக் கொளுத்தும் அண்ணன் தங்கையை மூவர்ண அட்டைப் படத்தில் பார்த்தீர்களா! எப்படி இருக்கிறது?

நீங்கள் எத்தனை பாக்கியசாலிகள்! நம்முடைய ராஜாஜி உங்களுக்காக எழுதியிருக்கும் ஆசிச் செய்தியைப் படியுங்கள்.

அல்லும் பகலும் நாட்டுக்காக உழைத்து வரும் அந்த மகான் எவ்வளவோ வேலைகளுக்கு இடையே உங்கள் கள்ளமற்ற உள்ளத்தை மகிழ்விப்பதற்காக, இந்த அன்புச் செய்தியை அனுப்பியிருக்கிறார். திரும்பத் திரும்ப அந்தத் தேன் துளிக்கும் வரிகளின் தீஞ்சுவையைப் பருகுங்கள்.

பெரிய பெரிய எழுத்தாளர்கள் எல்லாம் உங்களுக்காக மணிமணியான கதைகள் எழுதியிருக்கிறார்கள், பாருங்கள். அடேயப்பா! பிரபலமான பலருடைய கதைகள் எல்லாம் இந்த மலரை அலங்கரிக்கின்றன. ஆஸ்தான கவிஞர் நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை அருமையாக, கண்ணன் பாட்டு ஒன்றைப் பாடியிருக்கிறார். ராகம் போட்டு மிடுக்கான சந்தத்தில் பாடிக் களியுங்கள். கொத்தமங்கலம் சுப்புவின் பாடலையும், வள்ளியப்பாவின் பாடலையும் பாடி இன்பம் அடையுங்கள்.

ராதா கிருஷ்ணன் விளையாட்டு எப்படி? இந்த அழகிய மூவர்ண அட்டையை வெட்டி, வேண்டுமானால் இன்னும் தடியான அட்டையில் ஒட்டி வெட்டி, அதில் குறிப்பிட்டிருப்பதுபோல் செய்து பாருங்கள். கிருஷ்ணன் பிடிக்கப் போகும்போது ராதை புன்னை மரத்திலே ஒளிந்துகொள்வாள். பார்க்கப் பார்க்க வேடிக்கையாக இருக்கும்.

நம் தேசத் தலைவர்களுக்குக் குழந்தைகள் என்றால் எத்தனை ஆசை! நேரு தம் பேரனை முதுகில் உப்பு மூட்டை தூக்குவது பார்க்கத் தமாஷாக இருக்கிறது. டாக்டர் ராதாகிருஷ்ணன் பேரன் பேத்திமாருடன் கிரிக்கெட் விளையாடுகிறார். சேனாதிபதி ஜெனரல் கரியப்பா பேரக் குழந்தைகளுடன் குத்துச் சண்டை போடுகிறார். நம் ஜனாதிபதி ராஜன்பாபு எப்போதுமே சாது. அவர் பேத்தியும் சாதுவாக மடியில் உட்கார்ந்திருக்கிறாள்.

இன்னும் சினிமா நடிக நடிகைகளைப் படங்களில் பார்த்திருப்பீர்கள். ஆனால் அவர்களுடைய குழந்தைகளைப் பார்த்திருக்கிறீர்களா? அவர்கள் யார் யாருடைய குழந்தைகள் என்பதைக் கண்டு பிடியுங்கள், பார்க்கலாம். படங்களையெல்லாம் நம் சித்திரகாரர் சங்கர் போட்டோ எடுத்துத் தந்திருக்கிறார்.

புகைப்படங்கள், ஹாஸ்யத் துணுக்குகள் எல்லாம் ஏராளமாக இருக்கின்றன. இன்றைக்கெல்லாம் ரஸிக்கலாம். படிக்கலாம். இந்த மலருக்கென எத்தனையோ அறிஞர்கள் எழுதியிருக்கிறார்கள். சித்திரகாரர்கள் ஸாமி, சங்கர், மகான், சுசி, சுப்பு, சீமா முதலியோர் இரவு பகல் படங்கள் போட்டிருக்கிறார்கள். அன்பர்கள் புகைப்படங்கள் எடுத்துத் தந்திருக்கிறார்கள். எல்லாருக்கும் நம் தீபாவளி வாழ்த்துக்கள்! நீங்கள் கூடத்தான் என்ன? கண்ணன் மலரை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தீர்கள். உங்களுக்கும் எங்கள் மனப் பூர்வமான வாழ்த்துக்கள்!

—ஆசிரியர்

418

பிச்சாண்டி

கி. சந்திரசேகரன்

சுகுமாரன் பள்ளியிலிருந்து ஓடோடியும் வீட்டுக்கு வந்தான். வாசற்படியிலிருந்தபடியே தன் அன்னையின் உருவம் உள்ளே விசுபலகையின் மேல் அமர்ந்திருப்பதைக் கண்டுகொண்டான்.

"அம்மா, அம்மா" என்று கூவினான். "ஏண்டா பிள்ளை, வரச்சையே கூப்பாடு?" என்று அவன் தாய் திடுக்கிட்டபடியே எழுந்து வந்தாள்.

"அம்மா, இன்னிக்கிப் 'பிச்சாண்டி'யாமே. சாமி ஏழரை மணிக்குள்ளேயே புறப்பட்டுடுமாம். நான் போய்ப் பாக்கப் போறேன்" என்றான் அச்சிறு பையன்.

அவன் மயிலாப்பூர் பிரம்மோற்சவத்தை இந்த வருஷந்தான் முதல் முதலில் பார்த்து வந்தான். ஒவ்வொரு நாளும் என்ன என்ன வாகனங்களில் சுவாமி புறப்பாடு என்பதைத் தெரிந்துகொள்வதும், பிறகு மாடவீதிகளில் கபாலி பவனி வரும் காட்சிகளை அன்றாடம் கவனிப்பதுமாய் மிக்க உற்சாகத்தில் திளைத்தான். மேலும் உற்சவமென்றால் எத்தனை கடைகள், எத்தனை விநோதங்கள்! ராட்டினங்களில் எத்தனை வகை! எல்லாமாய்ச் சேர்ந்துகொண்டு அவனை ஒரே சந்தோஷத்தில் ஆழ்த்தின.

ஆனால் வயசு அதிகமாகவில்லை அவனுக்கு. பத்துக்குள் தானிருக்கும். "சாமி தான் வாசல்லே வருமே! தினம் உனக்கு இந்தக் கூட்டத்திலேதான் போகணுமா? சமத்தா இங்கேயே இருந்து பாரு. சோமு, சுந்தரம் எல்லாரும் எவ்வளவு பயந்துண்டு வீட்டிலேயே இருக்கா. உனக்கு என்ன இவ்வளவு தைரியம்? யாராவது கீழே தள்ளி மிதிச்சுடுவா. அவ்வளவுதான், எனக்கு என்ன! கேட்பாரத்துக் கீழே விழுந்து கிடக்க வேண்டியதுதான்" என்றாள் அவன் தாய், அவனுடைய சந்தோஷத்தைப் பொறுக்க மாட்டாமல்.

"போம்மா! உனக்கு எப்பவும் பயந்தான். நான்தான் ஜாக்கிரதையாய்ப் போய்வரேனே! இன்னிக்கிக் கூட்டம் ஒண்ணும் இல்லவே இல்லை" என்றுதான் சுகுமாரன் மறுபடியும் ஆரம்பித்தான்.

"சரிதான், காபியைச் சாப்பிடு முதல்லே. அப்பறம் ஆகட்டும் ஊர் சவாரியெல்லாம்" என்றாள் அவன் தாய், உள்ளே சமையலறைக்குள் நுழைந்தவண்ணம்.

இலையில் தின்பண்டங்களைப் போட்டு அவனை உட்காரவைத்தாள். இதனிடையில் சுகுமாரனுக்கு ஒரு தனிக் குஷி பிறந்துவிட்டது.

"அம்மா, 'பிச்சாண்டி'ன்னா என்ன?" என்று ஆரம்பித்தான்.

"அதுவா, சாமி பரதேசியாய்க் கிளம்பிடரூர், அம்மன் மேலே கோவிச்சுண்டு. வெளிலே போய்ப் பிச்சை வாங்கறேன்னு கிளம்பரூர். அப்பறம் அம்பாளாலே பொறுக்க முடியல்லே. அவரைச் சுத்தி வந்து நமஸ்காரம் பண்ணி, தன்னேடே கோவிலுக்கு அழைச்சிண்டு போரூ. எல்லாத்தையும் அரசமரத் தடியிலே பாக்கலாம். வாண வேடிக்கையெல்லாங்கூட உண்டு!" என்ருள் அவன் தாய். அவன் தாயும் சின்னவயசில் அநுபவித்தவைகள் தாமே அவ்வளவும். வயசான பிறகு அதே விஷயங்களில் தங்கள் குழந்தைகள் ஆசை காட்டுவதைத் தடுப்பதில்தான் எல்லாப் பெரியவர்களுக்கும் ஊக்கம்!

"சாமியா அம்மா, பிச்சை எடுக்கரூர்?" என்று கேட்டான் சுகுமாரன், வாயில் வைத்திருந்த பட்சணத்தை விழுங்காமல்.

"ஆமாம்" என்ருள் தாய்.

இன்னும் சிறிது வியப்புடன் அவன், "சாமி, பிச்சை கேட்டா எல்லாரும் என்ன கொடுப்பா?" என்ருன்.

அவன் தாய் பதிலளிக்கவில்லை.

அவன் அவளைத் தொந்தரவு செய்தான். விடாமல் அவன் கேட்டவுடன் அவள், "சாயங்காலம் பாரு. கோவில் குருக்கள் ரெண்டு பேர் வருவா வீட்டுக்கு. அவா தான் வீடுவீடா ஏறி, சாமிக்குப் பதிலா காசு வாங்கிண்டு போவா. வேறென்ன பிச்சை வாங்கறது?" என்ருள் சற்று அலுப்புடன்.

சுகுமாரனுக்குப் பசி அடங்கியதும், வீட்டை விட்டுக் கிளம்பி, கோபுர வாசலுக்குப் புறப்பட்டுச் செல்ல ஆசையாய் இருந்தது. அம்மாவிடம் சொல்லிக்கொள்ளாமல் போகவும் முடியாது. பல்லைக் கடித்துக்கொண்டு மணி எழாகும் வரையில் தவித்துக்கொண்டிருந்தான். பிற்பாடு அவனல் தாங்கவில்லை.

"அம்மா, இதோ போயிட்டு வந்துடறேனே!" என்ருன்.

பாவம், அவள்தான் என்ன செய்வாள்! "போய்த் தொலை!" என்றுதான் விடை தந்தாள்.

கபாலீசுவரர் பிக்ஷாடனமூர்த்தியாய், பெரிய விமானம் ஒன்றில் சந்நிதித் தெருவில் காட்சி அளித்துக்கொண்டிருந்தார். மேலே காஷாய வஸ்திரம் கொஞ்சம் தெரிந்தாலும், திருவாபரணங்களால் விக்கிரகம் முழுவதும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுற்றியுள்ள வெளிச்சங்களின் ஜோதியில் அவை மின்னின. நர்த்தனம் செய்யும் அப்ஸரஸ்களின் பொம்மைகளும், கை கூப்பிய பக்தர்களின் மூர்த்தங்களும் பகவானுடைய பாதம் நிலைத்திருந்த பத்ம பீடத்தின் பக்கங்களில் நின்றிருந்தன. பிக்ஷாடன மூர்த்தி, அபய ஹஸ்தத்தின் மேல் சிறு வெள்ளிக் கிண்ணி ஒன்றைப் பிச்சை வாங்கும் கபாலமாய் வைத்திருந்தாரே ஒழிய, எளிமையின் சின்னங்களே அந்தப் 'பிச்சாண்டி'க் கோலத்தில் காணப்படவில்லை.

எதிரே அப்பொழுதுதான் மேலே கிளம்பி வந்துகொண்டிருந்த பௌர்ணமிச் சந்திரனுடைய தாவண்யமான ஒளி பட்டு விக்கிரகத்தின் முகம் பரவசமாக்கும் நிலையில் புன்முறுவலுடன் தோன்றியது.

சுகுமாரன் அப்படியே நின்று தன்னுடன் வந்த சிநேகிதர்களையும் மறந்து அந்தப் பிக்ஷாடனமூர்த்தியின் அழகிய கோலத்தில் ஈடுபட்



டான். அவனுடைய குழந்தையுள்ளத்தில் ஒரே அவா பொங்கி எழுந்தது. பின்னே சென்று ஒரு தடவை விக்கிரக அலங்காரத்தைக் கவனித்தான். இரண்டு நீண்ட ஜடைகள் இரு பக்கங்களிலும் தொங்கின. பரதேசிக் கோலத்துக்குவந்தவிதத்தில் வாசனையான வெட்டிவேர் திரிக்கப்பட்டு விக்கிரகத்தின் இரு பக்கங்களிலும் நீண்ட ஜடை போல் தொங்கியதைப் பார்த்து மனத்தினுள் சொல்லொணா உணர்ச்சியடைந்தான். 'என்ன அழகாக இருக்கு எல்லாம்' என்றுதான் தன் சிநேகிதர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தான்' அவர்கள் ஏனோ அவனைப்போல் அவ்வளவாக அக் கலையழகில் ஈடுபடவில்லை? அவர்கள் எதை வாங்கித் தின்னலாம் கடைகளில் என்றுதான் அவனையும் தங்கள் கூடக் கட்டி இழுத்தார்கள். பாவம்! அவனால் வைத்த கண்ணை அந்த அழகிய காட்சியிலிருந்து எடுக்கவே முடியவில்லை.

சுவாமியின் ஊர்வலம் நகர்ந்து வந்துகொண்டிருந்தது. கிழக்கு, தெற்கு மாடவீதிகளைக் கடந்து மேலண்டை மாடவீதிகளில் பிச்சாண்டியின் திருக்கோலம்

ஊர்ந்துகொண்டே வந்தது. சுகுமாரனுடைய வீடும் அந்த வீதியில்தான் உள்ளது. சுவாமி அவன் வீட்டு வாசலைக் கடப்பதற்குள் இரண்டு குருக்கள் வாசற்படியில் ஏறி அவன் தந்தையை அணுகுவதை அவன் கவனித்தான். என்ன அவர்கள் செய்யப்போகிறார்களோ என்று அறிய அவன் வேகமாய்த் தன் வீட்டினுள் அவர் முன்னால் நுழைந்தான்.

அவனுடைய தந்தை சிரித்த முகத்துடன் குருக்கள் இருவரையும் வரவேற்றுவிட்டு, ''என்ன இன்றைக்குக் கொஞ்சம் நாழியாயிட்டாப்பலேயிருக்கே, வழக்கத்தைக் காட்டிலும்'' என்றார். அவர்களும் ''புது ராஜ்யமல்லவா இப்பல்லாம். முன்னெல்லாம் நம்ம காரியமாயிருந்தது. 'டாண்'ன்னு மணி ஆறரை அடிச்சா கிளம்புவது வழக்கம். இப்பல்லாம் முடியுமா, கோவில் உத்தியோகஸ்தர்களெல்லாம் வரவாண்டாமா?'' என்று குத்தலாய் மொழிந்தார்கள். அவர்கள் கையில் ஐந்து ரூபாய் நோட்டை அவன் தந்தை வைத்தார்.

'இவ்வளவு பணக்காரச் சுவாமிக்கு இவ்வளவு கொஞ்சம்தானா கொடுப்பார்கள்?' என்றுதான் சுகுமாரனுடைய இருதயம் உள்ளுக்குள்ளே குறை கூறியது. அவனுக்குச் சுவாமியே பிச்சை கேட்கும்பொழுது நிறையக் கொடுத்தால் என்ன என்று தோன்றிக்கொண்டே இருந்தது. ஆனால் அந்த எண்ணமும் நீடித்திருக்கவில்லை. ஏனெனில், பலர் சில்லறைக் காசுகளை விமானத்திலிருந்த கிண்ணமொன்றில் போடுவதை அவனே பார்த்தான். தன் தந்தை அவர்களைக் காட்டிலும் சற்று அதிகமாகவே கொடுத்திருப்பதை எண்ணி மனச்சோர்வை விலக்கிக்கொண்டான்.

அவன் சிநேகிதர்கள் கையில் காசு வைத்திருந்தார்கள். அன்னையிடம் தனக்கும் இரண்டணா வேண்டும் என்று யாசித்தான்.

''எதையாவது வாங்கித் திங்கப் போறே! அப்பறம் வயத்தை ஏதாவது செய்யும்'' என்றபடியே அவளும் அவன் கேட்டதை அவனிடம் கொடுத்தாள். அவனுக்காகக் காத்திருக்கக்கூட இஷ்டப்படாமல் அவன் நண்பர்கள் ராட்டினம் ஒன்றில் ஏறுவதற்காகப் பறந்துவிட்டார்கள். சுகுமாரனுக்கும் அவசரம். அவர்கள் தன்னை முந்திக்கொள்ளக்கூடாது என்ற எண்ணம் மேலிட்டதால், ஒரே பாய்ச்சலில் கூட்டத்தினிடையே ஓடினான்.

ஓட்டத்தில் அவன் கீழே கந்தைத் துணியில் கிடத்தப்பட்டிருந்த சோனிக் குழந்தை ஒன்றை அதன் கால்களின் மேல் மிதித்துவிட்டான். பிச்சைக்காரர் இருவர்—தாய் தகப்பன் போலே தோன்றியது—குழந்தையின் பக்கங்களில் உட்கார்ந்துகொண்டு, ''ஐயா, ஐயா, கண்ணில்லாத கபோதிங்க நாங்க ரெண்டுபேரும்! குழந்தைக்கிப் பாலில்லே. காசு கொடுங்க ஐயா'' என்று போகிறவர்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார்கள். மிதிபட்ட சிறு குழந்தை 'வீல்' என்று கத்தியதும், கண்ணில்லாத தாய் அதனை எடுத்துக்கொண்டே, ''ஐயோ, எந்தப் பாவி குழந்தையை மிதிச்சுட்டு ஓடறான்! எங்களுக்குத்தான் கண்ணில்லாமே கிடக்கறோம். அவனுக்குக் கூடவா கண்ணில்லே?'' என்று தூற்றினாள்.

சுகுமாரனுக்குத் தான் செய்த காரியம் உடனே விளங்கியது. புருஷன் பெண்சாதியாகவே அவர்கள் அவனுக்குத் தோன்றினர்கள். இருவருக்குமா ஒரே சமயத்தில் கண் பொட்டையாகி இருக்கும் என்ற கேள்வி அவனுள்ளத்தைத் தொந்தரவு செய்தது. பாவம், அந்தச் சோனிக் குழந்தைக்குப் பால் தந்து எவ்வளவு நாளாயிற்ருே, அது தூக்கியவளின் மார்பண்டை தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு நாக்கை நீட்டி நீட்டிப் பார்த்தது. தன்னுல் குழந்தைக்கு அவ்வளவு சிரமம் ஏற்படவில்லை என்பதை அறிய ஒரு விதத்தில் மனத்தில் திருப்தி உண்டாயிற்று. என்ன தோன்றியதோ அவனுக்கு, "கிழவா, இதையும் வெச்சுக்கோ!" என்று சொல்லிக் கையில் தான் வைத்திருந்த இரண்டணுவைக் கிழவன் உள்ளங்கையில் வைத்தான். கிழவன் ஒளியிழந்த முகத்தில் அந்த அரைகுறை வெளிச்சத்திலும் ஏதோ தனிப் பிரகாசம் துலங்கியது.

"என் ராசா, சின்னப்புள்ளேயாயிருக்கே, உனக்கு எத்தனை பெரிய மனசு! நல்லா, சுகமா வாழ்வே, அப்பனே! உன் தரும புத்திக்குச் சாமிதான் உனக்குப் பதில் செய்வார். என்னுலே என்ன முடியும்? கண் ரெண்டும் பொட்டை!" என்ருன் அவன் மனத்தாங்கலுடன்.

"சாமியேதான் பிச்சே வாங்கருரே, கிழவா. அவராலே என்ன கொடுக்க முடியும்?" என்ருன் சுகுமாரன்.

கிழப் பிச்சைக்காரனும் சிரித்தான். "என் ராசா, நீ சொல்றதே வேடிக்கை! சாமிக்கி யாரு பிச்சை தருங்கோ? அவர் தர்ற பிச்சை தானே இவ்வளவும்." தீராத ஏழை

மையிலும் அவன் கடவுளை நன்றியுடன் நினைத்தான் போலும்!

சுகுமாரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. "கிழவா, இதோபாரு, சாமி கையிலே வெள்ளிக்கிண்ணம் வச்சுண்டு பிச்சை கேக்கறாரே. அது என்னவாம்?" என்றான்.

பிச்சைக்காரன் சும்மா இருந்துவிட்டு, சிறிது அவகாசம் எடுத்துக் கொண்டு, "அதுவா, குருக்கமாருங் கல்ல வாங்கிப்பாங்க. அவர்களுக்கு இருக்கறது போதல்லே. சாமியைக் காட்டி வேறே வாங்கறாங்க" என்றான். அவனுடைய குரலில் அருவருப்புக் கூடத் தூக்கி நின்றது.

சுகுமாரன் திரும்பவும், "என் கிழவா? பிச்சாண்டின்னு பின்னே அவருக்கு என் பேரு வைச்சிருக்கா?" என்று கேட்டான்.

கிழவன் முகத்தில் சிரிப்புக்கண்டது. அவன் சிந்தனையில் ஆழ்ந்தவன்போல், "ராசா, உன் குழந்தே உள்ளத்துலேதான் என்னென்ன தோணுது? அப்பனே, இதோ பாரு, சாமி கேக்கற பிச்சை வேறுதான். அவருக்கு இல்லாத பணமா? ஆனா அவருக்கு நீயும் நானும் அன்போடு அவரிட்டே இருக்கணம்னுதான் பிச்சை கேக்கறாரு."

சுகுமாரனுடைய புத்தியில் இன்னும் அவன் சொன்ன விஷயம் பதியவில்லை.

"எம்பா, உங்க ஆட்டுலே அம்மா அப்பா இருக்காங்களோன்னோ! அவங்கல்லாம் படிச்சவங்க. அவங்களே கேக்காமெ என்னெக் கேக்கறியே?" என்றான் கிழவன்.

சுகுமாரன் தான் தாயைக் கேட்டுக் கேட்டு விடை கிடைக்காமல் தவித்திருப்பவன் ஆயிற்றே! ஆகையால் அவன் 'சு' கொட்டிக் கொண்டே, "கிழவா, அன்புன்னா என்ன?" என்று ஆரம்பித்தான்.

"நீ தந்தாயே இரண்டணுக் காசு எனக்கு. அது தானப்பா அன்பு, வேறென்ன? இதைத்தான் சாமியும் உங்கிட்டேருந்து எப்பவும் கேக்கறார். அவருக்கு நீ தரப்போறது இதைவிட என்ன ஜாஸ்தியாக் கிடக்கு?"

"ஆமாம், கிழவா! உனக்குக் காசு தந்தா அவருக்கு எப்படி அது அன்பாகும்?" என்று சுகுமாரன் விடாமல் கேள்வி கேட்டான்.

"கண்ணில்லாதவங்க, பணமில்லாதவங்க, பிச்சை எடுக்கறவங்க, இவங்களுக்கெல்லாம் அன்பைக் காட்டி என்னத்தையாவது தந்தா, சாமிக்கு ரொம்பத் திருப்தி, அப்பனே! அவருக்குத்தான் பிச்சை கொடுத்திருக்கே, தெரியுதா!" என்றான் கிழவன்.

சுகுமாரனுக்குப் புதிய உணர்ச்சி எற்பட்டது. தானும் சுவாமிக்கு எதையோ கொடுத்திருப்பதைக் கிழவன் சொல்லுவதால் மனத்தில் ஒரு திருப்தி தோன்றியது.

அதனால் பிறகு அங்கே நிற்க முடியவில்லை. திரும்ப வீட்டை நோக்கி விரைந்தான். அரசமரத்தடியில் 'பிச்சாண்டி' அப்பொழுது தான் அம்பாளுடன் கிளம்பிக் கொண்டிருந்தார். தீவட்டி வெளிச்சத்தில் அந்த விக்கிரகம் பளபளவென மின்னியது. சுகுமாரன் உற்றுப் பார்த்தான். சுவாமியும் தன்னைப் பார்த்துத் திருப்தியுடன் நகைத்தமாதிரி தோன்றியது.

வீட்டை அடைந்தான். வருகையிலேயே, "அம்மா, அம்மா! உன்னைக் கேட்டேனே! சொல்ல மாட்டேன்னையே! சாமி பிச்சாண்டியாயிருப்பது எல்லா

ரிட்டேயும் அன்புப் பிச்சைக் கேக்கத்தான்'' என்றான்.

''இது தெரிஞ்சுண்டு வந்தையா! போறது'' என்றாள் அவன் தாய். ''யாருடா அப்பா, இதைச் சொன்னது?'' என்றும் வினவினாள்.

''ஒரு பொட்டைப்பிச்சைக்காரன் சொன்னான்!''

''நீ அவனுக்கு என்ன தந்தே?''

''என் கையிலே இருந்ததையெல்லாம்தான் கொடுத்துட்டேனே, அம்மா!'' என்றான் சுகுமாரன் மிக்க சந்தோஷத்துடன்.

'அட பிள்ளே, ரெண்டணாவைத் தொலச்சையா?'' என்று கோபித்தாள். அவன் தந்தையும் அங்கே வந்தார்.

''போச்சா காசு, போச்சா ராட்டினம்? இன்னமே காசு கேளு, உன்னை என்ன பண்றேன் பாரு'' என்று சினங்கொண்டு அவனைக் கடிந்துகொண்டார்.

''என்ன போச்சு எனக்கு? சாமிக்கித்தான் தந்தேன். எனக்கு எல்லாந்தான் கிடைக்கும்னானே அந்தப் பிச்சைக்காரன். உங்களாட்டமா தூக்கம் வருமே இருக்க மாட்டேனே நான். நன்னாத் தூங்கப்போறேன் போ!''

இதைச் சொன்னவன் அப்படியே சாப்பிடாமல் உறங்கிவிட்டான் படுக்கையில்.

இன்பக் கனவுகள் கண்டானா? நினைவுகளே இன்பமாய் இருக்கையில் கனவுகள் காண்பானேன் அச் சிறு பையன்?

•

வீட்டுப் பரீட்சை

போட்டோ: என். ராமகிருஷ்ணா

அரசகுமாரன் சோதனை

கி. வா. ஜகந்நாதன்

ஓர் அரசகுமாரன் தனக்கு ஏற்ற மனைவியைத் தானே தேடிக் கொள்ள எண்ணினான். அழகும் அறிவும் பொறுமையும் உடைய பெண் ஒருத்தியைத் தேர்ந்தெடுக்க விரும்பினான். அதற்காக அவன் சாமான்ய மனிதனைப்போல ஆடை அணிந்து தன் தலைநகரை விட்டுப் புறப்பட்டான்.

பல இடங்களுக்குப் போய்க் கடைசியில் ஒரு சிறிய ஊர் வழியே நடந்துகொண் டிருந்தான். அப்போது ஒரு பெண் தன் தலையின்மேல் ஒரு சட்டியில், வயலில் வேலை செய்யும் தன் தந்தைக்குக் கஞ்சி எடுத்துக்கொண்டு போனாள். அவள் இயற்கையாகவே நல்ல அழகும் பலமும் உடையவளாக இருந்தாள். 'இவள் அழகுள்ளவளாக இருக்கிறாள். இவளை யாரென்று விசாரிக்கலாம்' என்று எண்ணிய அரச குமாரன் அவளைப் பார்த்து, "ஏ, பெண்ணே, உன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

அந்தப் பெண், "வெண்ணெய்" என்றாள்.

"நவநீதமா?" என்று ராஜகுமாரன் கேட்டான்.

"இல்லை; சாதாரண வெண்ணெய் அல்ல; மண்ணால் பண்ணாத சட்டியிலே மரத்தால் பண்ணாத மத்தாலே மட்டை நாரால் பண்ணாத கயிற்றாலே கடைந்தெடுத்தது. அந்த வெண்ணெய் இங்கே முன்பும் இல்லை; இன்றும் இல்லை. நாளைக்கும் இராது."

தேவலோகத்தில் பாற்கடலில் மேரு மலையை மத்தாகக் கொண்டு வாசுகியைக் கயிறாக வைத்துக் கடைந்த அமுதத்தை அவள் குறிக்கிறாள் என்று ஊகித்துக் கொண்டான் ராஜகுமாரன்.

"அமுதவல்லியா?" என்று கேட்டான்.

"ஆம்" என்றாள் அந்தப் பெண்.

"யாருக்குக் கஞ்சி கொண்டு போகிறாய்?"

"என் முதல் தெய்வத்துக்கு."

"உன் தகப்பனாருக்கா?"

"ஆம்."

"அவர் என்ன செய்கிறார்?"

"ஒன்றை இரண்டாக்குகிறார்?"

"மண் கட்டியை உடைத்து உழுகிறாரோ?"

"ஆம்."

"எந்த இடத்தில் உழுகிறார்?"

"போனால் வராத புன்செய்க்கு அடுத்த நன்செய்யிலே."

"ஓஹோ! சுடுகாட்டுக்கு அடுத்த நிலத்திலா!"

"ஆம் ஐயா" என்று மரியாதையுடன் விடையளித்தாள் அவள்.

"கொஞ்சம் கஞ்சி சாப்பிடுகிறீர்களா?" என்றும் கேட்டாள்.

"சரி" என்று ஒப்புக்கொண்டான். கஞ்சிச் சட்டியின்மேல் மூடியிருந்த கலயத்தை எடுத்தாள். அதில் அப்படியே கஞ்சியை ஊற்றுகிறாளா என்று கவனித்தான் ராஜகுமாரன். அதை முதலில் கழுவி விட்டுப் பிறகு அதில் கஞ்சியை ஊற்றிக் கொடுத்தாள். ராஜகுமாரனுக்குச் சந்தோஷம் உண்டாகிவிட்டது. 'இந்தப் பெண் நமக்கு மனைவியாக வாய்த்தால் மிகவும் நன்றாக இருக்கும்' என்ற ஆசை அவனுக்கு அப்போது உண்டாயிற்று.

"உன் வீடு எங்கே இருக்கிறது?" என்று கேட்டான்.

"பாலுக்கும் நூலுக்கும் நடுவிலே, சுட்ட கூரையும் சுடாத மதிலும் உள்ள வீடு எங்கள் வீடு" என்றாள் அவள்.

'பால்காரன் வீட்டுக்கும் தறிகாரன் வீட்டுக்கும் நடுவில், ஓட்டு வில்லை வேய்ந்த வீடு இவள் வீடு. அதைச் சுற்றிச் செடி நிறைந்த வேலி இருக்கும்'' என்று உணர்ந்து கொண்டான் இளவரசன்.

அவன் உடனே அவள் வீட்டுக்குப் போய் அவளுடைய தாயோடு பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தான். அவள் வீட்டில் பெண் கொள்ள வேண்டுமென்று வந்திருப்பதாகவும், தான் மிகவும் பணக்காரனென்றும் சொன்னான்.

அப்போது வயலுக்குக் கஞ்சி கொண்டுபோன அமுதவல்லி வந்துவிட்டாள்.

"மாமி, மாமி, உங்கள் பெண்ணை இன்று சமையல் செய்யச் சொல்லுங்கள். நான் பணம் தருகிறேன். வேண்டியதை வாங்கி, வேண்டியபடி செய்யச் சொல்லுங்கள். ஒரு பிள்ளைக்காரியைக் கறி பண்ணி, பாவாடைக்காரியைக் குழம்பு பண்ணி, பாண்டியன் தேவியை ரஸம் பண்ணி எனக்கு விருந்திட வேண்டும்'' என்றான்.

அமுதவல்லி, "அப்படியே செய்கிறேன்'' என்று சொல்லி வேண்டிய காய்கறிகளைத் தன் தாயைக்கொண்டு வாங்கி வரச் சொன்னாள். சமையல் செய்து உணவு பரிமாறினாள்.

ஒரு தாறு மாத்திரம் போடும் வாழையின் காயைக் கறி பண்ணி



தந்தை: நம்ம பையன் நாளுக்கு நாள் உயரத்திலே மட்டும் (புத்தியில் அல்ல) வளர்ந்து வருகிறான் என்று தெரிகிறது!

யிருந்தாள். கத்திரிக்காயைக் குழம்பு பண்ணினாள். பாண்டியனுக்கு மாலையிடும் வேப்பம் பூவால் ரஸம் பண்ணியிருந்தாள்.

அரசகுமாரன் சாப்பிடும்போது ரஸத்தை அவள்மீது துப்பினான். அவள் கோபம் கொள்ளாமல் பரிமாறினாள். சோற்றை வாரி இறைத்தான். அவள் அப்போதும் கோபம் கொள்ளவில்லை. அவள் பொறுமைசாலி என்பதை அப்போது உணர்ந்துகொண்டான்.

"நான் போய் வருகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டுச் சென்றான். பிறகு சில உறவினர்களுடன் வந்து அமுதவல்லியைக் கல்யாணம் செய்துகொண்டான். அப்போதும் தான் ராஜகுமாரன் என்று அவன் சொல்லவில்லை. திருமணம் முடிந்தவுடன் அவளை அங்கேயே விட்டுவிட்டுப்போனான்.

ஒரு நாள் நாலைந்து சேவகர்களை அமுதவல்லியிடம் அனுப்பி, "இந்த நாட்டு ராஜகுமாரன் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறான்" என்று சொல்லச் சொன்னான். அவள், "நான் முன்பே கல்யாணம் ஆனவள்" என்றாள்.

"ஆனாலும் குற்றம் இல்லை; உன் அழகைக் கண்டு அவர் ஆசைப்படுகிறார். ஆடை ஆபரணம் எல்லாம் நிறையத் தருவார்" என்றார்கள்.

அவள் முதலில் சாந்தமாக மறுத்தாள். வரவர அவர்கள் அதிக ஆசை காட்டினார்கள். அவள் புலி போலச் சிறி விழுந்தாள். கடைசியில் சேவகர்கள் அவளைக் கயிற்றால் கட்டிக்கொண்டு போனார்கள்.

ராஜகுமாரன் மாணிக்கக் கிரீடமும் பொன்னாடையும் புனைந்து சிங்காதனத்தில் வீற்றிருந்தான். எங்கும் ஒரே பிரகாசமாக இருந்தது. அவனுக்கு முன்னே அமுத

வல்லியைக் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அவள் அவன் முகத்தை எறெடுத்தும் பார்க்கவில்லை. சிங்காதனத்தையும் அவன் அரசக் கோலத்தையும் கண்டாள். அவன் முகத்தை உற்றுக் கவனித்திருந்தால் அவனே தன் கணவன் என்று உணர்ந்திருப்பாள். ஆனால் கவனிக்கவில்லை. உத்தமி அல்லவா?

அவள் சற்றே புன்னகை பூத்தாள்; பிறகு அழுதாள்.

அரசகுமாரன், "இதென்ன? வெயிலும் மழையும் தொடர்ந்தாற்போல் வருகின்றனவே!" என்று தன் குரலை மாற்றிக் கொண்டு கேட்டான்.

அமுதவல்லி, "ஆம்; உம்முடைய ராஜவைபோகத்தைக் கண்டு, நீர் முற்பிறப்பில் புண்ணியம் செய்தவர் என்று எண்ணிச் சிறிதே நகைத்தேன். ஆனால் இப்பிறப்பில் மற்றொருவன் மனைவியை விரும்பும் பாவத்தினால் அடுத்த பிறவியில் என்ன ஆவீரோ என்று அஞ்சி அழுதேன்" என்றாள்.

"கயிற்றை அவிழுங்கள்" என்று அரசகுமாரன் தன் இயற்



கையான குரலில் சேவகர்களுக்கு உத்தரவிட்டான். அமுதவல்லி நிமிர்ந்து பார்த்தாள்.

“என்ன பார்க்கிறாய்? உன்னைப் பல வகையிலும் சோதித்த உன் புருஷன்தான் நான்” என்றான் அரசகுமாரன்.

அமுதவல்லி அவன் முன் சென்று அவன் திருவடிகளை வணங்கினாள்.

எப்படிப் பாடறது?



போட்டோ: சர்தாமியான்

பந்தயப் பித்தன்

தி. ஜ. ர.

குட்டி ராஜா, குட்டி ராஜா என்று ஒரு பையன் இருந்தான். அவனுக்கு எப்போது பார்த்தாலும் பந்தயம் போடுவதில் ரொம்ப ஆசை. வீட்டிலே விளையாடினாலும் சரி, வெளியிலே விளையாடினாலும் சரி; பந்தயம்தான்.

காலணா, அரையணா வாங்கித் தின்ன, அம்மா, அப்பா யாராவது கொடுப்பார்கள். அதை வெளியே போய் யாரிடமாவது பந்தயம் வைத்துத் தோற்று விடுவான். தோற்பதுதான் அதிகம். சில சமயம் அவன் கெலிப்பது உண்டு. அப்படிக் கெலித்தும் பிரயோஜனமில்லை. கெலித்ததை மறுபடியும் தோற்கிற வரைக்கும் விடமாட்டான். திரும்பத் திரும்பப் பந்தயம் வைப்பான். தோற்பான். வெறுங் கையை வீசிக் கொண்டு வீடு வந்து சேர்வான்.

வீட்டிலே ஏதாவது ஏறுபடி வரும். பட்சணம் பலகாரம் பண்ணுவார்கள். ஒரு தோசையாக இருந்தாலும் சரிதான். அடுப்பிலே அம்மா வார்க்கும்போதே, கூடத்திலே பந்தயம் ஆரம்பித்து விடும். அண்ணன், அக்காள், அப்பா எல்லாரையும் குட்டி ராஜா பந்தயத்துக்கு அழைப்பான். "மோனுப் பலி ஆடுவோமா? கேரம் ஆடுவோமா? சட்டம் ஆடுவோமா?—தோசையைப் பந்தயம் வைக்கலாம்" என்பான்.

ஆளுக்கு ஒரு தோசை (முறுக்கு, தேன்குழல் அல்லது லட்டு, எது வீட்டிலே தயாராகிறதோ, அது) பந்தயம் வைக்கலாம் என்று சொல்லுவான்.

இந்தமாதிரி பந்தய ஸமயத்தில், யாரும் அவனோடு கேரம் ஆட இசையமாட்டார்கள். ஆடினால் அவன்தான் ஜயிப்பான். கேரப் புலி அவன். மோனுப்பலி, சட்டம் எதுவாவது ஆட இசைவார்கள். மற்றவர் தோற்றால், "தோசை போச்சே!" என்று வருத்தப்படுவார்கள். அவனோ "ஆசையான தோசை போச்சு!—அம்மா கொடுத்த காசு போச்சு!" என்று பாடிக்கொண்டே போய்விடுவான்.

"அடே! இந்தப் பந்தயப் பித்து வேண்டாமடா! தின்பண்டத்தை யெல்லாம் யாராவது பந்தயம் வைப்பார்களா?" என்றால் அவன் கேட்பதில்லை.

குட்டி ராஜா பம்பரம் விடுவதில் ரொம்ப ஆசை உள்ளவன். ஆனால், ஒரே ஒரு பம்பரத்தை மட்டும் அவன் பந்தயம் வைப்பதேயில்லை. அதன் மீது அவனுக்கு அபாரமான பிரியம். கையில் அடங்காத பெரிய பம்பரம்; அழகான கொண்டை; நேர்த்தியான வடிவு. அதைச் சுழற்றி விட்டானானால், ஐந்து நிமிஷ நேரம் சுற்றும். யோகிமார்களைப் போலத் தூங்காமல் தூங்கும். அதன் வர்ணப் பட்டை

கள் பளபள என்றிருக்கும். "ஓய்யாரக் கொண்டைக்காரி—ஓயாமல் சுற்றுவாளே!" என்று ஒரு பாட்டுப் பாடிக்கொண்டே அதை அவன் சுழலவிடுவான்.

இந்தப் பம்பரத்தைப் பற்றி ஒரு நாள் குட்டி ராஜாவுக்கும் அவன் சிநேகிதன் சுட்டிச் சுந்தரத்துக்கும் தர்க்கம் வந்துவிட்டது.

"இதைப்போல எந்தப் பம்பரமுமே சுற்றாது" என்றான் குட்டி ராஜா.

"என்ன பந்தயம்?" என்றான் சுட்டிச் சுந்தரம். இந்தப் பம்பரத்தை எப்படியாவது பிடுங்கிவிட வேண்டும் என்று வெகு நாளாய் அவன் கண் வைத்திருந்தான். அவன் மற்ற விளையாட்டுகளில் மட்டம்; பம்பரம் விடுவதில் மாத்திரம் நிபுணன்.

"பந்தயத்துக்கு நான் தயார். என்ன விளையாட்டு ஆடுவது?" என்று கேட்டான் குட்டி ராஜா.

"பம்பரப் பந்தயத்தில் பம்பரம் தான் விடவேண்டும்" என்றான் சுட்டிச் சுந்தரம்.

"என்ன பந்தயம் வைப்பது?"

"பம்பரத்தையே தான்!"

"பம்பரத்தையா? இந்தப் பம்பரத்தையேயா?" என்று குட்டி ராஜா திகிலுடன் கேட்டான்.

"அதில் என்ன சந்தேகம்? இதையே தான் நீ வைக்க வேண்டும். நீ தோற்றால், இதை எனக்குக் கொடுத்துவிடவேண்டும். நான் தோற்றால் இதேபோல் ஒரு பம்பரம் உனக்கு நான் வாங்கிக் கொடுக்கிறேன்" என்றான் சுட்டிச் சுந்தரம்.

"உம்" என்று தயங்கினான் குட்டி ராஜா.

"அட போடா, பயந்தாங்கொள்ளி!" என்று எச்சுக் காட்டினான் சுட்டிச் சுந்தரம்.

குட்டி ராஜாவுக்கு அவமானம் தாங்கவில்லை. சுட்டிச் சுந்தரத்தின் கையில் அப்போது எந்தப் பம்பரமும் இல்லை; கயிறு கூட இல்லை. அந்த நிமிஷத்திலேயே பந்தயத்துக்கு அழைத்தால், அவன் என்ன செய்வான்? அவனால் போட்டியிட முடியாது - இப்படியெல்லாம் எண்ணினான்.

"நானு பயந்தாங்கொள்ளி! பந்தயத்துக்குத் தயார். இப்போதே இங்கேயே பம்பரம் விடுவோம். ஐந்து நிமிஷம் போனால், நான் மாட்டேன்" என்றான்.

"அவ்வளவுதானே, இதோ பம்பரம் தயார் செய்கிறேன்" என்று சுட்டிச் சுந்தரம் குடுகுடு என்று ஓடினான். தெருவிலே கிடந்த ஒரு செங்கல்லை எடுத்தான். அதை உடைத்து பணியாரக் கும்பம் மாதிரி தேய்த்தான். கிழிசலான மேல் வேஷ்டியில் கரை ஓரத்தைக் கிழித்தான். கயிறுபோல முறுக்கி, கும்பத்தில் பரபர என்று சுற்றினான். கம்பீரமாகக் கையிலே பிடித்தான்.

"வா, விடலாம். என் பம்பரத்துக்கும் உன் பம்பரத்துக்கும் போட்டி. எது அதிக நேரம் சுற்றுகிறது, பார்க்கலாம்" என்றான்.

"என்ன இது! செங்கல் துண்டுக்கும் என் அருமையான பம்பரத்துக்குமா போட்டி?"

"என் பம்பரம் எதுவானால் உனக்கு என்ன? நான் தோற்றால் உன் பம்பரம் மாதிரியே ஒன்று எந்த டில்லிக்குப் போயாவது வாங்கி வந்து தருகிறேன்" என்றான் சுட்டிச் சுந்தரம்.

இனித் தப்ப வழியில்லை. இரண்டு பேரும் பம்பரத்தை எடுத்துக் கொண்டு கட்டாந்தரையான ஓர் இடத்துக்குப் போனார்கள்.

"ரெடி" என்றார்கள். 'விறுக்' என்று குத்து விட்டார்கள். 'பும்' என்று குட்டி ராஜாவின் பம்பரம் சுழன்றது. சுட்டிச் சுந்தரத்தின் செங்கல்லும் சும்மா இல்லை, அதுவும் சுற்றியது. சுற்றியது மாத்திரமா? அது என்ன மாயமோ? குட்டி ராஜாவின் பம்பரத்துக்கு அருகே வந்தது. அதை முட்டியது. ஆட்டம் எடுத்து அதை விழச் செய்தது.

சுட்டிச் சுந்தரம் கெக்கலி கொட்டினான். செங்கற் கும்பத்தை எறிந்துவிட்டு, குட்டி ராஜாவின் பம்பரத்தை எடுத்துக் கொண்டான். 'தாங்க் யூ, ஸார்" என்றான். போய்விட்டான்.

குட்டி ராஜா ஒரு நிமிஷம் அப்படியே பிரமித்து நின்றான். பிறகு அந்த வேலியருகே சென்றான். அந்தச் செங்கல் கும்பத்தைக் கையில் எடுத்தான்; முத்தமிட்டான். "நீயே எனக்குப் புத்தி கற்பித்தாய். இனி என்னோடு நீ என்றும் இரு" என்று ஜோபியிலே போட்டுக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

இதற்கப்புறம் எந்தப் பந்தயத்துக்கும் குட்டி ராஜா யாரையும் அழைப்பதில்லை.



கண்ணன் பாட்டு

கண்ணன் பக்தி சேர்ந்திடில்
கவலை யாவும் தீர்ந்திடும்.
மண்ணை வாரித் தின்றவன்
மலையைத் தூக்கி நின்றவன் (க)

வீட்டில் இருக்கும் வெண்ணெயை
வெளியில் தானம் பண்ணுவான்.
நாட்டின் இளைஞர் யாவரும்
நன்மை கொள்ளக் கூவுவான். (க)

ஆணைப் போன்ற தீரமும்
பெண்ணைப் போன்ற ஈரமும்
வேணு கான இன்பனும்
வெறிகொ டுக்கும் அன்பனும். (க)

பெண்ணைக் காணில் ஓடுவான்;
பிறரைக் காணில் வாடுவான்.
எண்ணம் மிக்க தீயதோ
என்னத் தக்க தூயவன். (க)

எண்ணி றந்த கோபிகள்
இவனு டன்சல் லாபிகள்;
பெண்ணின் காமம் அல்லவே
பிள்ளை பெற்ற தில்லையே. (க)

ஆஸ்தான கவிஞர்

நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை

தூய அன்புக் காதலைத்
துலங்க வைக்கும் ஜோதியன்
நேய மாகும் கண்ணனை
நிந்தை நீக்கி எண்ணுவோம். (க)

என்றும் எங்கும் பாலனாய்
இன்பக் கேலி லோலனாய்க்
கன்று காலி மேய்ப்பதில்
களித்து லோகம் காப்பவன். (க)

புலனை வெல்லும் கீதையைப்
புகலும் கண்ணன் மேதையை
நலனி லாத காமியாய்
நாம்நி னைத்தல் தீமையாம். (க)

ஆண்மை என்ற கண்ணனும்
அன்புப் பெண்மை எண்ணமும்
மாண்பில் சேர்ந்த வேலையே
வாழி கண்ணன் லீலையாம். (க)

மண்ணுள் மக்கள் அன்பெனும்
மதிய டைந்தே இன்புற
கண்ணன் நாமம் வாழ்கவே
காதல் அன்பு வாழ்கவே

யானை ராஜா

'ராஜி'

யானை ராஜா சிம்மாஸனத்தில் உட்கார்ந்திருந்தது. அதற்கு எதிரில் சேனாதிபதி நரி நின்றது. அப்பொழுது ஒரு முதலை ஒரு யானை வெடியை வாயில் கௌவிக்கொண்டு யானை ராஜாவின் முன் வைத்தது. "அரசே, பட்டணத்தில் உங்கள் பெயர் வைத்து இந்த வெடியை யானை வெடி என்று அழைக்கிறார்கள். இதைக் கொளுத்தினால் பெரிய சப்தத்துடன் வெடிக்குமாம். அந்தச் சந்தோஷ சமாசாரத்தைத் தெரிவிக்கவே ஓடோடியும் வந்தேன்" என்றது.

"அப்படியா, என் பெயரை வைத்து வெடியா? எங்கே, என் குழந்தையைக் கூப்பிட்டு நம் எதிரில் கொளுத்தச் சொல்லும்" என்று நரியாருக்கு உத்தரவிட்டது. அடுத்த நிமிஷம் குதித்துக்கொண்டு யானைக்குட்டி ஓர் ஊதுவத்தியுடன் வந்தது. ஆவலுடன் யானை வெடியிலுள்ள திரியைக் கொளுத்திற்று. அரைமணி ஆகியும் வெடி கொளுத்திக் கொள்ளவில்லை. "வெடிக்காத வெடிக்கு வேணுமென்றே என் பெயர் வைத்து, அவமானப் படுத்தியிருக்கிறது இந்த முதலை. இதை என்ன செய்கிறேன் பார்!" என்று யானை கோபத்துடன் கத்திற்று. உடனே நரி, அவசரப்படாதீர்கள். வெடி என்னவோ நல்ல வெடிதான். முதலை ஆற்றின் வழியாக வந்திருப்பதால்



யிவடி நனைந்திருக்கிறது!'' என்றது.

''நரியாரே, உம்மிடமுள்ள கத்தியினுல் என் எதிரில் இந்த முதலையின் தலையை உடனே வெட்டுங்கள்! முன்னே எங்கள் கஜேந்திரனை இந்த முதலையின் குடும்பத்தார்தான் கொல்ல யத்தனித்தார்கள். இந்த முதலைகளின்மீது எனக்கு நம்பிக்கை இல்லை'' என்று அவசரப்பட்டது யானை ராஜா. நரி ஒன்றும் புரியாமல் தன் தோள்பட்டையில் செருகியிருந்த கத்தியை எடுக்கப்போனது. அப்பொழுது அதற்குத் தூக்கிவாரிப் போட்டது. நரிக் குட்டி விளையாடுவதற்கு வைத்திருந்த மரக்கத்தியைக் கொண்டு வந்திருப்பது இப்பொழுதுதான் அதற்குத் தெரிந்தது.

''இது தெரிந்தால் யானைக்குக் கோபம் அல்லவா வரும்?''



என்று பயந்து யோசித்தது. 'ஒரு சூழ்ச்சி செய்து முதலையையும் தப்புவித்து நானும் தப்பித்துக் கொள்ளலாம்' என்று முடிவு செய்தது. உடனே, ''ஏ பகவானே, ஒரு தப்பும் செய்யாத இந்த முதலையை என் அன்

பான அரசன் கொல்லச் சொல்லுகிறாரே. நான் யானைமீது உண்மையான அன்பு கொண்டிருந்தால் முதலையைக் கொல்ல முடியாதபடி இந்தக் கத்தி மரக் கத்தியாக மாறட்டும்!'' என்று சொல்லிக் கொண்டே உறையிலிருந்து கத்தியை எடுத்தது. 'இதென்ன ஆச்சரியம், கத்தி மரக்கத்தியாக மாறிவிட்டதே' என்று யானை பிரமித்தது.

ஆனாலும் யானைக்குக் கோபம் தெளியவில்லை. ''நரியாரே, என்ன இருந்தாலும் நான் உத்தரவு இட்டபடி நீர் முதலையைக் கொல்லவில்லை. ஆனதால் இப்பொழுதே வேலையை ராஜீநாமாச் செய்துவிடும்'' என்றது. இரும்புக் கத்தி மரக்கத்தியாக மாறின செய்தி காட்டுத் தீ போல் காட்டில் பரவிற்று.

நரி ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருக்கும்பொழுது, 'மரக் கத்தி சாமியாருக்கு ஜே!' என்று காட்டு மிருகங்கள் எல்லாம், க்யூ வரிசையாக நரிச் சாமியாரிடம் விபூதி கேட்க ஆரம்பித்தன. நரி வேறு வழியில்லாமல் கழுத்தில் ருத்திராக்ஷத்தையும் நெற்றியில் விபூதியையும் கையில் கமண்டலத்தையும் அணிந்துகொண்டு தினந்தோறும் மிருகங்களுக்கு விபூதி கொடுத்து வந்தது. நாளுக்கு நாள் கூட்டத்தைச் சமாளிக்க முடியவில்லை. காட்டு நரிகளெல்லாம் நரிச்சாமியாரை ஏகமனதாக அவைகளின் தலைவனாகத் தேர்ந்தெடுத்தன.

நரியின் எதிரியான ஒரு கரடி யானை ராஜாவிடம் சென்று, ''யானையாரே, உங்களிடம் சேனாதிபதியாக இருந்த நரி இரும்புக்

கத்தியை மரக் கத்தியாக ஒன்றும் மாற்றவில்லை. அது நரிக்குட்டியின் விளையாட்டுக் கத்தி!'' என்று உண்மையை உடைத்துவிட்டது. அந்தமரக்கத்தியைக்கொண்டுவரச் சொல்லி யானை பார்த்தது. அதில் நரிக்குட்டியின் பெயர் இருக்கவே யானை ராஜாவுக்குக் கோபம் வந்தது. ''காட்டை ஏமாற்றும் நரிப் பயலைப் பிடித்து வாருங்கள்!'' என்று உத்தரவிட்டது.

மறுநாள் காலையில் யானை ராஜாவின் முன்னிலையில் சுமார் நாலாயிரம் நரிகள் எல்லாம் சாமியார் வேஷத்தில் வந்து நின்றன. யானை ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அந்தக் கூட்டத்தில் எது உண்மையான சாமியார் நரி என்று கண்டுபிடிக்க முடியவில்லை. ''யார் உண்மையான சாமியார் நரி?'' என்று யானை ராஜா கேட்க, ''நான்தான்'' என்று ஒரே சமயத்தில் நாலாயிரம் நரிகளும் கத்த ஆரம்பித்தன. யானைக்குக் கோபம் வந்தது. ''ஏ,

சேவகர்காள், எல்லா நரிகளையும் கொண்டுபோய், சிரச்சேதம் செய்யுங்கள்'' என்று உத்தரவிட்டது.

உடனே பக்கத்தில் உட்கார்ந்த யானையாரின் மனைவி திடீரென்று மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தது. தன் மனைவிக்கு ஆபத்து என்றவுடன் பழைய சமாசாரங்களை எல்லாம் மறந்து, ''எ, சாமியார்களே, என் நிற்கிறீர்கள்? மனைவியின் மூர்ச்சையைத் தெளிவியுங்கள்!'' என்று கத்தியது. ஒரு நரிச் சாமியாராவது முன் வரவில்லை. ஆனால் உண்மையான சாமியார் நரி மாத்திரம் ஓடோடி வந்து ஒரு பெரிய கரும்புத் துண்டத்தை யானை மனைவியின் வாயில் வைக்கவே யானையின் மனைவி திடீரென்று எழுந்து அந்தக் கரும்புத் துண்டத்தை ஆசையுடன் தின்றது. பிறகு தன் கணவனை நோக்கி, ''நான் உண்மையாக மூர்ச்சை அடையவில்லை. உங்களுடைய அவசரப் புத்தியினால் இந்த நாலாயிர நரிகளும் உண்மையாகப் பாடுபட்டு வந்த நம் நரியும் கொல்லப்பட்டு விடுவார்களே என்று பயந்துதான் இந்தச் சூழ்ச்சி செய்தேன். எனக்குக் கரும்பு என்றால் உயிர்போல். இவ்வளவு நரிகள் நம் முன்னால் இருந்தும் நம்முடைய பிரியத்தை உண்மையாக அறிந்துகொள்ளும் சக்தி நம் சேனாதிபதி நரிக்குத் தான் உண்டு என்பது எனக்குத் தெரியும். அதை நிரூபிக்கவே இப்படிச் செய்தேன்!'' என்று சொல்லவே, யானை சந்தோஷமடைந்தது. அன்று முதல் நரியை மிகவும் பிரியமாகத் தன்னிடம் வைத்துக்கொண்டது.





கதையைக்

கொத்தமங்கலம்

கதையைக் கேளு, பாப்பா — கதையைக் கேளு, பாப்பா!
கன்னம் குழியச் சிரிச்சுக்கிட்டுக்—கதையைக் கேளு, பாப்பா!
காந்தி மகான் குழந்தையாக இருந்த நாளிலே — தங்கக்
காப்பை வெட்டித் திருடிக்கிட்டுக் கடைக்குப் போனாராம்.
பூந்தி லட்டு மிட்டாயெல்லாம் வாங்கித் தின்னாராம்.
பொழுது போயி நேரங்கழிச்சு வீடு வந்தாராம்.
'பசிக்க வில்லை' என்றுசொல்லிப் படுக்கப் போனாராம்.
பாய் கிளம்பி முள்ளாக்குத்தித் தூக்கம் வரல்லியாம்.
திருட்டுக் காசு தின்னபண்டம் ஜீரணம் ஆச்சாம்.
செஞ்ச தப்பு மனசைப்போட்டு வறுத்து எடுத்திச்சாம்.
'அம்மா, அப்பா!' தூக்கம்வரலை என்று அழுதாராம்.



கேளு, பாப்பா!

சுப்பு

'ஐயை யோநான் பொய்யன்!' என்றே நின்றழு தாராம்.
தகப்ப னாரு காலடியில் தான்பணிந் தாராம்.
தண்ட னிட்டே, 'தண்டியுங்கள்' என்றழு தாராம்!
பெத்த பிள்ளை குத்தத்தையே தந்தை பாத்துட்டு,
முத்து முத்தாய்க் கண்ணீர்விட்டு முணங்கிக் கிட்டாராம்.
அடிக்க வில்லை வையவில்லை, அன்பு உருகியே
அழுவுறதைப் பாத்துக் காந்தி தொழுது நின்றாராம்.
தந்தை மகனும் சிந்தைகலந்து அழுத வேளையில்
தங்கக் காப்புத் திருட்டுக்குற்றம் கரைஞ்சு போனதாம்.
எந்த நாளும் சத்தியமாய் இருந்து வாழவே
இந்தச் சேதி காந்திக்குத்தான் துணையிருந்த தாம்!



புஸ்வாணம்

'சுகி'



சைனாவிலிருந்து தமக்கு வந்த தீபாவளிப் பரிசை வாங்கினார் முத்துவின் தந்தை ராமசாமி. அவருக்கும் நான்கிங் நகர வாங்குசூவாங்குக்கும் வியாபாரத் தொடர்பு உண்டு. தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டுத் தினுசு தினுசான வெடிகளும், புதிய ரக மத்தாப்புகளும் வந்திருந்தன.

முத்துவுக்கு அடக்க முடியாத பெருமை. சீனாவிலிருந்து தங்கள் வீட்டுக்கு வெடித் தினுசுகள் வந்ததில் மட்டற்ற மகிழ்ச்சி. அந்தத் தெருப் பையன்கள் எல்லோரும் சீனத்து வெடிகளைக் காண ஆவலாக இருந்தார்கள்.

தகப்பனாருக்கு வந்திருந்த கடிதத்திலிருந்து வெடி - மத்தாப்பு வகைகளை அறிந்து கொண்டான் முத்து.

வாங்கிசூவாங்: விளையாட்டுத் துப்பாக்கியிலே வைத்து வெடித்தால் கிடுகிடுவென ஊரே அலறும் பொட்டு வெடி.

ழயோழஸாவோ: சுருள் சுருளாகப் பொறிக்கும். நீர்யானை போல் சிரிக்கும் அதிர்வெடி.

தச்சுச்சூஊ: நீல நிறத்திலே எரியும்போது சூரிய வட்டம் போன்று பல்டி அடிக்கும்.

கோரியா பாம்: அரைமணி நேரம் எங்கும் இருளைப் பரவவிடும் அணுக்குண்டு. காதுக்குள் பஞ்சை அடைத்துக்கொண்டு வெடிக்க வேண்டும்.

இவை தவிர, நையாச்சிநாங், லூஸாங்தியோதியாங் என்ற வாயில் நுழையாத பெயருள்ள வெடித் தினுசுகள் இருந்தன.

தீபாவளிக்கு முதல் நாள் இரவு சீனத்து வெடிகள் கொளுத்தப் போகும் செய்தி பரவி நிறையப் பையன்கள் வந்துவிட்டார்கள். முத்துவின் தகப்பனார், பத்திரமாகப் பூட்டி வைத்திருந்த பீரோவைத் திறந்தார். என்ன ஆச்சரியம்!

பட்டாசுகள் மூட்டையைக் காணவில்லை. ஆவலோடு இருந்த முத்துவின் மனம் இடிந்தது. அவ

னைச் சுற்றி நின்ற பயல்கள் கூக் குரல் போட்டார்கள்.

தூச்கூச்தூஊஊஊ!
ழயோழஸாவோங்!
கோரியா பாம்!
வாங்கிசூவாங்!

ஒரே கூச்சல். முத்து தலை குனிந்தான். சீனத்து வாணம், 'புஸ்வாணம்' ஆகவே, "போய், போய்! அத்தனையும் கப்ஸாங். கயிறுடோய்!" என்று கோஷமிட்டு வெளியேறினார்கள் பையன்கள்.

"டேய் பயலே, எங்கே வெடிக் கட்டு?" என்று யானைவெடி மாதிரி சீறினார் ராமசாமி.

"தெரியாது, அப்பா!"

"உள்ளதைச் சொல், திருடா!"

"நான் எடுக்கவில்லை, அப்பா!" முத்துவுக்கு அழுகை அழுகையாக வந்தது. வருத்தம் தாங்காமல், தோட்டத்தை அடைந்தான். தேம்பியழுததனால் அவன் கண்கள் வீங்கிவிட்டன. பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் குரோட்டன்ஸ் செடிக்கு அப்பால் பேச்சுக் குரல் கேட்டது:

"மச்சான், உள்ளே நாலஞ்சு பாம்பு படமெடுத்து நிற்குது!" என்று வள்ளி கத்தினாள். வேலைக்கார முருகன் மனைவியின் வார்த்தையைக் கேட்டு ஓடிப் போய்ப் பார்த்தான்.

இரண்டு நிமிஷத்தில் திரும்பி வந்த முருகன், "ஐயையோ! ஐந்து தலை நாகம்!" என்று கத்தினான். வள்ளி பயந்துபோய், பங்களாவிற்குள் ஓடியே விட்டாள். முத்து முன்னால் வந்தான்.

முத்துவைக் கண்டதும் முருகன் பயந்து போனான். ஆனாலும் சமாளித்துக்கொண்டு, "இல்லேப்பா முத்து. நீ பங்களாவுக்குள் போய்விடு" என்று வழி காட்டினான். முத்துவுக்கு ஒன்றும் புரியவில்லை. யோசித்தான். வேலைக்கார முருகன் கண்முன்னால், பங்களாவுக்குள் நுழைந்தான்.

ஆனால்,—

அடுத்த கணம், மாட்டுக் கொட்டில் வழியே செடி மறைவில் பதுங்கிப் பதுங்கி வந்தான். முருகனின் குடிசைக்குள் பார்த்தான். நிஜமாகவே ஐந்து தலை நாகம் படம் எடுத்தபடியே நின்றது. பார்க்கவே பயமாக இருந்தது!

ஆனால் பாம்பு கன்னங்கரேல் என்று இல்லை; வெண்மையாக இருந்தது. முத்துவின் மூளையில் ஒரு மின்வெட்டு. அது..அது.. புரிந்துவிட்டது. ஒரு கழியை எடுத்துக்கொண்டான். அந்த வேளையில், "சாமி, சாமீ! ஐந்து தலை நாகம் கடித்துவிடும், சாமி!" என்று ஓடோடி வந்தான் முருகன்.

முத்து அப்பாவிடம் போய்ச் சொல்ல விரும்பினான்.

"வேண்டாம், முத்து, வேண்டாம். பாம்பு போகட்டும்.



அப்பால் சொல்லலாம்'' என்று கெஞ்சினான் முருகன்.

''அப்போ நீதான் சீனத்துப் பட்டாசுகளைத் திருடினயா?''

''உனக்கு எப்படித்தான் தெரிஞ்சுட்டுதோ? பெரிய எஜமான் கிட்டே சொல்லாதே சாமீ. என்னமோ தெரியாத்தனமாகத் திருட்டு நடந்துவிட்டது'' என்றான் முருகன்.

''கதவைத்திற, முருகா'' என்று வெற்றி வீரனைப் போலக் கர்வமாக நெப்போலியன் ஸ்டைலில் நின்றான். ஐந்து தலைப் பாம்பு கடித்துவிடுமோ என்று நடுங்கி அழுதான் முருகன். ஒரு கம்பை எடுத்து ஜன்னல் வழியே குத்தினான் முத்து. மறு நிமிஷம் அந்த ஐந்து தலை நாகம், தலை உடம்பு எல்லாம் சேர்ந்து 'புஸ் புஸ்' என்று சாம்பலாக நொறுங்கி விட்டது.

''ஆங்! இது நிஜமில்லையா? வெடியிலே அஞ்சு தலைப் பாம்பா இது? எப்படி வந்தது இங்கே?'' என்று முருகன் திகைத்தான்.

* * *

வேலைக்கார வள்ளி முத்துவின் தந்தையை அழைத்து வந்து விட்டாள். நாலடி நீளமுள்ள ஐந்து தலைப் பாம்பு சாம்பலாகிக் கிடப்பதையும் முத்து நெப்போலியன்போல நிற்பதையும் கண்ட ராமசாமி பயந்து பின்வாங்கினார்.

'டேய் முருகா!'' என்று வேலைக்காரனைக் கூப்பிட்டதும், ''எஜமான்'' என்று பயந்து அவன் உளறினான்.

''எங்கேடா, சீனத்து வெடிகள்?'' என்றான் முத்து.

முருகன் பெரிய எஜமானைப் பார்த்து விழித்தான்.

''எடுத்து வா'' என்று உள்ளே போனான் முத்து. குடிசைக்குள் சீனத்து வெடிக்கட்டுகள் கட்டியபடி இல்லாமல், கலைந்திருந்தன.

''பேஷ்! கண்டுபிடித்து விட்டாயே முத்து. என் முருகா, பீரோவில் இருந்தவை இங்கே எப்படி வந்தன? இதை எப்படிக் கண்டுபிடித்தாய்? டேய், முருகனை

வெளியே தள்ளு. இவனுக்கு நம் பங்களாவில் வேலை இனி இல்லை'' என்றார் ராமசாமி.

முத்து குறுக்கிட்டுச் சொன்னான்: ''அப்பா, இதைத் திருடியது முருகன் இல்லை. இவனுடைய மச்சான் சொக்குப் பயல் திருடினான். ஒருவருக்கும் தெரியாமல் வீட்டுக்குள் கொண்டு வந்து வைக்க முருகன் நினைத்தான். அதற்குள் ஐந்து தலைநாகம் வந்துவிட்டது!''

ராமசாமி, ''ஏண்டா முருகா, முத்து சொல்லுகிறது நிஜமா?'' என்று கேட்டார்.

''இது எப்படி முத்துவுக்குத் தெரிஞ்சுதோ? சொக்குப் பயல் கட்டோட இங்கே தூக்கி வந்திட்டான். நான் பிடுங்கி வைத்தேன். அப்போ கட்டு கொஞ்சம் உதிர்ந்து போச்சு. நேத்தே சொக்குப் பயலை, இங்கே தலைகாட்டக் கூடாதுன்னு, விரட்டிப் போட்டேங்க நான்.''

''டேய் முத்து! உனக்கு எப்படியடா, இதெல்லாம் தெரிய வந்தது?''

முத்து சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தவன், ''டேய் முருகா, நீ பீடி குடித்துவிட்டு எங்கே போட்டாய்?'' என்று கேட்டான். முருகன் அந்த இடத்தைக் காட்டினான். எச்சில் பீடித் துண்டு கிடந்தது. முத்து சொன்னான்:

''அப்பா, முருகன் சீனத்துக் கட்டைப் பிடுங்கியதும், கொஞ்சம் வெடிகள் சொக்கு எடுத்துக்கொண்டதும் வள்ளிக்குத் தெரியாது.''

வள்ளி குறுக்கிட்டு, ''நான் தான் பங்களாவில் ராவும் பகலும் தீவிளி வேலைக்காகத் தங்கிட்டேனே'' என்று சொன்னாள்.

''ஆகவே, இவ்வாறு வெடிக் கட்டை இருவரும் இழுத்ததில் சில சிந்திவிட்டன. இதோ கட்டுப் பிரிந்திருப்பதைப் பாருங்கள். பிரிந்து சிந்தியதில் பாம்பு வெடியும் ஒன்று. இதோ பார்த்தீர்களா? மொச்சைக் கொட்டைப் பருமன் பாம்பு வெடி'' என்று கையில் எடுத்தவன் முருகனைப் பார்த்தான். முருகன் குறிப்பையறிந்து முண்டாசைத் தடவி நெருப்புப் பெட்டியை எடுத்துக் கொடுத்தான். குச்சியைக் கிழித்து வைத்



மணி: அப்பா, ஒரே ஒரு பட்டாசுக் கட்டு கொடுப்பா!

தந்தை: நீயாக எடுக்காமல் என்னைக் கேட்டதுக்குச் சந்தோஷம். ஆனால் நானாகவும் கொடுக்க முடியாதே! அம்மாவைக் கேளு!

ததும், 'ஸ்ஸ்ஸூ' என்ற சப்தம் வந்தது. மறுவிநாடி நாலடி உயரம் படத்தை எடுத்துக்கொண்டு நின்றது ஐந்து தலைநாகம்.

எல்லோரும் பயந்து பின்னால் ஓடிவிட்டார்கள். முத்து மட்டும் அதன் தலையில் கை வைத்தான். வெள்ளை வெளேரென்று இருந்த பாம்பு பஸ்மமாகிவிட்டது. ராமசாமி திகைத்தார். பையன் யோசனைகளைக் கண்டு வியந்தார்.

"அப்பா, கடுகத்தனை வெடியாக, நம்மூரில் பாம்பு வெடிகள் விற்கிறார்கள்; நெருப்புப் பட்டதும் சாண் உயரம் வருகிறது. இது, ஸ்பெஷல் பாம்பு வெடி. அதிலேயும் ஐந்து தலைநாகம். மொச்சைக் கொட்டைப் பருமன் உள்ள இந்தப் பாம்பு வெடியில் முருகன் அஜாக்கிரதையாக வீசிய எச்சில் பீடி பற்றிக்கொண்டது. பாம்பு எப்படி வந்தது என்பதை அறியாத வள்ளி பயந்தாள். பாம்பு பாம்பு என்று கத்த முருகனுக்குப்பயம், கத்தினால் வெடிக்கட்டு உள்ளே இருக்கும் ரகசியம் தெரிந்துவிடுமே. இவ்வளவையும் நான் ஊகித்தேன்'' என்றான் முத்து.

"எண்டா முத்து, இதைச் சொக்கன் எடுத்தான், முருகன் எடுக்கவில்லை என்று நிச்சயமாகச் சொன்னாயே? அது எப்படி?'' என்று குறுக்காகக் கேட்டார், ராமசாமி.

"நேற்றிரவு நம் முருகன், வீட்டுக் கேட்டைத் தாண்டி, சொக்கனைக் கொண்டு வந்து தள்ளினான். தள்ளும் போதே, 'டேய் சொக்கு, உனக்குக் கை நீளம். இந்தப் பங்களாவிலியே உனக்குக் கட்டுபிடியாவாது. திருட்டுப்பயலே, நீ வேலை செய்ததுபோதும், என்று சொன்னான். அப்போது எதற்காக முருகன் சொன்னான் என்று எனக்குத் தெரியவில்லை. இப்போது உதயம் ஆயிற்று'' என்று தான் துப்பறிந்த சாமர்த்தியத்தைச் சொன்னான் முத்து.

மறுவிநாடி பங்களா வாசலில், கண்டெடுத்த வெடிகளைப் பையன்களுக்குத்தெரிவிக்கக் கோரியா பாம் போடப்பட்டது. அரைமணியாக எங்கும் புகை மண்டிற்று.

அரைமணிக்கு அப்பால் ஊர்க் குழந்தைகள் எல்லாரும், நான்கு நகர் வெடி மத்தாப்புகளைக் காண திரள் திரளாக வந்துகொண்டிருந்தனர். வரிசை வரிசையாக வெடித்தார்கள்; கொளுத்தினார்கள்.

குச்சுச்சூஊ, வாங்கிசுவாங், மியோமுஸாவோ, நையாச்சிநாங், லூஸாங்தியோதியாங் - எல்லாம் கொளுத்தப்பெற்று, புஸ்ஸ்ஸூங் வந்ததும் எடுத்தார்களே, ஓட்டம்!



ஆட்சிப் பாரம் சுமக்கும் நேரு
அருமைப் பேரனைச் சுமக்கிறார்.

கண்ணன் தீபவளி மலர் '52
போட்டோ: பி. என். சர்மா

ராஷ்டிரபதி இந்த நாட்டிலே
ராஜேன் பாபு ஓர் பாட்டனர்.



வேதாந்தத்தில் வல்லவர்
விளையாட்டுக்கும் நல்லவர்.



விளையாய்ச் சண்டை போடும் தளபதி
வேடிக்கைப் போர் செய்கிறுர்.

மைல்ரேஸ் வீராசாமி

ஆர்வி

காச்சு மூச்சென்று பறவைகளையெல்லாம் ஒரு வண்டியில் அடைத்து வைத்தது போல் ஒரே கூச்சல்.

"பின்னூர் ஹைஸ்கூலுக்கு!" என்றான் ஒரு பையன்.

"ஜே!" என்ற கோஷம் கால் மணிநேரம் வானைப் பிளந்தது.

"ஹெட்மாஸ்டருக்கு!"

"ஜே!"

"பிஸிகல் மாஸ்டருக்கு!"

"ஜே!"

"மைல் ரேஸ் வீராசாமிக்கு!"

"ஜே!"

"எனக்கு!"

"ஜே!"

கோஷம் சிரிப்பில் வந்து முடிந்ததும் வண்டி தாம்பூர் ஜங்ஷனில் வந்து நின்றதும் சரியாக இருந்தன. ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் பையன்கள் கோஷம் போடத் தொடங்கி விடுவார்கள். பிறகு வண்டி புறப்படும்வரை கிடுகிடாய்க் கும்படி செய்துவிட்டுத்தான் நிறுத்துவார்கள்.

குஞ்சும் குளுவானுமாய் உள்ள பையன்களிலிருந்து வாத்தியாருக்குமேல் ஒரு பிடி உயரமுள்ள தடியப் பையன்கள் வரையில் வண்டி முழுவதும் அடைந்திருந்தார்கள். வாத்தியார் பையன்களோடு பையனாய் இருக்கும் இடமே தெரியாதபடி மறைந்து கிடந்தார்.

தாம்பூர் ஜங்ஷனில் நாலு வண்டிகள் சந்திக்கின்றன. நாலு பக்கங்களிலுமுள்ள ஜில்லாபோர்டு ஹைஸ்கூல் மாணவர்கள் ஜில்லா 'ஸ்போர்ட்ஸு'க்காக அங்கே வந்து இறங்கினார்கள்.

ஒரே 'ஜே' சத்தமும் கூச்சலும் ஜங்ஷனையே அதிர அடித்தன. அந்த அந்த ஊர்ப் பையன்கள் அந்த அந்த ஊர் வீரனுக்கு 'ஜே' கோஷம் போட்டார்கள்.

இந்த அமர்க்களங்களில் பின்னூர் கோஷ்டியாரின் தடபுடல் தான் பிரமாதமாய் இருந்தது. அவர்களின் நடுவே நடுநாயகமாய், கழுத்தில் மாலையணிந்துகொண்டு ஒரு பையன் காட்சியளித்தான். கன்னங்கரேல் என்ற கறுப்பு நிறம். ஆனால் பளபளவென்று உளுந்துக்கு எண்ணெய் தடவியதுபோல் ஒரு மினுமினுப்பு. அவன் சட்டையில் அழகான ஒரு தங்க மெடல் ஒளி வீசியது.

"கிரீக் மெடல் வீராசாமிக்கு!" என்று ஒரு சிறுவன் கூவினான்.

"ஜே!" என்ற தடித்த கூச்சல் கதம்பமாக எழுந்தது.

"பளபள ஒயிட்டுக்கு!"

அதற்குச் சத்தமே இல்லை. தனியாக அந்தக் குரல் எழுந்து அடங்கியது. வீராசாமி கறுப்பாக இருப்பதால் இப்படி ஒரு கேலிப் பெயர் அவனுக்கு உண்டு.

பிஸிகல் மாஸ்டர், பண்டரிநாதன் என்ற அந்தப் பையனுடைய

காதைப் பிடித்து, “டேய், இது வேறே ஊரு. நம்ப பையனையே நாம் கேவலமாகக் கூப்பிடப் படாது” என்றார்.

“சரி, ஸார்! சரி, ஸார்!” என்றான் பண்டரி. அவன் வேறு ஊரிலிருந்து அந்த வருஷம் பின்னூருக்குப் படிக்க வந்த பையன்.

ஒருவிதமாக அவரவர்களுக்கு ஒழித்துக் கொடுத்திருந்த விடுதிக்கு, பல ஊர்ப்பிள்ளைகளும் குரூப் குரூப்பாகச் சென்றார்கள். எங்கே போனாலும் மொத்தமாக ஒன்று சேர்ந்து போகவேண்டும். ஒன்று சேர்ந்து திரும்பி வரவேண்டும்.

இரவு பிஸிகல் மாஸ்டர் சுந்தரம் சாப்பாட்டுக்குப் பையன்களை எண்ணிக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார். எல்லாருக்கும் அன்றிரவு ஆனந்தா லாட்ஜில் சாப்பாடு. எல்லாரும் கொம்மாளம் போட்டுக்கொண்டு பெயரைக் கொடுத்தார்கள்.

இந்தச் சமயத்தில், “ஸார்!” என்று குரல் கேட்டது.

பிஸிகல் மாஸ்டர் சுந்தரம் திரும்பினார். மைல் ரேஸ் வீராசாமியும் பண்டரிநாதனும் நின்றார்கள்.

“என்னப்பா வீராசாமி! என்ன வேணும் உனக்கு?” என்று பரிவுடன் கேட்டார் சுந்தரம்.

வீராசாமி எது கேட்டாலும் அவர் இல்லை என்று சொல்ல மாட்டார். அவன் வருஷம் தவறாமல் பந்தயங்களில் வென்று மெடல் வாங்கி, ஊர் மானத்தைக் காப்பாற்றுகிறவனுச்சே. அவன் மனசு கோணலாமா?

“ஸார், எங்க ரெண்டுபேருக்கும் கையிலே சாப்பாட்டுக் காசைக் கொடுத்துடுங்கோ, ஸார்!” என்றான் வீராசாமி.

சுந்தரம் யோசித்தார். “ஓ! உனக்குச் சைவச் சாப்பாடு வேண்டாமா? வேறே சாப்பாடா?” என்றார் சிரித்துக்கொண்டே.

வீராசாமி, “ஆமாம்” என்று தலையைக் குனிந்துகொண்டான்.

“இந்தா, தலைக்கு ஒரு ரூபாய்!” என்று சுந்தரம் அவனிடம் இரண்டு ரூபாயைக் கொடுத்தார். வீராசாமியும் பண்டரிநாதனும் குதித்துக்கொண்டே போய்விட்டார்கள்.

* * *

நாம்பூர் ‘ஸ்போர்ட்ஸ்’ என்றால் மிகவும் பிரசித்தம். பதினாயிரக் கணக்கில் கூட்டம் கூடும். ‘பார்ஸ்டல் ஸ்கூல்’ மைதானத்தில் பந்தயங்கள் நடைபெறும். நாலுபுறமும் கம்பங்கள் கட்டிச் சுண்ணாம்பால் கோடுகள் போட்டுக் கொடிகள் கட்டி மைதானமே கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். ‘லாங் ஜம்ப் போட்டிகள், ஹை ஜம்ப், டக் ஆப் வார், ஹர்டில் ரேஸ், ஹண்டிரட் யார்ட்ஸ், ஃப்ளாக் ரேஸ், போல் ஜம்ப்’ என்று இப்படி நிகழ்ச்சிகளுக்குத் தகுந்தபடி ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். இரண்டு பர்லாங்கு நீளம் இரண்டு பர்லாங்கு அகலத்தில் மைதானத்தில் சதுரமாகக் கயிறு வேலி கட்டியிருந்தார்கள். ஒரு சுற்றுச் சுற்றி வந்தால் ஒரு மைல் தூரம் கணக்கு ஆகிவிடும்.

பின்னூர் ஹைஸ்கூல் மாணவர்கள் பல போட்டிகளில் வெற்றிக் கொடி நாட்டி வந்தார்கள். ‘டக் ஆப் வாரி’ல் அவர்கள் வருஷா வருஷம் ஷீல்டைத் தட்டிக் கொண்டு போய் விடுவார்கள். அதனால் பின்னூர் ஹைஸ்கூல்



என்றாலே ஒரு தனி மதிப்புத் தான். எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போல மைல் ரேஸ் வீராசாமி குறைந்தது ஐந்து போட்டிகளிலாவது முதலில் வந்து விடுவான். இரண்டு வருஷங்களாகவே கிரீக் மெடல் அவனுக்குத்தான் வந்துகொண்டிருந்தது. இந்த வருஷம் அதை அவன் வாங்க முடியாதபடி செய்யப் பலத்த போட்டி. இதனால் மற்ற ஊர் மாணவர்கள் ஒரு கட்சி. பின்னூர் மட்டும் தனி.

முதல் நாள் போட்டியில் வழக்கம்போல் வீராசாமியே வெற்றி பெற்று வந்தான்.

அவன் என்ன அற்புதமாக வெற்றி பெற்றாலும் மற்ற ஊர் மாணவர்கள் கைதட்டி ஆர்ப்பாட்டம் செய்யமாட்டார்கள். ஆனால் பின்னூர் மாணவர்கள் பின்னி எறிந்துவிடுவார்கள். மற்ற ஜனங்களும் அவர்களோடு சேர்ந்து கொள்வார்கள்.

இரண்டாம் நாள் பந்தயத்தில் வீராசாமி அவ்வளவு உற்சாகமாய் இல்லை. கண்கள் கலங்கியிருந்தன. அவன் வெற்றி பெற மிகவும் பிரயாசைப்பட வேண்டியிருந்தது. எப்படியோ நாலு போட்டிகளில் வெற்றிமாலை சூடிவிட்டான். மற்றவைகளில் அவன் எவ்வளவோ முயன்றும் தோல்வி தான் ஏற்பட்டது. அவனுடைய தோல்வி மற்ற ஊர்ப் பையன்களுக்கு அதிக உற்சாகத்தை ஏற்படுத்தியது. அவனோடு போட்டியாகக் கேசவலு என்ற வேறு ஊர்ப் பையனும் இதர நாலு போட்டிகளில் முதலில் வந்திருந்தான்.

ஆயிற்று; மூன்றும் நாள் வந்தது. அன்றுதான் மைல் ரேஸ். அந்தப் போட்டியில் வீராசாமி நிச்சயம் தவறவே மாட்டான். ஆகவே இந்த வருஷமும் கிரீக் மெடல் அவனுக்குத்தான் என்று எல்லா ரும் பேசிக்கொண்டார்கள். ஆனல் காலையிலிருந்தே வீராசாமி மிகவும் சோர்ந்து காணப்பட்டான். ஒரே இரவில் அவன் முகம் சிறுத்து வாடிப் போயிருந்தது.

சுந்தரம் நெஞ்சு பதறப்பதற, "என்னடா வீராசாமி! ஏன் இப்படி இருக்கே?" என்றார்.

"ஒண்ணும் இல்லே, ஸார்! நான் எப்பவும் போலத்தானே இருக்கேன்" என்றான் வீராசாமி.

"மைல் ரேஸ் அடிச்சுட்டியோ சாம்பியன் மெடல் வந்துடும்! தட்டிப்புடலாம்!" என்றார் சுந்தரம்.

பக்கத்திலிருந்த பண்டரிநாதன், "நம்ப வீராசாமியைப் பற்றிக் கவலையே வேண்டாம், ஸார்!" என்றான்.

மாலை மூன்று மணி வரையில் வீராசாமியும் பண்டரிநாதனும் கூடிக் கூடி எங்கேயோ அரை மணிக்கு ஒரு தடவை போய் வந்தார்கள். சுந்தரம் இதை அவ்வளவாகக் கவனிக்கவில்லை.

மூன்றரை மணிக்கு எல்லாரும் கும்பலாக மைதானத்தை அடைந்தார்கள். வீராசாமி வந்து மைதானத்தைப் பார்த்ததும் ஒரே கை தட்டல் வானைப் பிளந்தது.



மஞ்சள் வர்ணச் சட்டையில் சிவப்புப்பட்டி தைத்த டிராயரும் சட்டையும் அணிந்து நின்றான் வீராசாமி. வாயில் எலுமிச்சம் பழம் ஒன்றைக் கௌவிக் கொண்டு ஓடத் தயாராக நின்றான்.

"கமான் வீராசாமி! கமான் வீரா! கமான் சாமி!" என்று மாணவர்கள் உற்சாகப்படுத்தினார்கள்.

எதிரிகள், "ஆளு காபரா ஆயிட்டான் போல இருக்குடா!" என்று கூச்சலிட்டுக் கத்தினார்கள்.

"ரெடி, ஷூட்!" என்று துப்பாக்கி வெடிக்க, பையன்கள் காற்றில் விண்ணென்று பாய்ந்தார்கள்.

வாயில் எலுமிச்சம்பழத்தைக் கௌவிக்கொண்டு வீராசாமி எப்போதும் முதல் சுற்றில் கொஞ்சம் பின்தங்கித்தான் ஓடுவது வழக்கம். அதேபோல் இன்றும் பின்தங்கியே ஓடிவந்தான்.

இரண்டாவது திருப்பத்தில் அவன் வேகம் ஆரம்பமாகும்.

"அப் வீராசாமி! அப் வீராசாமி!" என்ற கூச்சல்கள் செவிடுபடச் செய்தன. வீராசாமி மார்பைப் புடைத்துக்கொண்டு முன்னேறினான்.

ஆனால் ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷம்...மூன்றாம் திருப்பம் திரும்பியதும் வீராசாமிக்குக் குபீலென்று தலையாட்டம் கண்டது. அவனுக்குப் பின்னால் வந்த கேசவலு அவனுக்குச் சரியாக வந்தான். "அப் கேசவலு, அப் கேசவலு!" -ஒரே கூச்சல்!

'ஹோ ஹோ! ஹாஹூ!'-வீராசாமி திருப்பத்தில் திரும்பாமலே மைதானத்தைத் தாண்டி வெளியே போய் விழுந்துவிட்டான்.

'குபுக்,குபுக்' என்று ஒரே வாந்தி. சாப்பிட்டதையெல்லாம் வாந்தி எடுத்துவிட்டான்! ஒரே ரகளை! கேசவலு அடித்துவிட்டான் தங்க மெடலை!

டாக்டர் வந்து வீராசாமியைப் பரிசோதித்தார். பின்னார்ப் பையன்கள் தலைதூக்க முடியாதபடி நின்றார்கள்.

கடைசியில்தான் உண்மை வெளிப்பட்டது.

காசு மிச்சப்படுத்தி, சினிமாவுக்குப் போகலாம் என்று வேளா வேளைக்குப் பணத்தைக் கையில் வாங்கிக்கொண்டு வெறும் வேர்க்கடலையும் உண்டைக்கட்டியும் வாங்கித் தின்னும்படி செய்துவிட்டான் பண்டரிநாதன். வீராசாமி அவன் வலையில் விழுந்து, மிச்சக் காசைக் கொண்டு சினிமா பார்த்துக் கண்வேறு விழித்தான்.

சுந்தரம் பண்டரியை அடித்து மிரட்டியதில் மற்றொரு முக்கியமான உண்மை தெரிந்தது. கேசவலுவின் சொந்தக்காரன்தான் அந்தப் பண்டரி. அவன் ஜயிக்க வேண்டும் என்ற ஆசையில் தெரியாத்தனமாக இவ்விதம் செய்துவிட்டதாக அவன் ஒப்புக்கொண்டு மன்னிப்பும் கேட்டான்.

இனி என்ன? மைல் ரேஸ் வீராசாமி அதற்குப் பிறகு எந்தப் பந்தயத்திலுமே கலந்துகொள்ளவில்லை. ★

நட்சத்திரக் குழந்தைகள்

அடுத்த பக்கத்திலுள்ள எட்டு சினிமா நட்சத்திரங்களைத் திரைப் படங்களில் பார்த்திருப்பீர்கள். அடுத்த நாலு பக்கங்களில் அவர்களுடைய குழந்தைகள் காட்சியளிக்கிறார்கள். இன்னாருடைய குழந்தை இது என்பதை நாங்கள் இங்கே குறிப்பிடவில்லை. அந்தக் குழந்தைகளின் முகச் சாயலைக்கொண்டு அவர்களை உங்களால் தெரிந்துகொள்ள முடிகிறதா என்று பார்க்க வேண்டும். நீங்களே அவர்களைப் பற்றிய குறிப்பின் உதவியைக் கொண்டு கண்டுபிடிக்கலாம். உங்கள் ஊகம் சரியா என்று 48-ஆம் பக்கத்தைப் பாருங்கள்.



மேல் வரிசை: (இ. வ.)

1. கே. சாரங்கபாணி
2. டி. ஆர். ராமசந்திரன்
3. எம். கே. ராதா
4. புஷ்பவல்லி







கீழ் வரிசை: (இ வ)
5. அஞ்சலிதேவி
6. என். எஸ். கிருஷ்ணன்
7. எல். நாராயணராவ்
8. பி. பானுமதி
போட்டோ: சங்கர்.



1. நாரதர் கொண்டையுடனும் நாட்டிய முத்திரையுடனும் நிற்கும் பத்மா யாரென்று தெரிகிறதா? இவளுடைய தந்தையை ஜெமினி சந்திரலேகா படத்தில் பார்த்திருக்கலாமே!

2. 'நான் தான் ஜயந்தி! என்னையும் ஞாபகம் வச்சுக்குங்கோ!' என்று கும்பிடும் இவள், அப்பாவின் போட்டோவையே சங்கிலியில் மாட்டித் தொங்க விட்டுக்கொண்டிருக்கிருள். இதே போன்ற இவள் அப்பாவின் கண்களை ஏ வி. எம். வாழ்க்கையில் பார்த்திருப்பீர்களே!



3. மூன்று சக்கர சைக்கிளில் முறுவலுடன் உட்கார்ந்திருக்கும் ஷண்முகத்தைப் பாருங்கள். இவன் தந்தை பைத்தியக்காரனிலிருந்து சொந்தப் படத்திலேயே நடித்து வருகிருர்.



4. 'டிப்டாப்'பாக நிற்கும் பரணியின் கண்ணும் கன்னமும் அசல் அம்மாவின் சாயலேதான். அவன் பெயராலேயே சொந்தக் கம்பெனி ஒன்று உண்டு. ஜெமினி அபூர்வ சகோதரர்களில் இவனுடைய அம்மா நடித்திருப்பதைப் பார்த்ததில்லையா?



5. யோசனை செய்து துணுக்கு எழுதும் காந்தி பத்மநாபனையும் தம்பி பாஸ்கர் படேலையும் தெரிந்து கொள்ளச் சபாபதியைப் பார்த்திருந்தால் போதும். இவர்களுடைய அப்பா அதில் சக்கைப் போடு போட்டிருக்கிறார்.

6. சைக்கிள் மேலே ஏரோப்ளேனை ஏற்றி, சைக்கிளை ஏரோப்ளேனாகவே எண்ணி, பைலட் தொப்பி அணிந்து கொண்டு ஹிந்திப் பாட்டை முணுமுணுக்கும் பாபு, அசல் அம்மாவையே கொண்டிருக்கிறான். சக்ரதாரி படத்தைப் பார்த்தால் உண்மை விளங்கும்.



7. நாய்க்குட்டியுடன் இருப்பவன் தம்பி. உட்கார்ந்திருப்பவன் அண்ணன், சின்னாராவ். அம்மாவைப் போன்ற சிரிப்பு. ஆதித்தன் கனவில் இவர்கள் அம்மாவைப் பார்த்திருப்பீர்கள். இல்லாவிட்டால் பொய்மான் கரடில் பேஷாகப் பார்க்கலாம்.



8. 'எனக்குக் கிரிக்கெட் ஆட்டந்தான் ரொம்பப் பிடிக்கும்' என்று மட்டையுடன் நிற்கும் சுகுமாரனைத் தெரியுமா? ஜெமினி மூன்று பிள்ளைகளில் இவனுடைய அப்பா அபாரமாய் நடித்திருக்கிறாரே!

குற்றவாளி

'ஸேனை'

மலையின் செங்குத்தான பாகத்துக்கு வந்துகூடத் தியாகுவுக்குக் கோபம் விட்டபாடில்லை. அவன் சோமுவைத் துரத்திக்கொண்டே போனான். சோமுவைப் போலச் சோனிப் பயல் தியாகுவிடம் வால் ஆட்டியிருக்கலாமா? ஏதோ கிண்டலாகப் பேசிவிட்டான். தியாகுவுக்கு ரோஷம் வந்ததைப் பார்க்கவேண்டுமே! வயது பதினைந்துதான் ஆகிறது; இருந்தாலும் அவன் கட்டுமஸ்தாக இருப்பான்.

சோமு அவனிடமிருந்து தப்ப மேலே மேலே தாவி ஓடிக்கொண்டிருந்தான். கீழேயிருந்து நாலைந்து பையன்கள் 'ஆ' என்று வாய் திறந்தபடி இதைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு பெரிய கல்லின் மேல் சோமு தாவி ஏறினதும், தியாகுவும் கப்பென்று அதில் ஏறி அவனைப் பிடித்துவிட்டான். அங்கே இருந்த புதரில் இருவரும் மறைந்தது கீழே இருப்பவர்களுக்குத் தெரிந்தது; அவ்வளவுதான். அடுத்த நிமிஷம், 'ஐயோ!' என்று சோமு அலறும் குரல் கேட்டது. உடனே புதரிலிருந்து தியாகு பரக்கப் பரக்க வெளியே வந்தான். அவன் முகத்தில் திகிலும் கலவரமும் தாண்டவமாடின. அதற்குள் மற்றப் பையன்கள் அங்கே வந்து சேர்ந்துவிட்டார்கள்.

அவர்களில் பெரிய பையன்கள் தியாகுவை மடக்கி, "என்னடா, சோமு எங்கே?" என்று கேட்டார்கள். தியாகு திரு திருவென்று விழித்தான். பதிலே பேசவில்லை. இரண்டுபேர் அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்கள். இத்தனை நாள் திமிறி ஓடப் பார்ப்பான் தியாகு. இப்போது அவன் மரக்கட்டை மாதிரி அப்படியே திகைத்து நின்றான். மற்றப் பையன்கள் புதரண்டை வந்து பார்த்தார்கள். சோமுவைக் காணவில்லை. அருகில் ஆயிரம் அடிச்சுக் கீழே பள்ளத்தாக்குத் தெரிந்தது; அவ்வளவுதான். அவர்கள் தியாகுவைப் பிடித்து உலுக்கி, "ஏண்டா, சோமு எங்கே? அவனைக் கீழே தானே தள்ளிவிட்டாய்?" என்று கன்னத்தில் அறைந்தார்கள். தியாகு அப்போதும் வாய் திறக்காமல் கம்மென்றுதான் இருந்தான்.

சில நிமிஷத்துக்கெல்லாம் ஊர் முழுவதும் இந்தச் செய்தி பரவிவிட்டது. சோமுவின் பெற்றோர் உடனே போலீஸாருக்குத் தகவல் கொடுத்துவிட்டார்கள். தியாகுவின் தாய் ஓர் ஏழை விதவை. தன் மகனின் துடுக்குத்தனம் அவளுக்கும் தெரியும். இருந்தாலும், மகனை மற்றவர்கள் அடிக்கும்போது பெற்ற மனம் கேட்குமா? அவள் தியாகுவை

நெருங்கி, "அடே! நீயா சோமுவைக் கீழே தள்ளினுய்? நடந்ததைச் சொல்லேன்" என்று கேட்டாள். அப்போதும் தியாகு எங்கோ வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தானே யொழியப் பதிலே பேசவில்லை. இதனுல் மற்றவர்களுக்குக் கோபம் அதிகமாயிற்று. ஆளுக்கு ஓர் அறை அவன் கன்னத்தில் விட்டார்கள். இந்தக் கண்ணராவியைப் பார்க்கச் சகிக்காமல் அவன் தாய் கண்ணை மூடிக்கொண்டாள்.

போலீஸ் சேவகன் வந்ததும் பையன்கள் நடந்ததைக் கை கால் மூக்கெல்லாம் வைத்து விவரமாகச் சொன்னுர்கள். தியாகு அப்போதும் ஊமைமாதிரி பேசாமல் தான் இருந்தான். போலீஸ் சேவகன் புதரருகில் போய்க் கவனித்துக் குறிப்பெல்லாம் குறித்துக் கொண்டான். தியாகுவை அவன் பக்கத்து ஊர்ப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போன போது அவன் தாய், "என் வயிற்றில் நெருப்பை வார்த்தாயேடா" என்று தலையில் அடித்துக் கொண்டே பின்தொடர்ந்தாள்.

பள்ளத்தாக்கில் இறங்க வழி இருந்தால்தானே? அதனுல் சோமுவின் உடலும் கிடைக்கவில்லை. போலீஸ் இன்ஸ்பெக்டர் சேகர் பழைய ரீதியான பேர்வழி. அன்று இரவு தியாகுவைக் கம்பத்தில் கட்டி அடிக்க உத்தரவிட்டார். எவ்வளவு அடித்தும் தியாகுவின் கண்களில் நீர்கூட வரவில்லை. அவன் முன் போலவே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். வாய் திறந்து ஒன்றும் பேசவுமில்லை. அவன் தாய் வெளியில் இருந்தபடி துடியாகத் துடித்தாள். ஆனுல் அவளை யார் சட்டை செய்யப் போகிறுர்கள்!

மறுநாள் காலை இன்ஸ்பெக்டரின் நெருங்கிய நண்பரான டாக்டர் முத்துசாமி அவரைப் பார்க்க வந்திருந்தார். அவர் வரும்போது வழியில் இந்தச் செய்தியைக் கேட்டார். தியாகுவின் தாய் விம்மி விம்மி அழுவதையும் கண்டார். "என்ன அப்பா இது? என்ன விசேஷம்?" என்று இன்ஸ்பெக்டரை விசாரித்தார்.

இன்ஸ்பெக்டர் நடந்ததைச் சொன்னுர்; பிறகு, "என்னவோ கண்ணராவி! எவ்வளவு அடித்தும் பையன் வாயையே திறக்க மாட்டேனென்கிறுன்" என்றுர்.

டாக்டர், "பையன் எங்கே இருக்கிறுன், காட்டு. நான் பேச வைக்கிறேன்" என்றுர்.

"இந்த அடிக்குக் கலங்காதவன் உன் பேச்சையா கேட்கப் போகிறுன்?"

"வா, அப்பா; போய்த்தான் பார்க்கலாமே."

"சரி. வாயேன்" என்று இன்ஸ்பெக்டர் அவரைத் தியாகு இருக்கும் அறைக்கு இட்டுச் சென்றுர்.

டாக்டர், தியாகுவை நெருங்கிப் பரிசோதித்துப் பார்த்து ஒரு விதமாகத் தலையை ஆட்டினுர். "பையனுக்குச் சித்தப்பிரமை. வாய் வேறு அடைத்துவிட்டது. அவன் கண்ணைப் பார். ஏதோ பயங்கரமான காட்சியைப் பார்த்திருக்கிறுன்" என்றுர்.

இன்ஸ்பெக்டர் ஏளனமாக, "அதை நீ சொல்லுவானேன்? சோமு என்ற அந்தப் பையனைப் பள்ளத்தாக்கில் தள்ளிவிட்டான். அது பயங்கரமாகத்தானே இருக்கும்?" என்றுர்.

"அப்படி இல்லை; அங்கே போய்க் கவனித்தாயா?"

"என்ன கவனிக்கிறது? புதரைத் தாண்டியதும் பள்ளத்தாக்கு. அதில் தள்ளிவிட்டான். அவ்வளவுதான்."

"அவசரப்படாதே, அப்பா! நான் போய்ப் பார்த்துவிட்டு வரட்டுமா அங்கே?"

"உம். பிணம் என்னவோ அகப்படப் போகிறதில்லை. வேண்டுமென்றால் போய் வா."

"இந்தப் பையனை இனிமேல் அவசரப்பட்டு அடிக்க உத்தரவு கொடுக்காதே."

"சரி. போய்விட்டு வாயேன்" என்று போலீஸ் சேவகனை டாக்ட

ரோடு அனுப்பிவைத்தார் இன்ஸ்பெக்டர்.

டாக்டர் ஊர்ப்பக்கம் போகாமல் போலீஸ் சேவகனுடன் நேராக மலைமேல் ஏறினார். மேலே புதரண்டை வந்ததும், "நீ இங்கேயே இரு" என்று அவனை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு அதற்குள்ளே நுழைந்தார். புதரில் கொஞ்ச தூரம் வரை போனதும் பள்ளத்தாக்குத் தெரிந்தது. தலையை ஒரு விதமாக ஆட்டிவிட்டுப் புதரின் மறுபக்கம் சென்றார். இங்கே மலை மிகவும் செங்குத்தாக நின்றது. பெரிய பெரிய கற்கள் சிதறிக் கிடந்தன. சுவர் போன்ற மலை உச்சியைப் பார்த்தார். ஒரு பெரிய கல்லண்டை வந்ததும் கல்லின் மேல்பாகத்தில் மண் படிந்திருப்பதைக் கண்டார். பலங்கொண்டமட்டும் அதை அசைத்துப் பார்த்தார். கல் சற்று ஆட்டங்கொடுத்தது. மெதுவாக அதை நகர்த்தினார். குப்பென்று குளிர்ந்த காற்று அதன் வழியே வீசியது. ஓர் ஆள் நுழையக்கூடிய பெரிய துவாரம் தெரிந்தது. டாக்டர் மெதுவாகக் காலை உள்ளே விட்டு அதில் இறங்கினார்.



போலீஸ் சேவகன் வெகு நேரம் காத்திருந்தான். 'டாக்டர் ஐயா இத்தனை நேரம் என்ன செய்கிறார்?' என்று பார்க்கப் புதரண்டை வந்தான். முதலில் பள்ளத்தாக்குப் பக்கம் வந்து பார்த்தான். டாக்டரைக் காணவில்லை. மலையின் செங்குத்தான பக்கம் வெறுங்கற்கள். அங்கேயும் அவரைக் காணவில்லை. இதென்ன பட்டம் பகலில் டாக்டர் எங்கே மறைந்து போனார் என்று விழித்தான். ஏதாவது பேய் பிசாசு இங்கே இருக்கிறதோ? —அவனுக்கு உடம்பெல்லாம் மயிர்க்கூச்சு எடுத்தது. அங்கே அதிக நேரம் நின்றால் தனக்கும் ஏதாவது நேர்ந்துவிடுமோ என்று தோன்றவே பெருமூச்சு வாங்க, கீழே ஓடி வந்து இன்ஸ்பெக்டரிடம் விஷயத்தைத் தெரிவித்தான். "இதென்னடா, பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காக முடிந்ததே!" என்று அவர் சில சேவகர்களுடன் மலையுச்சிக்குப் போனார்.

புதரண்டைக் கவனித்துவிட்டு அந்தப் பள்ளத்தண்டை வந்தார். அதிலிருந்து குளுகுளு வென்று காற்று வீசியது. திடீரென்று உள்ளிருந்து டாக்டரின் குரல், "ஹல்லோ இன்ஸ்பெக்டர்" என்று கேட்டது. கூடவே அவர் தலை தெரிந்தது; வெளியே ஏறிக் குதித்தார். அவர் பின்னாலேயே ஒரு பையனும் அந்தத் துவாரத்திலிருந்து வெளி வந்தான்.



அங்கிருந்தவர்களுக்கு இதெல்லாம் பெரிய ஆச்சரியமாக இருந்தன. டாக்டர் மண்ணை உதறிக் கொண்டு, "பையா, இன்ஸ்பெக்டர் ஐயா கிட்ட நடந்ததைச் சொல்லு'' என்றார். காணமற் போன சோமுதான் அவன்.

"நான் தியாகுவிடமிருந்து திமிறிக்கொண்டு இங்கே வந்து ஒரு கல்லின்மேல் கால் வைத்தேன். அது உருண்டு எதோ பள்ளத்துக்குள் விழுந்த மாதிரி இருந்தது. அவ்வளவுதான்; மூர்ச்சையாகி விட்டேன். எழுந்து பார்த்தால் வேறெங்கோ ஒரு புது இடத்தில் இருந்தேன். நேற்றெல்லாம் பிரமை பிடித்தமாதிரி அங்கேயே இருந்தேன். அப்புறம் இவர் வந்தார்'' என்றான.

அப்போது டாக்டர், "இந்த வழி மலையின் அந்தப் பக்கம் கொண்டு விடுகிறது, சேகர்!'' என்றார்.

இன்ஸ்பெக்டர், சோமுவைப் பார்த்து, "அப்படியானால் தியாகு உன்னைக் கீழே தள்ளவில்லையா?'' என்று தம் தலையில் அடித்துக் கொண்டார்.

டாக்டர், "இப்போது அந்தப் பையனைப்பற்றித்தான் எனக்குக் கவலையாக இருக்கிறது. எதற்கும் இவனை அங்கே இட்டுக் கொண்டு போய்ப் பார்க்கலாம்'' என்றார்.

இவர்கள் கீழே சோமுவுடன் இறங்கியபோது அவனைப் பார்க்க ஊரே கூடிவிட்டது. போலீஸ் ஸ்டேஷனில் சோமுவைப் பார்த்ததும் தியாகு திடீரென்று, "அடே, நானா உன்னைக் கீழே தள்ளினேன்?'' என்று சொல்லி விம்மி விம்மி அழத் தொடங்கினான்.

டாக்டர் அவனை அணைத்துக் கொண்டு, "அழாதே, தம்பி'' என்று அவன் முதுகைத் தடவிக் கொடுத்தார். தியாகுவின் தாய் கண்கள் கலங்க அவரை நன்றியோடு பார்த்தாள்.

இன்ஸ்பெக்டர் சேகர் ஒரு மூலையில் குற்றவாளிபோல் முகம் கவிழ்ந்தபடி நின்றார்.

நட்சத்திரக் குழந்தைகள்

1. எல். நாராயணராவ் அவர்கள் குமாரி பத்மா. 2. டி. ஆர். ராமசந்திரன் அவர்கள் குமாரி ஜயந்தி. 3 என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் குமாரன் ஷண்முகம். 4. பானுமதியின் குமாரன் பரணி. 5 கே. சாரங்கபாணி அவர்கள் குமாரர்கள். 6. புஷ்பவல்லியின் குமாரன் பாபு. 7. அஞ்சலிதேவியின் குமாரர்கள். 8. எம். கே. ராதா அவர்கள் குமாரன் சுகுமார்.

வேடிக்கைக் கணக்குகள்

'யோகம்'



(1) குதிரைலாட வடிவமுள்ள இந்த அட்டைத் துண்டை இரண்டே தடவை மட்டும் கத்தரிக் கோலால் கத்தரித்து ஏழு துண்டுகளாக்க வேண்டும். மடிக்கவோ இரண்டு தடவைக்குமேல் கத்தரிக்கவோ கூடாது. ஆனால் இரண்டு பக்கங்களையும் ஒரே வெட்டில் வெட்டலாம்.

(2) மொத்தம் பத்துப் பறவைகள். வரிசைக்கு நாலு பறவைகள் வீதம் மூன்று வரிசைகளாகவும் ஐந்து வரிசைகளாகவும் அவற்றை அமைக்க முடியுமா?

(3) தீபாவளியன்று சரோஜாவும் ராஜுவும் மத்தாப்பூக் கொளுத்தினார்கள். ராஜு, "உன்னிடம் எவ்வளவு மத்தாப்பூ இருக்கிறது?" என்று கேட்டான். சரோஜா, "உன்னிடம் இருப்பதைப்போல எட்டு மடங்கு அதிகம்" என்றாள். உடனே ராஜு, "சரிதான், என்னைவிட 35 மத்தாப்பூ அதிகம் வைத்திருக்கிறாய்!" என்று சொன்னான். அப்படியானால் சரோஜாவிடம் எவ்வளவு?

(4) இந்த ஐந்துபேரும் சேர்ந்து ஒரு ஹோட்டலுக்கு வந்தார்கள். "நீங்கள் எத்தனை பேர்?" என்றார் ஹோட்டல்காரர். "நாங்கள் பிள்ளை, அப்பா - அம்மா, மாமா, மாமி, அண்ணன், தங்கை, அம்மான்சேய், அத்தான், அத்தங்காள்" என்றான் ராசு. "நீங்கள் ஐந்து பேர்தானே இருக்கிறீர்கள், பத்துப் பேரைச் சொல்கிறாயே?" என்றார் ஹோட்டல்காரர்.

"எங்கள் உறவு முறையைச் சொல்லுகிறேன்" என்றான் ராசு. ஹோட்டல்காரர் உறவு புரியாமல் மண்டையை உடைத்துக் கொண்டார். உங்களுக்காவது புரிகிறதா?

(விடைகள் அடுத்த பக்கம்)

விடைகள் :

(1) முதலில் வளைவான பாகத்தைக் கையில் பிடித்துக்கொண்டு இரண்டு புஜங்களையும் அடிப்பாகத்தில் வெட்டு. இப்பொழுது இரண்டு துண்டும் சிறிய லாடம் போன்ற அட்டையும் கிடைக்கும். மறுபடியும் முன்வெட்டிய துண்டை சிறிய லாடத்தின் புஜத்தோடு சேர்த்து மேலே வைத்து ஒரு வெட்டு வெட்டு. ஏழு துண்டுகள் கிடைக்கும்.



(2) மூன்று வரிசைகள் - ஐந்து வரிசைகள்



(3) 40 மத்தாப்பூக்கள்.

(4)



அபாயச்சங்கு

'நீலம்'

4

வகுப்பு அறையில் ரகளை

ஓடும் மெயிலில் ரகு செய்த திருவிளையாடல்களை விவரித்துவிட்டு, பீமசேன பாடசாலையில் அவன் சேர்ந்து விட்டதையும் ரகுவின் பெற்றோருக்கு அவன் மாமா சில தினங்களுக்கு முன்பாகவே எழுதிப்போட்டு விட்டார்.

அன்று காலை ரகு தன் தோழன் ப்ரசுவோடு பள்ளிக்கூடம் புறப்பட்டதை மாடியிலிருந்தபடியே அவன் மாமா கவனித்தார். துணையில்லாமல் இவன் ஏன் போகிறான் என்று கான்ஸ்டேபிள்களைக் கூப்பிட்டு விசாரித்தார்.

"இல்லீங்க எசமான், என்னையும் 165 ஐயும் பார்த்துச் சின்ன எசமான் கேலியாப் பேசுதுங்க. 'எய்! மத்தாப்புக் குச்சிங்களா! இனிமே நீங்க இரண்டு பேரும் என்னைக் கைதி மாதிரிப் பள்ளிக்கூடம் கூட்டிப் போகவேண்டாம். வீட்டுக்கு அழைத்து வரவும் வேண்டாம்'னு சொல்லிட்டுதுங்க. எங்களை எப்போதும் சிரிச்சு நையாண்டி பண்ணுதுங்க!" என்று கூறினான் 98-ஆம் நம்பர் கான்ஸ்டேபிள்.

'சரி; ஆரம்பமாகிவிட்டது போலிருக்கு திருவிளையாடல்' என்று எண்ணிய சுந்தரவதனம், "சரி சரி, சாயங்காலம் அவனை விசாரிக்கிறேன். நீ நேரே பீமசேன ஸ்கூலுக்குப் போய், அவன் வகுப்புக்குப் போய்ச் சேர்ந்து விட்டானா என்று பார்த்துவிட்டு, ஸ்டேஷனுக்கு வந்து தகவல் சொல். நான் ஸ்டேஷனுக்குப் போகிறேன்" என்று உத்தரவிட்டார்.

இந்த வேலையைக் கவனிக்க 98-ஆம் நம்பர் புறப்பட்டான். அவன் பள்ளிக்கூடத்தை அடைந்தான். போலீஸ் உடுப்புக்களில்லாமல், ரோடு ஓரமாக இருந்த ரகுவின் வகுப்பு அறைக்கு அருகே, உள்ளே வகுப்பில் என்ன நடக்கிறது என்று எட்டிப் பார்த்தான்.

சேது வாத்தியார் பாடம் தொடங்கு முன்பாக 'அட்டென்டன்ஸ்' ரிஜிஸ்தரைத் தேடினார். அதை மேஜைமீது காணவில்லை. எல்லாப் பிள்ளைகளையும் விசாரித்தார். ஒருவரும் தங்களுக்குத் தெரியாது என்று கையை விரித்தார்கள். 'சரி, வகுப்பு முடியும் போது பார்க்கலாம்' என்று பாடத்தை நடத்த ஆரம்பித்தார். ஒரு பாட்டைப் படித்துவிட்டு, "நல்லவர்கள் பெய் என்றால் பெய்யும் மழை" என்ற அடிக்கு அர்த்தம் சொல்ல ஆரம்பித்தார்.

உடனே என்ன தோன்றியதோ என்னவோ ரகு இடத்தை விட்டு எழுந்து, "நில் என்றால் மழை பெய்யாமல் நின்றுவிடுமோ, ஸார்?" என்று குறும்புத்தனமாக ஒரு



கேள்வியைக் கேட்டான். வாத்தியாருக்குத் தெரியாமல் மற்றப் பையன்களைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டினான். வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களும் இதைக் கேட்டு, 'கொல்' என்று சிரித்தார்கள். சிலர் எதிரே இருந்த மேஜையில் தடதட வென்று கையைத் தட்டி ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

சேது வாத்தியாருக்குக் கோபம் தலைகால் தெரியாமல் வந்துவிட்டது. மேஜை ஏதோ குற்றம் செய்துவிட்ட மாதிரி அதன் மீதே பிரம்பினால், 'சடார் சடார்' என்று தட்டினார். இதைப் பார்த்ததும் மாணவர்களின் சிரிப்பு மேலும் அதிகமாயிற்று. ரகுவும் இதில் கலந்துகொண்டான். அவன் குரல் தனித்துக் கேட்கும்படி உரக்கவும் சிரித்தான். சேது வாத்தியாருக்கு இதைப் பொறுக்க முடியவில்லை. ஆத்திரத்தால் துடிக்கும் மூக்கின் நுனியில் இருந்த கண்ணாடி பொருந்தாமல் கழன்று கழன்று

ஏய் அதிகப் பிரசங்கி! ஏறுடா பெஞ்சிமேல்!

விழுந்தது. அதைக் கையால் தள்ளிவிட்டுக் கொண்டார். மறுபடியும் கீழே விழுந்தது. இதுவும் மாணவர் சிரிப்புக்கு அதிகமாக இடம் கொடுத்தது. அவர்கள் குலுங்கக் குலுங்கச் சிரித்தது சேது வாத்தியாருக்குப் பற்றி யெரிந்தது.

எரிச்சல் தாங்காமல், "எய், அதிகப் பிரசங்கி! என்னடா நடுவிலே குறுக்குக் கேள்வி? எறுடா பெஞ்சி மேல்!" என்று ரகுவைப் பார்த்துச் சத்தம் போட்டார்.

"கேள்வி கேட்டால் என்ன தப்பாம்? இதுக்காகப் பெஞ்சி மேலே எறணுமோ?" என்று என்னென்னவோ முணுமுணுத்தான் ரகு. விரல் நகத்தைக் கடித்துக்கொண்டு, பெஞ்சிமேல் எறினான். எல்லா மாணவர்களும் அவனுடைய துணிவை மனத்துக்குள் வியந்து கொண்டார்கள்.

பெஞ்சிமீது ரகுவை நிறுத்திய பிறகும் சேது வாத்தியாருக்குக் கோபம் தணியவில்லை. இருப்பினும் அதைக் கொஞ்சம் அடக்கிக்கொண்டு, போர்டிலே பாதியில் நின்று போன பாட்டுக்குப் பதவுரை எழுதப் போனார்.

வகுப்பில் மறுபடியும் ஒரு பகுதியில் சலீரென்று சிரிப்புச் சத்தம் எழுந்தது. என்னவென்று அவர் திரும்பிப் பார்த்தார்.

பெஞ்சிமேல் நின்ற ரகு கீழே குனிந்து பரசுவையும் தன்னோடு வந்து பெஞ்சிமீது எறி நிற்கும்படி சைகை காட்டிசகொண்டிருந்தான். அவனும் அதன்படி பெஞ்சியில் எற ஆரம்பித்தபோதுதான் அவன் இருந்த வரிசையிலுள்ள மாணவர்கள் அப்படிச் சிரித்தார்கள்.

இந்த அட்டகாசங்களையெல்லாம் சேது வாத்தியாரால் சகிக்க முடியவில்லை. "எய், பழைய கொட்டாப்புளி! நீ எண்டா பெஞ்சி மேல் எறுகிறாய்?" என்று பரசுவின் மீது சீறி விழுந்தார். பையன்கள் எல்லாம் இதைப் பார்த்துக் கையால் வாயை மூடிக்கொண்டு சிரித்தார்கள்.

பரசு பதில் சொல்வதற்கு முன்பாக, ரகுவே பரசுவுக்காகப் பதில் சொன்னான்.

"அவன்தான் ஸார், என்னை அந்தமாதிரி உங்களைக் கேட்கச் சொன்னான். அதனால்தான் நான் கேட்டேன். ஆகையால் அவனும் தானே ஸார், பெஞ்சிமேலே ஏறிநிக்கணும்? அதற்காகத்தான் நானே அவனை பெஞ்சுமீது ஏறச் சொன்னேன்!" என்று ரகு சாதுபோலக் கூறினான்.

இதைக் கேட்டதும் பின் வரிசை மாணவர்களும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். சேது அந்தப் பக்கம் பார்த்தார். பெஞ்சுமீது நின்ற ரகுவும் பரசுவும் முகத்தைச் சுளித்துக் கண்ணைச் சிமிட்டினார்கள்.

இந்தச் சமயத்தில் ரகு, "ஸார்! ஸார்! உங்க தலையிலுள்ள டர்பன் சரியாக இல்லை, ஸார். நெற்றிப் பக்கத்திலே முடிச்சு மாதிரி இருக்கு! அதைப் பார்த்துத்தான் அந்தப் பக்கத்திலே பையன்கள் கலாட்டா செய்கிறார்கள்" என்று சொல்லிவிட்டு இரு கையாலும் தன்வாயைப் பொத்திக்கொண்டு சிரித்தான். டர்பனைக் கவனிக்காமலிருந்த எதிர் வரிசை மாணவர்களைக் கூப்பிட்டு அந்த அழகைக் கவனிக்கும்படி சுட்டிக் காட்டுவது மாதிரிதான் இருந்தது ரகு பேசிய தோரணை. டர்பனைச் சரி செய்துகொண்டு, "எய் புதுக் கழுதை! வாயை அடக்கு! என்னடா இளிப்பு? உன் தர்பாரெல்லாம் வீட்டோடு வைத்துக் கொள்" என்றார் வாத்தியார்.

இதற்குள் அவருடைய மூக்குக் கண்ணாடி நழுவித் தரையில் விழுந்து நொறுங்கியது. பையன்கள் சீர்வாணம்மாதிரி 'கர்கர்' என்று சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

"இதோடு நிற்கிறீர்களா? ஹெட்மாஸ்டரிடம் போய்ச் சொல்லி உங்கள் தோலை உரித்துவிடச் சொல்லட்டுமா?" என்று சேது வாத்தியார் கர்ஜிக்கவே வகுப்பில் சற்று அமைதி நிலவியது. வாத்தியார் மேலே அர்த்தம் எழுத ஆரம்பித்தார்.

பெஞ்சுமீது நின்ற இருவரும் 'களுக்' என்று திரும்பவும் சிரித்தார்கள். "எய் உலக்கைகளா? என்னடா, மறுபடியும் ஆனந்தம்?" என்று கேட்டார் அவர். அப்போது போர்டின் பின்புறமிருந்து முதலில் காணாமல் போயிருந்த 'அட்டென்டன்ஸ்' ரிஜிஸ்தர் பொத்தென்று கீழே விழுந்தது.

"டேய், இதை யாரடா இங்கே ஒளித்து வைத்தது?" என்றார். யாரும் சரியான பதில் சொல்லவில்லை. ரகு சிரித்த மாதிரியிலிருந்து யார் இதைச் செய்திருப்பார்கள் என்பதில் சேது வாத்தியாருக்குச் சந்தேகம் இல்லை. அவருக்கு வேறு வழி தோன்றவில்லை.

ஆகவே அவர் ரகுவை நோக்கி, "அட, வாலில்லாக் குரங்கே! நீயும் உன் தோழனும் உடனே வகுப்பை விட்டு ஓடுங்கள். இனி இங்கே வரக் கூடாது. ம். கெட் அவுட்!" என்று இருவரையும் வெளியே துரத்திவிட்டார். அன்று. எதிர்பாராத விதமாக வகுப்பில் ஏக அமளியாகப் போய்விட்டதை நினைத்து எல்லா மாணவர்களும் திகைத்துப் போனார்கள்.

இன்று விழித்த வேளை நன்றாக இல்லை என்று எண்ணியபடி ரகு தன் புத்தகப் பையோடு வகுப்பை விட்டு, மெதுவாக வந்துகொண்

டிருந்தான். அவன் நிழல் மாதிரி பரசுவும் பின்னால் போய்க்கொண் டிருந்தான்.

இருவரும் வெளியே வந்த போது அங்கே நின்றிருந்த 98-ஆம் நம்பர் கான்ஸ்டேபிள் சாதாரண உடையில் முன்னால் நடந்து போவதை ரகு கவனித் தான். 'சொரேர்' என்றது.

'சரி; இன்று வீட்டில் ஏதோ பெரிய ரகளை நடக்கத்தான் போ கிறது. இங்கே நடந்ததை எல்லாம் இந்த மத்தாப்பூக் குச்சி மாமா விடம் நன்றாக வத்தி வைத்துவிடு வது நிச்சயம்' என்று அவன் தீர் மானித்தான்.

மாமா கேட்டால் என்ன சொல் வது? இதை நினைத்தபடியே ரோட்டில் நடந்துகொண் டிருந் தான் ரகு. ஆனால் மாமா இரவு தானே ஸ்டேஷனிலிருந்து வரு வார்? அதற்குள் எதாவது பதில் தயார் செய்துகொண்டுவிடலாம் என்று ஒரு குருட்டுத் தைரியமும் கூடவே தோன்றியது.

வீட்டுக்குள் நுழைந்த போது ரகு ஆச்சரியத் தால் திடுக்கிட்டான். வழக்கத்துக்கு மாறாக அங்கே அவன் மாமா முகத்தைக் கடுமையாக வைத்துக்கொண்டு 'உர்' என்று உட்கார்ந்திருந் தார்.

புத்தகப் பையை அல மாரியில் வைக்க மெது வாக நடந்து வந்த அவன் மாமாவின் ஆத் திரமான குரல் கேட்டு அதிர்ந்து போனான்.

"என்டா நீவட்டி! இன்று காலை முதல் நீ என்னவெல்லாம் பண்ணினே? நடந்ததை நடந்தபடியே சொல்லு. எனக்கு எல்லாம் தெரியும். வா இப்படி?" என்று உறுமினார் அவர்.

98-ஆம் நம்பர் அப்போது, தன் சிவப்புக் குல்லாய் உள்ளே தெரி யும்படி கழுத்தை நீட்டி நீட்டிப் பார்த்தான். தன் எண்ணப்படியே விஷயம்நடந்திருந்ததைத் தெரிந்து கொண்டு விட்டான் ரகு.

இந்த நிலைமையில் என்ன பதிலைச் சொல்லி மாமாவின் கெடு பிடியிலிருந்து தப்புவது என்று மிரள மிரள விழித்துக்கொண் டிருந்தான். அதே சமயத்தில் 615-ஆம் நம்பர் அங்கே வந்து யாரோ அவரைப் பார்க்க வந் திருப்பதாகக் கட்டியம் கூறினான்! வந்தது யார்? (தொடரும்)



ஸ்பெஷல் ஆட்டம்

ஜாஜலி

வயலிலும் வரப்பிலும் விழுந்தடித்து ஓடிவந்துகொண்டிருந்தான் புவனேசன். வயல்களில் எல்லாம் கண்ணுக்கு எட்டிய வரையில் ஒற்றையடிப்பாதை விழுந்திருந்தது. தலையில் வகிடு எடுத்தாற்போல ஒற்றையடிப் பாதையைப் பார்க்க எவ்வளவு அழகாக இருக்கிறது!

புவனேசன் ஓடினான். எத்தனை நேரம்தான் ஓடமுடியும்? சிறிது நேரம் நடந்தான். மீண்டும் சிறு ஓட்டமாக ஓடினான். இரைத்தது. இன்னும் அரைமணிதான் இருக்கிறது, முதல் ஆட்டம் ஆரம்பிக்க. நேரமோ ஆகிவிட்டது. சூரியன் மேற்குத் திசையில் மஞ்சளாக, தங்கத் தாம்பாளத்தைப் போலத் தகதகவென்று ஜொலித்துக்கொண்டிருந்தான். இன்னும் ஐந்து நிமிஷத்தில் மறைந்துவிடுவான்.

ஒலிம்பிக் விளையாட்டுக் கலர்ப் படம் மேலையூரில் நடக்கிறது. அன்றுதான் கடைசி. இரண்டாவது ஆட்டம்கூடக் கிடையாது. மேட்டூர் அணையில் தண்ணீர் போதவில்லையாம். அதனால் மின்சார சப்ளையைக் குறைத்துவிட்டார்கள். முதல் ஆட்டத்தோடு சரி. ‘நேற்று முந்தாநாள் பார்த்திருக்கக்கூடாதா? இந்த அப்பா எப்பவும் இப்படித்தான். கடைசி நிமிஷம்வரையில் தட்டிக் கழித்துவிடுவார்’ என்று நொந்துகொண்டே போனான் புவனேசன்.

காவிரி ஆற்றுப் பாலத்தைக் கடக்கும்போது சூரியன் தங்கச் சக்கரத்தைப்போலச் சுழன்று சுழன்று இறங்கி மறைந்தான்.

ஆற்றில் புது வெள்ளம் கரை புரண்டு வந்துகொண்டிருந்தது. நொங்கும் நுரையுமாகக் கலங்கிய வெள்ளம் வந்தது. பஞ்சுப்பொதி போல நுரை முட்டைகள் திட்டுத் திட்டாக தண்ணீரின்மேல் மிதந்து வந்தன. கரையில் ஒரே கூட்டம். இருபது முப்பது சிறு பையன்கள், ‘ஒகோ ஒகோ’ என்று இரைச்சல் போட்டுக்கொண்டிருந்தார்கள். புது வெள்ளத்தைப் பார்க்கும்போது யாருடைய உள்ளம்தான் பொங்காது?

புது வெள்ளத்தில் குளிப்பது உடம்புக்கு ஆகாதுதான். ஆனால் உற்சாகம் தாங்காமல் பத்துப் பதினைந்து பையன்கள் ஆற்றில் தண்ணீரை ஒருவர்மேல் ஒருவர் இறைத்துக் காவிரியை இரண்டு பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

திடீரென்று ‘‘ஐயோ, அப்பா, க்ப், பாவ், ஆவ், எய், எய்!’’ என்று சத்தம் கேட்டது.

‘‘ஏய் ரமணி, சங்கு, பார்ரு, மாலி ஆத்தோட போறாண்டா!’’ என்று கூச்சல் கேட்டது.

‘‘ஐயையோ, டேய் டேய்!’’ என்று கரையிலிருந்தவர்கள் கையைப் பிசைந்தார்கள். புவனேசனுக்குச் சொரேர் என்றது. வேகமாக ஓடிவந்தான். ஒரே பாய்ச்ச

லாகப் பாய்ந்தான். நீரில் குதித்து விட்டான். கைவீச்சுப் போட்டுக் கொண்டு நீந்தினான். ஆற்றோடு நீந்தியதால் வேகமாக நீந்த முடிந்தது. முழுகிப்போகிற பையனின் மயிரை ஒரே லாவாக லாவினான். கிராப்புத் தலை நழுவிவிட்டது. மறுபடியும் கழுத்தைப் பிடித்து, ஒரு கையால் கைவீச்சுப் போட்டு நீந்தினான். பாரம் உள்ளே இழுத்தது. மறுபடியும் நழுவவிட்டு இடது கையால் அவனை அணைத்துக்கொண்டு வந்தான். அதிர்ஷ்ட வசமாக அங்கே ஒரு திட்டாக இருந்தது. அதில் ஏறிப் பையனை இழுத்துப் படுக்கையில் போட்டான். போன மாதம் பள்ளிக்கூடத்தில் காட்டியப் படக் காட்சியில் முழுகுகிறவனைக் காப்பாற்றும் காட்சியைக் காட்டினார்கள். அதைச் சரியாகக் கவனிக்காமல் சிரித்து விளையாடிக் கொண்டிருந்த தன் முட்டாள் தனம் இப்போதுதான் அவனுக்குத் தெரிந்தது. எல்லாப் பையன்களும் அங்கே ஓடிவந்தார்கள்.

புவனேசன் மாலி என்ற அந்தப் பையனைக் குப்புறப் படுக்கப் போட்டு, தலையைத் திருப்பி, சிறிது நேரம் அவனுடைய இடுப்பில் கைகளை வைத்து அமுக்கினான். பிறகு இரண்டு பையன்களை அதே போலச் செய்யச் சொல்லிவிட்டு, ஈரம் சொட்டச் சொட்ட ஜோசப் டாக்டர் வீட்டுக்கு ஓடினான்.

"சார், சார்! தயவுசெய்து வாங்க, சார். உடனே வாங்க" என்றான்.



"என்னடா தம்பி, நீ யாரு? என்ன ஆயிட்டுது?" என்று டாக்டரும் பறந்தார்.

"பையன் ஆத்திலே முழுகிட்டான், சார். கரையிலே போட்டாச்சு. மயக்கம். வாங்க சார், வாங்க சார்!"

டாக்டரோடு பேசிக்கொண்டிருந்தவரும் டாக்டரோடு கிளம்பி விட்டார்.

டாக்டரைக் கண்டதும் கூட்டம் விலகி வழிவிட்டது. டாக்டர் செயற்கை முறையில் சுவாசத்தை மீண்டும் கொண்டு வர உதவிகள் செய்தார். அரைமணி கழித்துச் சுவாசம் வந்தது. டாக்டரோடு வந்தவரும் புவனேசனும் அவர் சொல்லுகிறபடி கூடமாட உதவி செய்தார்கள். மற்றப் பையன்கள், "சார் சார், இவன் எங்க ஸ்கூல் பையன், சார். இவன் இல்லாவிட்டால் மாலி ஆற்றோடு போயிருப்பான், சார்" என்று புவனேசனைக் காட்டினார்கள்.

"தம்பி, நீ சட்டையை எல்லாம் கழற்றிப் போடு. அரைமணியாச் சொட்டச் சொட்ட நிற்கிறியே" என்று டாக்டரின் நண்பர் அன்புடன் சொன்னார்.

"வீடு கிட்ட இல்லே, சார். எனக்கு ஊர் புஞ்சைக்குடி. சினிமாப் பார்க்க அவசர அவசரமாய் ஓடி வந்துட்டிருந்தேன். பாலத்துக்கிட்டே வரப்போ, கூச்சல் கேட்டுது. இந்தப் பையன் ஆத்தோடு போயிட்டிருந்தான். குதிச்சிட்டேன்" என்றான் புவனேசன்.

"சரி, எங்க வீட்டுக்கு வா. டிராயரும் சட்டையும் தறேன். போட்டுக்கிட்டுச் சினிமாக்குப் போ."

"எதுக்கு சார்? வாண்டாம் சார்."

"இப்படியே நின்னு ஜுரம் வந்திடும். வாடா பைத்தியம்."

உயிர் பிழைத்த பையனை வீட்டில் கொண்டு விட்டு விட்டு டாக்டரும் நண்பரும் புவனேசனை அழைத்துப் போனார்கள். வேறு சட்டையையும் டிராயரையும் மாட்டி விட்டுப் போகச் சொன்னார் டாக்டர் நண்பர்.

"நல்ல பையன்" என்றார் டாக்டர்.

"நான் போயிட்டு வறேன், சார். சினிமா ஆரம்பிச்சு ஒரு மணி ஆயிருக்குமா?"

"ஒரு மணிக்கு மேலேயே ஆயிருக்கும். சட்டுனு போ. ராத்திரி எங்கே படுத்துக்கொள்வாய்?"

"யாராவது சிநேகிதப் பையன் வீட்டிலே" என்று பதில் சொல்லிக்கொண்டே ஓடினான் அவன். அவனுக்கு அவசரம்! கடைத்தெரு சந்தில் நுழைந்து, ஓடினான். ஒரு மணிக்குமேல் ஆய்விட்டதா, புக்கிங் ஆபீஸில் ஒருவரும் இல்லை. இரண்டு மூன்று நிமிஷம் அதில் வேறு தாமதம். டிக்கட்டைப் பெற்றுக்கொண்டு உள்ளே வந்தான்.

படம் பாதி ஓடி விட்டது. நல்ல வேளையாக நீந்திப் போனாலும் நனைந்த டிராயரில் மூன்று அணுக் காசும் பத்திரமாக விழுந்து விடாமல் ஒட்டிக்கொண்டிருந்ததே! கடவுளுக்கு அதற்காக நன்றி செலுத்தினான் புவனேசன்.

கலர்ப் படம். அவன் போகும்போது பனி மலையில் சறுக்குப் போட்டி நடந்துகொண்டிருந்தது. 'ஆகா என்ன அருமையான படம்! முதலிலேயே வரவில்லையே. நல்ல மாலிடா இவன்! நல்ல சமயத்தில் ஆற்றில் விழுந்து தொலைத்



தான்! நல்ல வேளையாகப் பிழைத்தானே. கடவுள்தான் காப்பாற்றினார்.. ஹ¨ம். முதலிலேயே வந்திருக்கலாம்' என்று மாறி மாறி எண்ணிக்கொண்டிருந்தான் புவனேசன். முதலிலிருந்து கடைசி வரையில் அருமையான படம். பாதியாவது பார்க்க முடிந்ததே!

படம் முடிந்தது. கூட்டம் கலைந்தது. ஒவ்வொருவராக எழுந்து போனார்கள். புவனேசன் வெளியே வந்ததும், "டேய், வாடா இங்கே" என்று ஒரு குரல் கேட்டது. ஒரு முரட்டு ஆசாமி கூப்பிட்டான். வாட்ட சாட்டமான உயரம், பெரிய மீசை, ஒரு பனியன். அகலமான பெல்ட். புவனேசனுக்குத் திகிலினால் குலை நடுங்கிற்று. அடிவயிறு பகீர் என்றது.

"என், சார்?"

"போடா, உள்ளே.."

புவனேசன் நடுங்கினான்.

"போடான்னா!"

"எதுக்குங்க?"

"போடான்னா."

"புவனேசன் வெட வெடவென்று நடுங்கிக்கொண்டே உள்ளே போனான். பின்னால் அந்த ஆள் வந்தான்.

"உட்கார் இப்படி" என்று ஒரு நாற்காலியைக் காட்டினான். "எழுந்திருக்கப்படாது இதை விட்டு. எழுந்தியோ, தெரியுமா?"

புவனேசனுக்கு அழுகை வந்து விட்டது.

திடீரென்று விளக்கு அணைந்தது.

"சார் என்னை விட்டுடுங்க. நான் ஒன்றும் செய்யலியே" என்று அழுதான்.

"ம்..மூடு வாயை!"

ஒரே இருள். பயங்கரமான இருள். திடீரென்று எதிரே திரையில் 'சென்சார் சர்டிபிகேட்' தெரிந்தது. இங்கிலீஷ் வாத்தியம் ஒலித்தது. சினிமா தொடங்கிற்று. பெயர்கள் ஒன்றொன்றாக வந்தன. பிறகு ஒலிம்பிக் தீவட்டியைப் பிடித்துக்கொண்டு ஒருவன் ஓடினான். தொடர்ந்து ஓட்டப் பந்தயம், ஹைஜம்ப், லாங் ஜம்ப், சைகிள் பந்தயம், நீச்சுப் போட்டி, தட்டு எறியும் போட்டி!...

புவனேசனுக்குப் பயம் தெளிந்து விட்டது. படம் பார்ப்பதில் தன்னையும் மறந்து விட்டான்.

"இடை வேளை-"

பளிச்சென்று விளக்குகள் எரிந்தன. கொட்டகையில் ஈ, காக்கை இல்லை. அவன் மட்டுந்தான் இருந்தான்.

திடீரென்று, "ஹஹ்ஹஹ்ஹா" என்று சிரிப்புக் கேட்டது.

மிரண்டு போய்ப் பின்பக்கம் திரும்பினான் புவனேசன்.

அவரேதான்; டாக்டரின் நண்பர் சிரித்துக்கொண்டு வந்து அவன் தோளில் கையைப் போட்டார்.

"என்னடா தம்பி, படம் நல்லா இருக்கா?"

"நீங்களா சார்?" என்றான் புவனேசன்.

"பயப்படாதே, உனக்காக நடக்கிறது. பையனை முழுகிப் போகாமல் காப்பாத்தினீல்ல?" என்று சிரித்தார் அவர்.

"நீங்க யாரு, சார்?"

"நான்தாண்டா சினிமா முதலாளி" என்றார் அவர்.

"ஆ! சினிமா முதலாளியா! உங்களுதா இந்தச் சினிமா!"

புவனேசனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

"பின் பாதி நீ பாத்தாச்சு. இருந்தாலும் இன்னொரு தடவை பாரு. எய், ஆரம்பி" என்றார் அவர். படம் மறுபடியும் ஆரம்பித்தது. இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் அந்த மீசைக்காரன் ஒரு தட்டு நிறைய பிஸ்கட்டு,

முதல் திருடன்: என்ன அண்ணே, வருத்தமா உக்காந்திருக்கே!

இரண்டாவது திருடன்: ஒண்ணுமில்லே தம்பி! தீபாவளிச் செலவுக்கு ஐம்பது ரூபாய் தேடி வைச்சிருந்தேன். அதை எவனோ நம்பகிட்டேயிருந்தே கிளப்பிக்கிட்டுப் போயிட்டான்!

வாழைப்பழம், ஆரஞ்சுக் கிரஷ் எல்லாம் கொண்டு வந்தான்.

"சாப்பிடு" என்றார் முதலாளி. புவனேசன் சாப்பிடாமல் என்ன செய்வது?

ஆட்டம் முடிந்ததும் அவருடைய மோட்டாரிலேயே அவர் புவனேசனை வீட்டுக்கு அழைத்துப் போனார்.

காலையில் ஞாயிற்றுக்கிழமை. இட்டிலி, காபி சாப்பிட்டுவிட்டு, அவரிடம் சொல்லிக்கொண்டு ஊருக்கு வந்தான் புவனேசன்.

மறு நாள் பள்ளிக்கூடம் ஆரம்பிக்குமுன் எல்லாப் பையன்களையும் கூட்டி அவர்களுக்கு முன்னால் தலைமை ஆசிரியர் புவனேசனின் துணிவை விரிவாகச் சொல்லி அவனுக்குச் சபாஷ் கொடுத்தார்.

"அருமை மாணவர்களே, புவனேசன் மாதிரி நீங்கள் யாவரும் இருக்க முயலவேண்டும். டாக்டருடன் இருந்த டாக்கீஸ் முதலாளி அண்ணாமலை அவர்கள் இவனை மாத்திரம் வைத்து ஒரு ஸ்பெஷல் ஷோவே போட்டுவிட்டார். இது தானாக வந்தது. ஆனால் புகழ்ச்சிக்கும் பலனுக்கும் ஆசைப்படாமல் நீங்கள் பிறருக்கு உதவி செய்ய வேண்டும். புவனேசன் ஸ்பெஷல் ஷோ கிடைக்கும் என்றா எதிர்பார்த்தான்? இல்லை. கடமையைச செய்தான். . தற்செயலாக முதலாளி அங்கே வந்திருந்தவர் சந்தோஷப்பட்டு இதையெல்லாம் செய்தார். ஆனால் எப்போதும் இதெல்லாம் கிடைக்காது. கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதும் தவறு. ஒரு முக்கியமான செய்தி! அண்ணாமலை அவர்கள் இன்னும் ஒன்று செய்திருக்கிறார். பள்ளிக்கூடப் படிப்பு முடியும் வரையில் சம்பளம், புத்தகங்கள் எல்லாவற்றையும் தாமே புவனேசனுக்குக் கொடுக்கப் போவதாக முடிவு செய்திருக்கிறார்."

ஆயிரம் மாணவர்களின் கரகோஷம் வானைப் பிளந்தது. ஒய ஐந்து நிமிஷம் ஆயிற்று.

புகழ்ச்சியைக் கண்டு நாணமடைந்த புவனேசன் கடைசியில் தலைமை ஆசிரியர் சொன்னதைக் கேட்டதும் திகைப்புற்றான். சினிமா முதலாளியின் மலர்ந்த இனிய முகம் அவன் கண்முன் வந்து நின்றது. அவனுடைய நெஞ்சு தழுதழுத்தது. கண்ணிலிருந்து நீர் பெருகிற்று.

பெண்: அம்மா! ஒரு பொம்மனாட்டி சர்க்கஸ்ஸிலே ஒரு சிங்கத்தை ஆட்டுக்குட்டி மாதிரி அடக்கிப் பழக்கியிருக்கா அம்மா!

அம்மா: பாத்தியா? உங்க அப்பாகிட்டே போய்ச் சொல்லு!

மரக் குதிரை

"விஜயா, இங்கே வாம்மா மணி ஆகிறது. இன்னும்உன் மரக்குதிரையை விடமாட்டேன் என்கிறாயே. எவ்வளவு நாழிகை விளையாடுவது? வந்து தூங்கு" என்றாள் விஜயாவின் அம்மா. விஜயா, "மரக் குதிரையைப்பற்றி ஒரு கதை சொன்னாத் தான் தூங்குவேன்" என்றாள். "சரி அதற்கென்ன சொல்கிறேன். சமர்த்தாகத் தூங்கிவிட வேண்டும்" என்றாள் அம்மா.

"நம் தோட்டத்தில் ஒரு பெரிய மரம் இருந்தது. அது வெகு நாளைய மரம். ஒரு நாள் புயல்காற்று அடித்தது. காற்று என்றால் அந்த மாதிரிக் காற்று என்றைக்குமே அடித்தது இல்லை. அவ்வளவு பெரிய காற்று. கூடவே பெருத்த மழையும் பெய்தது. மரம் பூமியைவிட்டுப் பெயர்ந்து 'தொபகடீர்' என்று கீழே விழுந்துவிட்டது."

"ஐயையோ, மரத்துக்கு ஏதேனும் அடிபட்டுவிட்டதா, அம்மா!" என்றாள் விஜயா.



"அதெல்லாம் ஒன்றுமில்லை. ஜாக்கிரதையாகத்தான் பார்த்துக் கீழே விழுந்தது. கொஞ்ச நாளைக்குப் பிறகு உன் அப்பா அந்த மரத்தில் நாற்காலிகள், மேஜைகள், பீரோக்கள் எல்லாம் தச்சனை வைத்துக்கொண்டு செய்தார். தான் பிறருக்கு உபயோகமானதைக் கண்டு ப்ரம சந்தோஷப்பட்டது. பாவம், ஒரு சிறு துண்டு மரந்தான் அநாதையாகக் கிடந்தது. தன் கூட இருந்த பாகமெல்லாம் நாற்காலியாகவும் மேஜையாகவும் போய் விட்டதே. தன்னை ஒருவரும் லக்ஷியம் செய்யவில்லையே என்று எங்கிற்று. இப்படி அநாதையாக இருப்பதை விட யார் கையிலேனும் அகப்பட்டு அடுப்பில் விழுந்து எரிந்து விடுவதே மேல் என்று இருந்தது.

"இப்படி இருக்கும்போது ஒரு நாள் அது என் கண்ணில் பட்டது. பேஷ்; அடுப்புக்கு உதவும் என்று எடுத்து வந்தேன். உன் அப்பா என்னைக் கூப்பிட்டு, 'சீ, அதை அடுப்பில் வைக்காதே. என்னி

டம் கொடு' என்றார். உன் அப்பாவுக்கு மரப்பொம்மை பண்ணுவதென்றால் ரொம்பப் பிடிக்கும். உடனே சட்டென்று அப்படியும் இப்படியுமாகச் சீவி, ஒரு நொடியில் ஒரு குதிரைமாதிரிச்செய்துவிட்டார். அடிக்கடி வெளியில் போய் நிஜக் குதிரையைப் பார்த்து விட்டு, அதேபோல முதுகில் சேணம், கடிவாளம் எல்லாம் வைத்தார். குதிரைக்கு வர்ண மும் கொடுத்தார். கடைசியில் கால்களில் சக்கரம் வைத்து இழுப்பதற்கு வசதி செய் தார். அப்பொழுது நீ பிறக்க வில்லை. ரொம்ப நாள் வரையிலும் குதிரை இங்கேயே இருந்தது.

"அநாதை மரத்துண்டை இப் படி அழகான குதிரையாக ஆக்கி அடுப்பிலிருந்து காப்பாற் றின உன் அப்பாவுக்குக் குதிரை என்றைக்கும் நன்றி செலுத்தத் தயாராக இருந்தது. இருந்தா லும் அதன் முகக் குறிப்பில் இன்னும் ஏதோ குறை காணப்பட்டது. இவ்வளவு அழகான தன்னை வைத்து விளை யாட, வீட்டில் ஒரு குழந்தை இல்லையே என்று ஏங்கிற்று. நாங்களும் ஏங்கினோம். மரக் குதிரையின் பிரார்த்தனை வீண் போகவில்லை. கொஞ்ச நாளில் நீ தோன்றினாய். இப்பொழுது பார், அதன் முகத்தில் சந்தோ ஷத்தை!" என்று சொல்லி முடித் தாள் அம்மா.

விஜயாவுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. குதிரை யைப் பார்த்து, "நாம் இரு வரும் எவ்வளவு சந்தோஷ மாக இருக்கிறோம்! நீ எனக்குக் கிடைத்தாயே என்று நினைத்துச் சந்தோஷப்பட்டேன். ஆனால் உன் கதையைக் கேட்ட பிறகு உன் சந்தோஷம் என் சந்தோ ஷத்தையும் மீறியதாகத்தான் இருக்கும் போலிருக்கிறது!" என்று சொல்லி, குதிரையை அணைத்த வண்ணம் தூங்கினாள்.

சண்டையும் சமாதானமும்

ஸ்ரீமான் தனபால் பிள்ளை கைப்பிரம்பை எடுத்துக்கொண்டு பீச்சுக் குப் புறப்பட்டார். தெரு முனையில் பலர் கூட்டமாக நின்றார்கள்.

அந்தக் கூட்டத்தருகில் வந்ததும் அங்கே இரண்டு பேர் சண்டை போடுவதை அவர் பார்த்தார். அவர் கூட்டத்தைப் பார்த்து, "நீங்கள் இவ்வளவு பேர் இருக்கிறீர்களே, யாராவது இருவர் வந்து சமாதானம் செய்து வைக்கக்கூடாதா?" என்று கேட்டார். உடனே இரண்டு பேர் தைரியத்துடன் சமாதானம் செய்ய முன் வந்தனர்.

ஒரு பெரிய சண்டையை நிறுத்தி விட்டோம் என்கிற எண்ணத் துடன் தனபால் பிள்ளை புறப்பட்டார். மாலை ஆறு மணிக்கு அவர் அதே வழியாக வீட்டுக்குத் திரும்பிக்கொண் டிருந்தார். இரண்டு மணி முன்பு சண்டை நடந்ததே அதே இடத்தில் இன்னும் கூட்டம் கலைய வில்லை. இதைக் கண்டபிள்ளைக்கு ஆத்திரம் வந்தது.

அங்கிருந்த ஒருவனை அழைத்து, "ஏண்டா, இன்னுமா சண்டை நடக்கிறது?" என்று கேட்டார்.

அதற்கு அவன், "ஆமாங்க, நீங்க இரண்டு பேரை சமாதானம் செய்யச் சொன்னீர்களே? அவர்கள் இருவருக்கும் இப்போது சண்டை நடக்குதுங்க" என்றான்.

—சு. நடராஜன் (N. 149).

‘சசி’

ராதா-கிருஷ்ணன் விளையாட்டு

ராதையும் கிருஷ்ணனும் புன்னை மரத் தடியில் ஒளிந்து பிடித்து விளையாடுகிறார்கள். முதலில் சின்னப் படத்தைப் பார்த்து, அட்டையை நன்றாகக் கோட்டோடுவெட்டிக்கொள்ளுங்கள். ராதையை மரத்துக்குப் பின்புறமும் கிருஷ்ணனை மரத்தின் நடுவில் உள்ள துவாரம் வழியாகவும் செருக வேண்டும். கீழேயுள்ள கோட்டை அந்த அளவுக்கு வெட்டிக் கொண்டு அட்டையை அதன் வழியாக வெளியே விடுங்கள். அட்டையை இடம் வலமாகத் தள்ளினால் கிருஷ்ணன் பிடிக்கப் போகும் போது ராதை ஒளிந்து கொள்வாள். நீங்கள் செய்து பாருங்கள்.

போலீஸ் திருடன்

★

த்தில் டண் டண் என்று 10 அடித்தது. பங்களா அணைந்துவிட்டன. கள் அவரவர் இடங்களில் படுத்துக் விட்டார்கள். வின்  போட்டுப் பூட்டியிருந்தது. ஒரு அணிந்த உருவம் மறைவிலிருந்து வெளிப்பட்டு மீது ஏறி பங்களா உட்புறத்தில் குதித்தது. மறைவில் இருந்த மெல்லப் ஏறி வந்ததைக் கவனிக்கவில்லை. உருவம் புறமாக மேலே ஏறி யை அடைந்தது. அங்கும் விளக்கு எரியவில்லை. முகமூடிக்குப் பின்னால் 1 வுக்குள் குதித்தான். முகமூடியைப் போலவே அவன் போலீஸ் உடுப்புடன் வழியாக மாடியை அடைந்தான். போலப் பாய்ந்து போல யைப்

த்துக்கொண்டான். அவனிடம் இருந்த ச்
கொத்தை வாங்கிக் கொண்டான். னல் சுட்டு விடு
வதாக, யைக் காட்டிப் பயமுறுத்தினன்.
மேல் வைத்து இரும்புப் உள்ள அறைக்
குள் நுழைந்தான். யைத் திறந்தான். களை
யும் களையும் க்களையும் களையும்

தன்னிடம் இருந்த யில் திணித்துக்கொண்டான். முக
மூடியிடம் வந்தான். என்று பற்களைக்
காட்டினன். "அண்ணே, நானும் தான். சும்மா
உடையில் திருட வந்தேன்" என்றான்.
போலீஸ் உடையில் இருந்த திருடனைப் பிடித்து
மாட்டினன். "தம்பி! நான் 1 நிஜமான தான்.
உன்னைப் பிடிக்க வேஷத்தில் வந்தேன்! யை
நீட்டு" என்றான். உண்மைப் வெற்றியுடன் சிரித்
தான். யுடன் இருந்த கொட்டக்
கொட்ட த்தான். எப்படி இந்தக் ?

தீபாவளி நாடகம்

ஜி.எஸ்.மணி

கண்ணபுரம் சிறுவர் சங்கம் கடந்த தீபாவளியன்றுதான் பிறந்தது. தீபாவளிக்கு முதல் வருஷம் பூர்த்தியடைகிறது.

அன்றைத் தினம் உருப்படியாக எதாவது செய்யவேண்டும் என்ற ஆர்வம் அனைவருக்கும் அதிகமாக இருந்தது.

"யாராவது பெரிய மனிதர் தலைமையில் பெரிய கூட்டம் நடத்தி, சிற்றுண்டியும் வைக்கலாம்" என்று யோசனை கூறினான் சங்கக் காரியதரிசி விசு.

"பெரிய பண்ணையாரைத் தலைமை எற்கச் சொல்லலாமே" என்றான் பஞ்சாமி.

"அதுதாண்டா சரி. அப்படிச் செய்தால் கூட்டத்தை அவர்கள் வீட்டிலேயே நடத்திவிடலாம்;" என்று ஆமோதித்தான் சேது.

"அது சரி; அதனால் சின்னப் பண்ணையாருக்குக் கோபம் வந்து அவர் நமக்குக் கொடுத்துள்ள இலவச விடுதியைப் பிடுங்கிக்கொண்டுவிட்டால்?" என்ற கவலையைக் கிளப்பினான் துரை.

"அப்படியென்றால் சின்னப் பண்ணையாரையே தலைமை வகிக்கச் சொல்லலாமே?" என்றான் சேது.

"அப்போது பெரிய பண்ணையாருக்குக் கோபம் வந்து மாதந்தோறும் கொடுக்கும் ஒரு ரூபாய் நன்கொடையை நிறுத்திக் கொண்டுவிட்டால்—?"

"எதற்கும் எதாவது சொல்லிக் கொண்டேயிருந்தால் என்ன தாண்டா செய்வது?" என்று கோபப்பட்டான் தலைவன் ரமணி.

இவ்விதம் அநேக ஆட்சேப சமாதானங்கள் கூறப்பட்டன. ஒன்று பொருத்தமாய் இருந்தால் மற்றொன்று சரிப்படவில்லை.

கடைசியில் அனைவரும் சேர்ந்து தீபாவளியன்று இரவில் நரகாசுர வதம் என்ற நாடகம் போடுவதாகத் திட்டமிட்டார்கள்.

இன்ன பையனுக்கு இன்ன பாத்திரம் என்பதும் சச்சரவின்று அங்கீகாரமாயிற்று.

கடைசியில் அதிலும் ஒரே ஒரு பிரச்னை பாக்கியிருந்தது.

நரகாசுர வதத்தை எங்கே நடத்துவது?

"பெரிய பண்ணை வீடுதாண்டா அதற்குத் தகுந்த இடம்; அந்த வீட்டுக் கூடம் பெரிதாக இருக்கிறது; விசாலமாகவும் இருக்கிறது. நாலு பெரிய பெஞ்சுகளைச் சேர்ந்தாற்போல் போட்டுவிட்டு, முன்னுடி திரையும் கட்டிவிட்டால் பக்கா நாடக மேடையாகிவிடும்" என்றான் ரமணி.

அனைவரும் அதை ஆரவாரத்துடன் ஆமோதித்தார்கள்.

"ஆனால் அந்த வீட்டு மாமி பாலனுக்கும் ஒரு வேஷம் கொடுத்தால்தானே அங்கே நாடகம் நடத்தச் சம்மதிப்பாள்?" என்றான் ஒருவன்.

"அதுவும் உண்மைதானப்பா" என்றான் மற்றொருவன்.

பாலனும் அந்தக் கூட்டத்தில் இருந்தான். அவன் பெரிய பண்ணையாருக்கு ஒரே குழந்தை. செல்வத்துக்கும் செல்லத்துக்கும் கேட்பானேன்? அத்துடன் பாலனின் தாயார் ரொம்பக் கர்வியுங்கூட. ஊரில் மற்றவருக்கு நடப்பதைவிடத் தன் பங்கிற்கு எதுவும் ஒரு படி அதிகமாகவே நடக்கவேண்டும் என்ற கௌரவ மோகம் கொண்டவள்.

அந்த அம்மாளைப் பற்றிய நினைவு எழுந்ததும் சிறுவர்களின் நெஞ்சம் கலங்கியது.

"பாலனுக்கு வேஷம் தானே வேண்டும்? நரகாசுரனின் அரண்மனை வாயிற்காப்போனாகப் பாலனுக்கு வேஷம் தந்துவிட்டால் போகிறது!" என்று காரிய தரிசியான விசு பிரச்னைக்கு ஒரு வழியாகத் தீர்வு கட்டினான்.

பாலனுக்குப் பரம சந்தோஷம்; அங்கே இருந்த அத்தனை பேர்களிலும் அவனே வயதில் சிறியவன். ஆகவே, "ஏய், ஆமாண்டா! எங்கள் வீட்டிலேயே நாம் நாடகம் போடலாம்டா!" என்று குஷியுடன் கூவினான்.

"சரி, வா; இப்பவே உங்கள் அம்மாவிடம் போகலாம். இடம் கிடைத்து விட்டதென்றால் நாளைக்கே ஒத்திகை தொடங்கலாம். ஆச்சு; தீபாவளி நெருங்கி விட்டதே!" என்று சிறுவர்கள் வெகு உற்சாகத்துடன் இடத்தைக் கேட்கப் போனார்கள்.

அந்த அம்மாள் சாப்பிட்டு விட்டு, கூடத்து ஊஞ்சல் பலகையில் படுத்திருந்தாள்.

மற்றப் பையன்களுக்கு முன்னதாகப் பாலன் ஓடிவந்தான். "அம்மா; எங்கள் சங்கத்திலே—தீபாவளிக்கு நாடகம் போடப் போகிறோம். நம் வீட்டிலேயே நாடகம் போடலாமா அம்மா?" என்று கெஞ்சினான் பாலன்.

"நாடகமா! என்ன நாடகம்?"



"நரகாசுர வதம்!" என்று எல்லோரும் ஒரே குரலில் கூவினார்கள்.

"அடியம்மா! இப்பவே சத்தம் காதை அடைக்கிறதே!" என்று சொல்லித் தன் இரு காதுகளையும் பொத்திக்கொண்டாள் பாலனின் தாய்.

"போம்மா! அந்த டிராமாவில் நானும் வேஷம் போட்டுக்கொள்ளப் போகிறேன், பாரம்மா!" என்று பெருமை பிடிபடாமல் குதூகலித்தான் பாலன்.

அம்மாளின் முகம் மலர்ந்தது. "ஓஹோ! டிராமாவில் நீயும் வரப் போகிறாயா! உனக்கு என்ன வேஷம்?" என்று கேட்டாள்.

"நான் நரகாசுரனின் அரண்மனை வாயிற்காப்பவன், அம்மா! பெரிய தடியைக் கையில் பிடித்துக்கொண்டு—'பாரா, உஷார்! பாரா, உஷார்!' என்று இப்படி நடப்பேன்!" என்று தத்ரூபமாக

அப்படியே நடித்துக் காண்பித்தான் பாலன். கிடைத்தற்கரிய பெரும் பதவி கிடைத்துவிட்டது போல் ராஜ கம்பீரத்துடன் நடை போட்டான். அத்தனை துடிப்பு இருந்தது அவன் நடிப்பிலே.

ஆனால் அவன் தாய் அந்தத் துள்ளலைக் காணவில்லை; அவள் முகம் கறுத்துவிட்டது.

"ஹூம்! போயும் போயும் வேலைக்காரன் வேஷம் தானா உனக்கு? குழந்தையிடம் இத்தனை அலட்சியமா இந்த ஊர்ப் பயல்களுக்கு? பாலனுக்குக் கிருஷ்ணன் வேஷம் கொடுத்தால்தான் உங்களுக்கு நாடகம் போட இடம் கொடுப்பேன். இல்லை என்றால் நடுத் தெருவில் உங்கள் நாடகத்தை நடத்திக் கொள்ளுங்கள்; என் குழந்தையும் வேலைக்காரன் வேஷத்தில் நடிக்க வரமாட்டான். இவனைப் பார்த்தால் வேலைக்காரனைப் போலவா படுகிறான் உங்கள் எரி கண்களுக்கு? எத்தனை அழகாய் நடித்துப் பேசுகிறான் குழந்தை! இவனுக்கு அரண்மனை வேலைக்காரன் வேஷமா? போங்களடா வெளியிலே! உங்கள் நாடகமுமாச்சு; வேஷமுமாச்சு! இத்தனூண்டு வாண்டுப் பயல்களுக்குக்கூட எங்களிடம் எவ்வளவு அருமை! வேலைக்காரனின் வீடு மட்டும் வேண்டுமோ உங்கள் நாடகத்துக்கு! மூஞ்சிகளையும் முகரக் கட்டைகளையும் பார்! போங்களடா!" என்று கூட வந்தவர்களிடம் எரிந்து விழுந்து விரட்டினாள்.

வந்த சிறுவர்கள், 'தப்பினோம் பிழைத்தோம்' என்று ஓடியே போய்விட்டார்கள். பாலன் மனமுடைந்து போய், தேம்பித் தேம்பி அழலானான்.



அம்மா அவனைக் கட்டி யணைத்துக்கொண்டு பற்பல சொல்லித் தேற்ற முயன்றாள்.

"உனக்குக் கட்டுக் கட்டாகப் பட்டாசும் மத்தாப்பும் வாங்கி வைத்திருக்கிறேனடா, கண்ணு; அந்தப் பயல்களோடு நீ சேராதே" என்று சொன்னாள்.

சிறுவனின் விம்மலும் விக்கலும் ஓயவில்லை.

"இதோ, என்னைப் பார், பாலா! உனக்கு ஜோராக கிருஷ்ணவேஷம் நானே போட்டு வைக்கிறேன்; நீ எனக்கு எதிரே நாடகம் போட்டு நடித்துக் காட்டு; என் கண்ணல்லவா?" என்று கொஞ்சினாள்.

பாலனின் அழுகை அதிகமாகிவிட்டது. என்னதான் சொல்லியும் அவன் ஆறுதல் அடையவில்லை. ஒரே பிடிவாதமாக முறுக்கிக் கொண்டு, கண்கள் சிவக்க, முகம் சிவக்க, அவன் வாசல் திண்ணையில் போய் உட்கார்ந்தான்.

தீபாவளி நெருங்கிவிட்டது.

சிறுவர் சங்கத்தினர் வேறிடத்திலே தங்கள் நாடகத்தை நடத்த முடிவு கட்டிவிட்டார்கள். ஆனந்தத்துடன் இங்கும் அங்கும் ஓடியோடிப் போய்க்கொண்டிருந்தார்கள்.

ஒருவன் கொத்துக் கொத்தாகப் புஷ்பங்களைக் கொணர்ந்து சேர்த்தான். ஒருவன் தன் வீட்டினுள்ளிருந்து அக்காள் கட்டிக் கொள்ளும் சிற்றாடையையும், ரவிக்கையையும் சுருட்டிக் எடுத்துக்கொண்டு, குதித்துக் குதித்து ஓடினான். பௌடர் டப்பாவை எடுத்துக்கொண்டு மற்றொருவன் ஓடினான். வேறொருவன் பெரிய பெரிய துப்பட்டிகளையும், சாக்குத் திரைகளையும் தூக்கமாட்டாமல் தூக்கிக்கொண்டு சீட்டியடித்துக் கொண்டே ஓடினான். அவரவர்கள் தங்கள் தங்கள் கையில் அகப்பட்ட பொருள்களை யெல்லாம் எடுத்துக் கொண்டு வந்து நாடகத்திற்குப் பெரும் ஆயத்தம் செய்தார்கள். சாதாரண நடையே இல்லை; குடல் தெறிக்க ஒரே ஓட்டம்தான்.

பாலன் அத்தனையையும் பார்த்துக்கொண்டே யிருந்தான். அவன் கண்களிலே ஒளி இல்லை; ஒரே ஏக்கம்தான்! இரண்டே நாளில்,

பாவம், அவனால் அதிக நேரம் அப்படிப் பேசாமல் இருக்க முடியவில்லை. அந்தப் பக்கமாய் ஓடிய ஒரு சிறுவனைப் பார்த்து, "அடே சோமு! எங்கே நாடகம் போடப்போகிறீர்கள்?'' என்று கேட்டான்.

"நாங்கள் எங்கே 'டிராமா' போட்டால் இனிமேல் உனக்கு என்னடா? உன் வீடு இல்லை என்றால் எங்களுக்கு வேறு இடமே கிடைக்காதோ? போடா, உன் வேலையைப் பார்த்துக் கொண்டு!'' என்று வெகு விறைப்புடன் பேசிவிட்டு ஓடினான். அவன் பெரிய வாய்த்துடுக்கு!

பாலனின் உள்ளம் அதைக் கேட்டு ஆயிரம் சுக்கல்களாகச் சிதறிவிட்டது; கண்கள் கலங்கின; உதடுகள் துடித்தன; அழுகை வெடித்துக்கொண்டு வரும் போல் இருந்தது.

அம்மா வந்து சாப்பிட அழைத்தாள். அவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

"போம்மா, எனக்கு ஒன்றும் வேண்டாம்; போ!'' என்று அவன் 'ஹோ' என்று கதறினான்.

அம்மா அப்படியே செயலிழந்து நின்றாள். "இப்படி முகம் வீங்க அழாதேடா பாலா! உன் சிநேகிதர்களை நம் வீட்டிலேயே வந்து நாடகம் போடச் சொல்லுகிறேண்டா, வாடா'' என்று அவள் கடைசியாகச் சொன்ன பிறகும்

பாவம், அவனுடைய பிஞ்சுமனம் கருகிவிட்டது. அந்த நாடகத்தில் அவன் பங்கெடுத்துக்கொள்ள முடியவில்லையே!

அவன் சிநேகிதர்களில் சிலர் அவன் அந்த மாதிரி உட்கார்ந்திருப்பதைப் பார்த்துக்கொண்டே பேசாமல் போனார்கள். வேறு சிலர் அவன் பக்கம் கையை நீட்டிச் சுட்டிக்காட்டி வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டு சிரித்துக் கொண்டே போனார்கள். சிலர் தங்களுக்குள் ஏதோ 'கசமுச' வென்று பேசிக்கொண்டே சென்றார்கள். ஒருவனாவது அவனுடன் முகம் கொடுத்துப் பேசவில்லை.

கூடப் பாலனுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. அவ்வளவு தூரத்துக்கு அவன் மனமுடைந்துவிட்டான்.

தீபாவளி வந்தது.

கண்ணபுரம் சிறுவர் சங்கத்தினருக்கு ஒரே குதூகலம். கடைசியாக மறுபடியும் ஒரு முறை ஒத்திகை போட்டுப் பார்த்துக்கொண்டார்கள். அனைவருக்கும் பரமதிருப்தி.

அன்றிரவு எட்டு மணிக்கு மின்சார விளக்கொளியிலே சின்னப் பண்ணையார் வீட்டிலே நரகாசுர வதம் நடக்கப்போகிறது. சிறுவர்கள் ஒன்றுகூடி, ஊரில் அனைவரையும் நாடகத்திற்கு வந்திருந்து சிறப்பிக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். பெரிய பண்ணை வீட்டாரையும் பாலனையும் நாடகத்துக்கு வரும்படி அழைக்க, சிறுவர்கள் மறக்கவில்லை.

மாலை ஐந்து மணி முதலே அரங்கமேடை தயாரிப்பதில் சிறுவர்கள் முழுமூச்சுடன் முனைந்து விட்டார்கள். பெரியவர்களும் பல வகையில் உதவி செய்தார்கள்.

ஆறு மணிக்கெல்லாம் சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன. சாப்பாடு ஆனதும் நாடகத்தைத் துவக்கிவிட வேண்டியதுதான்!

ஆனால் இரவு ஏழு மணி சுமாருக்கு மின்சாரம் 'பொக்'கென்று நின்றுவிட்டது. பின்னர் வெகு நேரம் வரை மின்சார சக்தி மீளவில்லை. ஹரிக்கேன் விளக்குகளும், புகை . விளக்குகளும் வெளிக்கிளம்பி ஆங்காங்கே அழுது வடிந்தன.

"இந்தப் பாழும் எலெக்ட்ரிக் விளக்கே இப்படித்தான்! இதை நம்பி ஒரு காரியத்தில் இறங்கலாமோ?" என்று பெரியவர்கள் பேசிக்கொண்டார்கள்.

எண்ணெய் விளக்குகள் அழுது வடிந்ததைப் போலவே நாடகம் போட இருந்த சிறுவர்களின் உள்ளங்களும் அழுது வடிந்தன. உற்சாகமனைத்தும் போன இடமே தெரியவில்லை.

அப்போது பாலனின் தாயார் அங்கே வந்து சேர்ந்தாள்.

"எங்கள் வீட்டுக் கூடத்திலே இரண்டு பெரிய 'பெட்ரோமாக்ஸ்' விளக்குகள் ஏற்றி வைத்திருக்கிறேன். நாடக மேடையையும் கூட அங்கேயே என் வீட்டு வேலைக்காரர்களைக் கொண்டு தயார் செய்யச் சொல்லிவிட்டேன். பாவம், நம்ம பாலன் முகம் வீங்க அழுதுகொண்டிருக்கிறான். எல்லாரும் அங்கே வந்து நாடகத்தை நடத்திவையுங்களேன்" என்று வேண்டிக்கொண்டாள்.

"அதுதான் சரி" என்று அனைவரும் அந்த யோசனையை ஆமோதித்தார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் பெரிய பண்ணையார் வீட்டின் விசாலமான கூடத்திலே கண்ணபுரம் சிறுவர் சங்கத்தினர் நரகாசுர வதத்தை வெகு உற்சாகத்துடன் தொடங்கியதற்கும் அதுவரை அணைந்தே போயிருந்த மின்சார விளக்குகள் மீண்டும் ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசிக்கத் துவங்கியதற்கும் வெகு கச்சிதமாய் அமைந்துவிட்டது.

அன்று வாயிற்காப்போனாக வேஷம் போட்டுக்கொண்டு வந்து பாலன் நடித்த அபார நடிப்பைப் பார்த்திருந்தால், நீங்கள் அப்படியே சொக்கிப் போயிருப்பீர்கள்!

சூரியகாந்தி

ச. கு. கணபதி ஐயர்

எங்கும் இருள்மயம். வானத்தில் சந்திரன்கூட இல்லை. நட்சத்திரம் ஒன்றும் தெரியாதபடி கருமேகங்கள் விண்ணை மறைத்துவிட்டன. ஒரு நாள் ஆயிற்று; இரண்டு நாள் ஆயின; மூன்றாம் நாளும் கழிந்தது. சூரியன் உதயமாகவில்லை. பொறுக்க முடியாத குளிர் உலகைக் கவிந்துகொண்டது. மனிதர்கள் பட்டினி; மிருகங்கள் பட்டினி; மரங்களும் செடிகளும் துவண்டு போயின.

"சூரியன் எங்கே போய்விட்டான்! மூன்று நாள் ஆகியும் அவனை ஏன் காணமுடியவில்லை?" என்று பலர் கூறினார்கள். "அவனை எந்த ராட்சஸனாவது கவர்ந்துசென்று சிறையிட்டுவிட்டானா?" என்று சிலர் சந்தேகப்பட்டார்கள். "சூரியன் எங்கே போனான்? அவன் ஏன் உதயமாகாமல் இருக்கிறான்?" என்று வயது வந்த ஒரு முனிவர் ஞான திருஷ்டியில் பார்த்தார்.

பாதாள லோகத்தில் ஒரு மலைச் சரிவு. மிக்வும் ரமணீயமான காட்சிகள் அமைந்த இடம் அது. அங்கே சூரியன் பல மாதர்களோடு விளையாடிக்கொண்டிருந்தான். விளையாட்டு மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. அவன் பன்னிரண்டு மணி நேரந்தான் பாதாள லோகத்தில் இருக்கவேண்டும். அதை மறந்து பெண்கள் விளையாட்டில் ஈடுபட்டு அங்கேயே மூன்று நாள் வரையில் தங்கிவிட்டான். ஞான திருஷ்டியால் பார்த்த முனிவருக்கு இந்த விஷயம் தெரிந்தது. அவர் கொண்ட கோபத்துக்கு அளவே இல்லை.

அவர் தம் மந்திர சக்தியினால் பாதாளத்துக்குச் சென்றார். சூரிய



ரங்கு: ஏண்டா சுப்பு, மணி அப்படி ஓடறான்!

சுப்பு: அதுவா? உன் பேரோடு 'கு'னாவைச் சேர்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு ஓடறாண்டா!

—R. கோமளா, சென்னை-4.

னும் அவன் காதலிகளும் விளையாடிக்கொண்டிருந்த இடத்துக்குச் சென்றார். கோபத்தால் அவருடைய கண்கள் சிவந்தன. உதடுகள் படபடத்தன.

சூரியன் அவரைக் கவனிக்கவில்லை. ஒரு பெண் மாத்திரம் அவர் வந்ததை உணர்ந்துகொண்டாள். "ஓகோ! இன்றைக்கு நம் நாயகன் நீண்ட நேரம் நம்முடன் விளையாடிக்கொண்டிருந்துவிட்டாரே! முனிவர் அவருக்குச் சாபம் கொடுப்பதற்கு மிகுந்த கோபத்துடன் வந்திருக்கிறார். நாம் அதை எப்படியாவது தடுத்து நம் நாயகனைக் காப்பாற்ற வேண்டும்" என்று அவள் எண்ணினாள். உடனே அவள் ஓடிப்போய் முனிவரின் கால்களைப் பற்றிக்கொண்டு, "என் நாதனை மன்னியுங்கள்?" என்று புலம்பினாள்.

பிறகுதான் அங்கே முனிவர் வந்திருப்பது மற்றவர்களுக்குத் தெரிந்தது.

"ஏ சூரியா! நீ உன் கடமையை மறந்து பெண்கள் மயக்கில் காலத்தை ஓட்டிவிட்டாயே! உன்னால் உலகமே கஷ்டப்படுகிறதே! நீ உன் கடமையை ஒழுங்காகச் செய்ய வேண்டாமா?" என்றார் முனிவர்.



அதற்குள் காலைப் பிடித்திருந்த பெண், "முனிவரே, எங்களுக்கு மாங்கல்யப் பிச்சை தர வேண்டும். அது அவருடைய பிழை அன்று. நாங்கள்தான் அவரைச் சூழ்ந்துகொண்டு நாட்கள் போவது தெரியாமல் கேலிக் கூத்தாடித் தடுத்துவிட்டோம். எங்களைச் சபியுங்கள். அவரை விட்டுவிடுங்கள்" என்றாள்.

மற்றொரு பெண் அம்முனிவர் எதிரே நின்று மலர்முகத்துடன் பல துதிகள் செய்து, தன் கணவனாகிய சூரியனை மன்னிக்குமாறு வேண்டினாள்.

சூரியனோ, "இனி எனக்குப் பெண்களே வேண்டாம்" என்று சொல்லி அங்கே எஞ்சி நின்ற பெண்களை எல்லாம் உதறித் தள்ளி

விட்டு முனிவரை நமஸ்கரித்தவனாய்த் தன் வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டான்.

சூரியன்மேல் பிழை இல்லை என்பதை முனிவர் உணர்ந்தார். தம் காலைப் பிடித்து வேண்டிய பெண்ணின் பரிதாபத்துக்கு மனம் இரங்கினார். தம் முன் நின்று துதி செய்த பெண்ணின் நயத்தைக் கண்டு அவர் கோபம் தணிந்தது.

"குழந்தைகளே! இனிமேல் சூரியன் பெண்களையே விரும்புவதில்லை என்று சொல்லிவிட்டான். உங்களை அவன் இனித் தொடமாட்டான். அவனை மன்னித்தேன். இனி நீங்கள் பெண்களாக இருந்து பயன் என்ன? இவ்வளவு அன்புள்ள உங்களையும் அவன் உதறித் தள்ளிவிட்டானே!" என்றார் முனிவர்.

"எங்கள் நாதனை எங்களுக்குக் கொடுங்கள்" என்று அந்த இரண்டு பெண்களும் கெஞ்சினார்கள்.

முனிவர் யோசித்தார்: "ஒன்று செய்கிறேன். அவன் என்னவோ உங்களை விரும்பமாட்டான். ஆனால் நீங்கள் என்றும் அவனைக் கண்டதும் ஆனந்தம்கொள்வீர்கள். என் தவ வலிமையினால் உங்களை மலர்களாகச் செய்கிறேன். நீங்கள் பூலோகத்தில் போய்ப் பிறப்பீர்கள்" என்றார்.

மேலும் அவர் கூறினார்: "உங்களில் என்னை முதலில் தெரிந்துகொண்டு உம் கணவனுக்காக என் காலில் விழுந்து வேண்டியவளுக்கே 'சூரியனுடைய மனைவி' என்ற பெயர் கிடைக்கும். சூரியனைப் போன்ற வடிவமும் அவளுக்கு அமைந்திருக்கும். மற்றவள்

தாமரை மலராக விளங்குவாள்'' என்றார். காலில் விழுந்த பெண் 'சூரிய காந்தி' என்று பெயர் பெற்றாள். காந்தி என்பதற்கு மனைவி என்று பொருள். சூரிய காந்தி மலர் சூரியனைப் போன்ற உருவமும் பெற்றிருக்கிறது. அதன் இதழ்கள் சூரிய கிரணங்கள்போல் ஜொலிக்கின்றன. தாமரை மலர் இன்றும் சூரியன் உதயமாவதைக் கண்டு மலர்ச்சி பெறுகின்றது. அவன் அஸ்தமனமாகும்போது அது குவிந்துவிடுகிறது. சூரிய காந்தியோ அப்படி இல்லை. சூரியனைக் கண்டு மலர்வதோடு அவன் வான வீதியில் சஞ்சாரம் செய்யும் திசையெல்லாம் தானும் திரும்பித் திரும்பிப் பகல் முழுவதும் அவனையே நோக்கிய வண்ணம் ஆனந்தம் கொள்கிறது.

செடியின் தண்டினுடைய உச்சியில்தான் முதல் மலர் தோன்றும். அதற்கு உதயம் என்று பெயர். அது மலர்ந்த பிறகு, தண்டிலிருந்து தோன்றிப் புறப்படும் கிளைகளில் வேறு மலர்கள் தோன்றுகின்றன. ஒரு செடியில் எத்தனை மலர்கள் இருந்தாலும் அத்தனையும் சூரியனைப் பார்த்த வண்ணமே நமக்குக் காட்சியளிக்கின்றன. ஆனால் அந்தச் சூரியனோ முன்பு தான் கொண்ட வாக்குறுதியின்படி தாமரையையோ சூரியகாந்தியையோ தனிப்பட்ட முறையில் பார்ப்பதில்லை; நேசிப்பதில்லை. அவைகளுடன் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் கண்ணெடுத்தும் பாராமல் மௌனமாகவே தினந்தோறும் செல்லுகிறான்.

படத்திலுள்ள சூரிய காந்திச் செடியில் பல மலர்கள் இருக்கின்றன. அவை எல்லாமே ஒரே பக்கம் பார்த்த வண்ணம் மலர்ந்திருப்பதைக் கவனியுங்கள். மலரைப் பார்க்கும் போதெல்லாம் மேலே கூறிய கதையும் உண்மையாக இருக்கலாம் என்றே நமக்குத் தோன்றுகிறதல்லவா?

இயற்கை விநோதங்கள்

வே. ரா. சுந்தரராமன்



நாம் ஏன் கண்களைத் திறந்து கொண்டு தூங்க முடியவில்லை? அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக கண்களைத் திறந்தவாறே இருக்க வேண்டுமென்றால் கண் இமைகளை எப்பொழுதும் திறந்தே வைத்திருக்க வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட தசைகள் வேலை செய்யவேண்டும். அவற்றை அடக்கி ஆளும் மூளையும் ஓயாமல் வேலை செய்யவேண்டி வரும்.

இரண்டாவதாக, நாம் கண்களைத் திறந்துகொண்டே தூங்கினால் ஒளிக் கிரணங்கள் பார்வை என்னும் உணர்ச்சியைச் சதா மூளைக்குக் கொடுத்துக்கொண்டே இருக்கும். ஆகையால் மூளைக்கும் மற்ற அவயவங்களுக்கும் பூர்ண ஓய்வு கொடுக்க வேண்டுமென்றால் கண்களை மூடிக் கொண்டுதான் தூங்கவேண்டும்.

வானவில் உண்டாவது எப்படி? மழை பெய்வதற்கு முன்போ பின்போ வானத்தில் சிறிய நீர்த் துளிகள் அபரிமிதமாக மிதந்து கொண்டிருக்கின்றன. அப்பொழுது சூரிய கிரணங்கள் நீர்த் துளிகளின் மேல் படுகின்றன. சூரிய கிரணம் பார்வைக்கு வெளுப்பாக இருந்தாலும், உண்மையில் ஏழு நிறங்களின் சேர்க்கை. சூரிய வெளிச்சம் அந்தத் திவலைகளின் மேல் பட்டவுடன் வரிசையாக ஏழு நிறங்கள் தோன்றுகின்றன. அதனால்தான் சூரியனுக்கு எதிர்த்திசையில் வானவில் தோன்றுகிறது.



கண்ணாடியில் நம் முகம் பிரதி பலிப்பது எப்படி? சில பொருள்கள் வழியாக ஒளி ஊடுருவிச் சென்று சுலபமாகப் பரவுகிறது. சிலவற்றில் தடைப் படுகிறது. வழுவழுப்பாகவும் பிரகாசத்துடனும் இருக்கும் கண்ணாடிபோன்ற பொருள்களில் ஒளி சுலபமாக நுழைந்து பரவுகிறது. ஆனால் பின் பக்கத்தில் பாதரசம் பூசியிருப்பதால் ஒளி

ரேகைகள் பாதரசத்தால் தடுக்கப்பட்டுப் பிரதிபலிக்கின்றன.

கண்ணாடியில் நம் முகத்தைப் பார்க்கும் போது நம் முகத்திலிருந்து ஒளிக் கிரணங்கள், கண்ணாடியுள் பாதரசம் தடவிய பாகம் வரை, சுலபமாக ஊடுருவிச் செல்கிறது. அதற்குமேல் செல்ல முடியவில்லை. அந்த ஒளிதான் நம்மைப்போன்ற ஒரு பிம்பத்தைக் கண்ணாடியில் உண்டாக்குகிறது.

கணவாய்க்குள் ரெயில் செல்லும்போது ஏன் அதிகச் சத்தமிடுகிறது? ரெயில் கணவாய்க்குள் போகும்பொழுதும் வெளியே போகும்பொழுதும் ஒரே அளவு சத்தம்தான் உண்டாகிறது. ஆனால் வெளியே போகும்பொழுது சத்தம் நாலு பக்கமும் பரவிவிடுவதால் சிறிதளவு சத்தம்



தான் நம் காதுகளை வந்தடைகிறது. ஆனால் கணவாய்க்குள் செல்லும்போது ஏற்படும் சத்தம் இரண்டு பக்கச் சுவர்களாலும் தடைப்பட்டு அவ்வளவு சத்தமும் நம் காதுகளையே திரும்பவும் வந்தடைகிறது.

துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்பதற்கு முன் அப்பொழுதே உண்டாகும் ஒளியை எப்படிப் பார்க்கிறோம்?

துப்பாக்கிச் சுடும்பொழுது ஒளி, ஒலி இரண்டும் ஒரே சமயத்தில்தான் ஏற்படுகின்றன. ஆனால் ஒலியைவிட ஒளி சீக்கிரம் பரவுவதால் நாம் அந்தச் சத்தத்தைக்



கேட்பதற்கு முன் வெளிச்சத்தைப் பார்க்கிறோம்.

ஒளியலை என்பது வானம் எங்கும் வியாபித்திருக்கும் 'ஈதர்' என்னும் வாயுப் பொருளில் உண்டாகும் அலை. ஒலியலை என்பது நம்மைச் சுற்றி இருக்கும் காற்றில் உண்டாகும் அலை. ஒலியலை ஒரு செகண்டில் சில நூறு அடிகளே பரவுகிறது. ஆனால் ஒளியலை ஒரு செகண்டில் 1,80,000 மைல் தூரம் பரவுகிறது. ஆதலால்தான் துப்பாக்கிச் சுடும்போதும் மின்னல் மின்னும்போதும் முதலில் ஒளியைப் பார்க்கிறோம்.



ஒரு ரூபாய்

ஏ. டி. விஜயா

ரகுவின் அப்பா ஒரு டிராயிங் மாஸ்டர். மிகவும் கோபக்காரர். எதற்கெடுத்தாலும் பெரிதாகக் கத்த ஆரம்பித்து விடுவார்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ரகு அவரிடம் மெல்ல, "சினிமா" என்றான். அவ்வளவுதான்; ஆரம்பித்து விட்டார்:

"என்னடாது, எப்பப் பாத்தாலும் சினிமா, சினிமான்னு ஆடறே! வேறே வேலை இல்லே! விடிந்தால் பள்ளிக்கூடம். அந்த வாத்தியார்தான் எனக்குப் பயந்துண்டு பாஸ் போட்டு விட்டார்! இந்த வருஷம் வேறே வாத்தியார் புதுசா வரப் போறாராம். எப்படியோ? போடா, இந்த வருஷத்துப் புஸ்தகம் எதாவது இருந்தால் படி, போடா."

'சரி! இனிமே நாம் இங்கிருந்தால் நம் காரியம் கைகூடாது' என்று நினைத்துக்கொண்டு நேரே அம்மாவிடம் சென்றான். அம்மா அப்போதுதான் வடித்த கஞ்சியைக் கையில் கொட்டிக்கொண்டு, 'ஹா....ஹூ....' என்று கத்திக்கொண்டிருந்தாள். ரகு தலையிலடித்துக் கொண்டு மெல்லப் பூஜை அறையை எட்டிப் பார்த்தான்.

"அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்...." - அதற்குமேல் தாத்தாவுக்கு மறந்துவிட்டது. இந்தச் சமயத்தில் அங்கே சென்றால் ஸ்வாமிக்கு நடக்கவேண்டிய பூஜை தனக்கு நடக்க ஆரம்பித்து விடும் என்று எண்ணிக்கொண்டு வாசலுக்குச் சென்றான். வாசலில் அவனுடைய அக்கா ஜயம் ஒரு நாவலைக் கையில் வைத்துக்கொண்டு என்னவோ தேடிக்கொண்டிருந்தாள். சுவாரஸ்யமான கட்டத்தில் நடுவில் ஓர் ஏடு காணாது போயிருக்கும்! 'அங்கே போனால் இப்போது நம்மை அடுத்த தெரு ராஜத்தின் வீட்டுக்குத் துரத்தி விடுவாள்' என்று எண்ணிக்கொண்டான் ரகு.

இப்படியே ஒவ்வொருவருடனும் அவன் நெருங்கப் பயந்து நேரே தன் மேஜையண்டை போய் உட்கார்ந்தான். என்ன ஆச்சரியம்! அங்கே ஒரு ரூபாய் நோட்டு ஒன்று இவனைத் திகைக்க வைத்தது. மெல்ல எடுத்துத் தன் நிஜார் ஜேபியில் போட்டுக்கொண்டு விடுவிடு என்று நடக்க ஆரம்பித்தான். சரியாக ஒன்றரை மணி. இன்னும் அரை மணியே இருக்கிறது,

முகுந்தன் தியேட்டரில் 'ஜானின் வீரச் செயல்' என்ற சினிமா ஆரம்பமாவதற்கு.

அன்றுதான் கடைசி நாள். கிட்டுவும் பாலுவும் இவனுக்கு முன்னமேயே ஆஜராகியிருந்தார்கள். இன்னும் ஐந்தே நிமிஷம். ரகு ஓடிப்போய் ஓர் அரை ரூபாய் டிக்கெட் ஒன்று வாங்கிக்கொண்டு வந்தான். படம் வெகு ஜோர்!

மணி ஆறு. தியேட்டரில் படம் முடிந்தது. கும்பலோடு கும்பலாக வெளியே வந்தான். கையில் மீதி அரை ரூபாய் இருந்தது. நடந்தான். வீடு நெருங்க நெருங்க, மனசு திக் திக்கென்றது.

தெருக்கோடியிலிருந்தே தன் வீட்டு வாசலைப் பார்த்தான். வாசலில் அப்பா விசிறி வாங்கிக்கொண்டிருந்தார். 'சரி, விசிறி அவருக்கும், காம்பு நமக்கும்' என்று எண்ணிக்கொண்டான். வீட்டு வாசலுக்கு வந்து அங்கேயே கொஞ்ச நேரம் நின்றுகொண்டிருந்தான். அப்பா உள்ளே பேசிக் கொண்டிருந்தது நன்றாகக் காது கேட்டது:

''எனம்மா ஐயம்! நான் உன் பள்ளிக்கூடத்து எக்ஸிபிஷனுக்காக ஒரு ரூபாய் நோட்டு ஒன்று வரைந்து கொடுத்திருந்தேனே, அது எங்கே காணோம்?''

ரகுவின் மூளை வேகமாக வேலை செய்தது. 'ஒருவேளை அந்த நோட்டைத்தான் நான் எடுத்துக் கொண்டு..' என்று பயந்து கொண்டே உள்ளே நுழைந்தான்.

''ஏண்டா! இத்தனை நாழி எங்கேடா போயிருந்தாய்.?''

''......''

''ஏண்டா! கேட்கிறேன், பதில் சொல்லல்லே? சினிமாவுக்கா?''

''ஆ..மா..ம்.''

''காசு ஏதுடா?''

''மேஜை மேலே ஒரு ரூபாய் நோட்டு ஒன்று இருந்தது'' என்று ஒரு வழியாக உண்மையை வரவழைத்தான். தன்னுடைய முதுகு இன்றைக்கு அப்பாவுக்குத்தான் சொந்தம் என்று எண்ணியிருந்த ரகுவுக்குத் திகைப்பும் ஆச்சரியமும் மேலிட்டன.

''என்ன..அந்த ரூபாயா..?'' என்று அப்பா விழுந்து விழுந்து சிரிக்கஆரம்பித்தார். மீதி அரை ரூபாயைக் கீழே வைத்து விட்டு நின்றுகொண்டிருந்தான் ரகு.

''அடி ருக்மிணி! உன் பிள்ளையின் சாமர்த்தியத்தைப் பார்த்தாயா! நான் ஒரு ரூபாய் நோட்டைப் போலவே கையாலேயே ஒரு நோட்டு வரைந்து வைத்திருந்ததை எடுத்துக்கொண்டு போய்ச் செலவழித்து, மீதியும் கொண்டுவந்து விட்டான். எவ்வளவு கெட்டிக்காரப் பையன், ரகு!'' என்று அவன் முதுகைச் செல்லமாகத் தட்டிக் கொடுத்தார். அதே அடியைக் கோபத்தோடு அடித்திருந்தால்..?

''ஐயே! நீங்கள்தான் மெச்சிக்கணும். வரைந்து வைத்த ரூபாயை எடுத்துப் பர்ஸுக்குள் போட்டுவிட்டு, நிஜ ரூபாயை மேஜை மேல் வைத்துவிட்டீர்கள்! நீங்களும் கெட்டிக்காரர்தான்! உங்கள் பிள்ளையும் கெட்டிக்காரன்தான்! ஒருவரை ஒருவர்தான் மெச்சிக்கணும்!'' என்றாள் அவருடைய மனைவி.

''என்ன அது? நிஜ ரூபாயா!'' அப்பாவின் முகத்தில் அசடு வழிந்தது! ரகு ஏன் அங்கே நிற்கிறான்?

விருந்துச் சாப்பாடு

எஸ். ரங்கநாயகி

[மணி, பாலு, ரங்கு, சோமு—சிநேகிதர்கள். ரமா—பாலு வின் தங்கை.]

காட்சி - 1

(வியாழக்கிழமை)

மணி: என்னடா பாலு, விளக் கெண்ணெய் குடிச்சவன் மாதிரி இருக்கே?

பாலு: பின்னே என்ன விளக்கெண்ணெய் குடிக்காமெ, ஜிலேபி சாப்பிட்டேனு! போடா!

மணி: என்னடா அப்படிப் பட்ட வெறுப்பு?

ரமா: இன்னிக்கி அப்பாவிடம் சக்கையான உதை!

மணி: அச்சோ, என்ன தப்பு பண்ணிஞன் அப்படி?

ரமா: நேற்று முழுவதும் அப்பா இவனே, 'படிடா,படிடா' என்ருர். படிக்காமெ ஊரைச் சுற்றிக்கொண் டிருந்தான். வகுப்பு 'டெஸ்டி'ல் கோளா! நல்ல அடி விழுந்தது.

மணி: இந்த அப்பாக்களுக்கே வேறு வேலே கிடையாது. அவர்கள் படித்ததை மறந்துவிடுவார்கள்!

ரமா: அந்த நாளிலே இந்தக் காலத்தைப் போல ஹாக்கி, கிரிக் கெட் எல்லாம் உண்டா? வாத்தி யார்களுக்கு விதவிதமான பெயர் வைத்ததுதான் உண்டா?

பாலு: மூடடி வாயை. அப்பா வுக்கு ரொம்பப் பரிந்து பேச வந்து விட்டாள். அந்தக் காலத்தைப் பற்றி உனக்கென்னடி தெரியும்? (மணியைப் பார்த்து) அப்பா திட்டி னதை நான் அப்பொழுதே மறந்துவிட்டேனடா. நாமெல்லாம் ரோசம், வெட்கம், மானம் வெச் சுண்டால் கட்டுமோடா? நான் வருத்தமாக இருப்பதே வேறு காரணம். அப்பா! இவ்வளவு கல் யாணம் நடக்கிறதே, நமக்கு ஒரு நாளாவது விருந்து கிடைக்க வில்லேயே என்றுதான் வருத்தம்.

மணி: ஏண்டா, நீ ஒரு கல்யா ணத்துக்கும் போகவில்லேயா?

பாலு: அதை ஏண்டா கேக் கறே? கல்யாணத்திற்குப் போனுல் தண்டம் அழ வேண்டியிருக்கு மாம். அதனுல் அம்மா அப்பா கல் யாணத்திற்குப் போகாமல் ஏதா வது சாக்குப் போக்குச் சொல்லி விடுகிருர்கள். வீட்டிலேயோ தின மும் மிளகு ரஸமும் அப்பளமும் தான் சாப்பாடு. ஒரே ஒரு நாள் விருந்து பண்ணு என்ருல் "நீ படிக் கிற லக்ஷணத்திற்கு...." என்று ஆரம்பித்து விடுகிருர்கள்.

மணி: இதுக்குத்தானு இவ் வளவு வருத்தம்! இப்போ எங்கள் வீட்டிலே என்னேயும் பாட்டியை யும் தவிர பாக்கி எல்லாரும் ஊருக்குப் போயிருக்கிருர்கள். நான் பாட்டியை ஏமாற்றி நல்ல விருந்துக்கு ஏற்பாடு செய்து விடு கிறேன். நம்முடன் விச்சு, ராமு, கோபால் எல்லாரையும் கூட்டிக்க லாம். சரி, இந்த ஞாயிற்றுக்

கிழமை உங்கள் எல்லோருக்கும் என் வீட்டில் சாப்பாடு.

காட்சி - 2

(மணியின் வீடு; மாலை நேரம்.)

மணி: பாட்டி! பாட்டி!

பாட்டி: என்னடா வேண்டும்?

மணி: ஒன்றுமில்லை பாட்டி. சும்மா உனக்கு நமஸ்காரம் பண்ண வந்தேன்.

பாட்டி: (ஆச்சரியத்துடன்) என்னடா இது அதிசயம்? பண்டிகை நாளிலேகூட திரும்பிப் பார்க்கமாட்டே, இன்று என்னடா நமஸ்காரம்?

மணி: நமஸ்காரத்துக்கு ஒரு விசேஷம் வேணுமா, பாட்டி? எனக்கு ரொம்ப நாளாகவே உன் ஆசிர்வாதத்திலே நம்பிக்கை உண்டு. ஆனால் நான் நமஸ்காரம் செய்யும்போது அம்மா மேலே இருக்கிற கோபத்தில் எனக்கு தவறான ஆசிர்வாதம் கொடுத்து விட்டால் அது பலித்துவிடுமே என்று பயம். ஆனால் நேற்று எங்க வாத்தியார், "பெரியவர்கள் கோபம் கூட நம்மீது அன்புதான். அவர்களை தினமும் வணங்கவேண்டும்" என்றார். அதனால் இனிமேல் தினமும் உன்னை நமஸ்காரம் செய்து ஆசிர்வாதம் வாங்கத் தீர்மானித்து விட்டேன். (சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கிறான்.)

பாட்டி: (சந்தோஷத்துடன்) மகராஜனாக இரு. பரீக்ஷையிலே நிறைய மார்க்கு வாங்கி நன்னாப் பாஸாகணும்!

மணி: அப்பாடி! இப்போதான் எனக்குச் சந்தோஷமாச்சு, பாட்டி. உன் ஆசிர்வாதம் இல்லாததனால்தான் நான் கோளா வாங்கிவந்தேன், பாட்டி. இத்தனை நாளாக உன்னை நமஸ்காரம் பண்ணாம இருந்தேனே, என் மூளையைச் சொல்லு.

பாட்டி: அதுக்கு நீ என்னடா பண்ணுவே. பெரியவாளைப் பார்த்துத்தானே குழந்தைகளும் பழகும். உங்க அம்மா அப்படிப் பழக்கி இருக்கா.

மணி: அம்மா கிடக்கிறு, விட்டுத் தள்ளு, பாட்டி. இனி நீ சொல்றபடிதான் நான் கேட்கப் போகிறேன்.

பாட்டி: மகராஜனு, ஆயுசோட நன்னயிருடா. நீ சம்பாதிக்க ஆரம்பிச்சு நான் கண்ணாலே பார்க்கணும்.

மணி: சரியாப் போச்சு! அதுக்குள்ளே சாகிற உத்தேசம் வேறு வச்சிருக்கியா? அதெல்லாம் கூடாது. நான் சம்பாதிக்க ஆரம்பிச்சு உன் கையிலேதான் கொடுக்கப் போகிறேன்.

பாட்டி: போடா, போக்கிரி. இப்ப அப்படித்தான் சொல்லுவே. நாளைக்கே பெண்டாட்டி வந்-

துட்டா, பணத்தை அவள் கையில் தான் கொடுப்பே.

மணி: ஐயோ, நான் கல்யாணமே பண்ணிக்க மாட்டேன், பாட்டி. மாமியாருக்கு நான் அடிமையாகவே மாட்டேன்.

பாட்டி: அதெல்லாம் நீ ரொம்ப கெட்டிக்காரண்டா. உன் அப்பாவைப் போல் இருக்கமாட்டே.

மணி: (சிரித்துக்கொண்டே) பாட்டி, அப்பா அம்மாவை இப்பொழுதே நன்ருகத் திட்டி விடு. அவர்கள்தான் ஊரில் இல்லையே!

பாட்டி: ஐயே, அவா புத்தி உனக்கும் கொஞ்சம் இருக்கத்தான் இருக்கு. எனக்கு என்ன, காரணமில்லாமல் அவர்களைத் திட்ட, பைத்தியம் பிடித்திருக்கிறதா?

மணி: ஐயையோ, அதுக்குள்ளே கோபித்துக் கொண்டு விட்டாயே. நான் சும்மா சொன்னேன், பாட்டி. நீ எவ்வளவு பொறுமைசாலி என்பது எனக்குத் தெரியாதா?

பாட்டி: பின்னே என்னடா, அவா கெட்டுப்போகிறதுக்கா நான் சொல்கிறேன்? தினம் தினம் பிறந்த வீட்டு மனுஷாளுக்கு விருந்து என்ருல் நமக்குக் கட்டி வருமாடா? அதேபோல் என் மனுஷாள் யாராவது வந்துவிடட்டும், என்ன அமர்க்களம் தெரியுமா?

மணி: ஆமாம் பாட்டி, நீ சொல்வது ரொம்ப ரைட்!

பாட்டி: ஏதோ அத்தங்கா அம்மாஞ்சி முறையை வெச்சுண்டு எங்க அத்தை பிள்ளை ஒரு மாதம் இருக்க வந்துட்டான். அடேயப்பா, அதுக்கு என்ன அமர்க்களம் தெரியுமா? அதேபோல் பிறந்த வீட்டு மனுஷாள் வந்தாலோ, மரியாதை என்ன, உபசாரம் என்ன, ஒரே களேபாரம்தான். கேட்டால், அவர்கள் வந்தால் ஏதோ புடவையாகவோ, பண்ட

மாகவோ கொடுத்துவிட்டுப் போய் விடுகிறார்களாம். இவன் தரவில்லை யாம். அதுவும் பிறந்த வீட்டுக்காரர் களுக்கு ஆழாக்கு வடித்தால் இவனுக்கு மூணு ஆழாக்கு வடிக்க வேண்டியிருக்காம். அதுக்கு என்ன பண்ணுவது? இவன் அவர் களைப்போல் சாப்பாட்டில் குறைத்து, புல் தடுக்கி விழுபவன் போல் இருக்க மாட்டான். வயிறு நிரம்பச் சாப்பிட்டால்தானே உடம்புக்குப் பலம் வரும். கொஞ் சம் கூடத்தான் அரிசி போட்டு வடித்தால் உங்க அப்பா ஆஸ்தி குறைந்து விடுமா? நீதான் சொல் லேன்.

மணி: (தனக்குள்) இந்தக் காலத்தில் இவனைப் போல் வெச் சுண்டால் கரை ஏறிவிடலாம். (வெளியே) நான் என்னத்தைச் சொல்ல! உன்னுடைய உதார குணத்தைப் பார்த்தால் எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.

பாட்டி: என்னடா அது?

மணி: ஒன்றுமில்லை, பாட்டி. நம்ப கோபுமாமா பிள்ளை கல்கத் தாவிலிருந்து இப்பொழுது இந்த ஊருக்கு வந்திருக்கிறான். அவன் அப்பா கல்கத்தாவிலே பெரிய வேலையில் இருக்கிறார். கார் இருக் கிறது. சமையல்காரனும் வீடு நிறைய வேலைக்காரர்களும் இருக் கிறார்கள். ரொம்பப் பெரிய பணக் காரர், பாட்டி. நீகூட காசிக்குப் போகவேண்டும்என்றுசொன்னயே, கல்கத்தாவிலே இவன் வீட்டில் இறங்கிவிட்டுப் போகலாம், பாட்டி. இவன் பாட்டி உன்னை அழைச்சுண்டு போவாள்.

பாட்டி: இதை அப்பவே எங் கிட்ட சொல்லியிருக்கக் கூடாதோ?

மணி: முழுவதும் கேளு. அவன் இப்பொழுது இந்த ஊருக்கு வந்திருப்பதால் என் சிநே கிதர்கள் ஒவ்வொருவரும் ஒவ் வொரு நாள் விருந்துச் சாப்பாடு போடுகிறார்கள், பாட்டி. எனக்குக் கூட அவனை நம் வீட்டில் அழைத் துச் சாப்பாடு போடவேண்டு மென்று ஆசை. நல்ல வேளையாக அம்மா ஊரில் இல்லை. அதனால் நீ தான் அவனுக்கு வீட்டில் ஒரு சாப்பாடு செய்து போடேன்.

பாட்டி: ஓ, பேஷா போடறேன். அவன் அம்மா அப்பாவையும் அழைச்சுண்டு வாயேன்.

மணி: அவன் அம்மா அப்பா வரவில்லை பாட்டி. அவன் மட்டும் தான் வந்திருக்கிறான். அவனோடு கூட என் சிநேகிதர்கள் இரண்டு மூன்று பேரைக் கூப்பிடுகிறேன்.

பாட்டி: ரொம்ப சரி, இன்று இரவே அழைத்து வந்து விடேன்.

மணி: இன்று அவனுக்கு ரங்கு வீட்டில் சாப்பாடு. நாளை காலை கிட்டுவின் வீட்டிலும், இரவு சோமு வீட்டிலும், சனியன்று காலை ரகு வீட்டிலும், இரவு சங்க ரன் வீட்டிலும் விருந்து. அதனால் ஞாயிறு காலை நம் வீட்டில் வைத் துக் கொள்ளலாம்.

பாட்டி: அடேயப்பா, அது சரி, காசிக்கு அழைத்துச் செல்ல, கொஞ்சம் சிபாரிசு செய்து வை.

மணி; ரொம்ப ரைட்!

(குதித்துக்கொண்டே ஓடுகிறான்.)

காட்சி - 3

(பாலுவின்வீடு. மணி வருகிறான்.)

மணி: டேய் பாலு!

பாலு: என்னடா, காரியம் ஜயம் தானா?

மணி: நான் எடுத்த வேலை ஜயமாகாமல் இருக்குமா? ஆனால்

நீ கல்கத்தாவாசி என்று பாட்டியிடம் சொல்லியிருக்கிறேன். அதற்கு ஏற்றதுபோல் நீ நடந்து கொள்ளவேண்டும்.

பாலு: பார்க்கலாம்.

காட்சி - 4

(ஞாயிறு காலை. மணியின் வீடு. பாலு, ரங்கு, சோமு, கிட்டு ஆகியோர் வருகிறார்கள்.)

மணி: பாட்டி, அவர்கள் எல்லோரும் வந்து விட்டார்கள். (பாலுவைக் காட்டி) இதோ, இவன்தான் கல்கத்தாவில் இருப்பவன்.

பாட்டி: ஓகோ, இவனா? (உற்று நோக்கி) எண்டா, இவனை இந்த ஊரிலேயே பார்த்தது போல் இருக்கே?

(பாலு விழிக்கிறான்.)

ரங்கு: அவன் இந்த ஊருக்கு வந்து இருபது நாளாகிறது. நடுவில் எப்பவாவது கண்ணில் பட்டிருப்பான்!

பாட்டி: சரிதான். எண்டாப்பா, கல்கத்தாவிலே எத்தனாவது மாடியிலே இருக்கே?

பாலு: நாலாவது மாடியில்.

பாட்டி: அப்படியா! ஆமாம், இன்று இங்கே ரெயில் ஏறினால் கல்கத்தாவுக்கு எப்போடா போய்ச் சேரலாம்? வழியிலேதான் பூரி ஸ்டேஷனோடா?



வாத்தியார்: ராஜா, சில சமயம் முட்டாள்கள் சொல்லும் அற்ப விஷயங்கள்கூடப் புத்திசாலிகளுக்குப் புரியாது.

ராஜா: இப்ப நீங்க சொல்றது எனக்குப் புரியல்லியே!

—கே. எல். பத்மநாபன், திருச்சி.

(பாலு விழிக்கிறான்.)

மணி: அதெல்லாம் அவனுக்கு என்ன பாட்டி, தெரியும்? அவன் ஏரோப்ளேனில் போயிட்டு வறான்.

பாட்டி: அடேடே, பிளேனிலா போகிறான்? அதற்கு எவ்வளவு டிக்கெட்! (பாலு விழிக்கிறான்.)

சோமு: அதெல்லாம் அவன் என்னத்தைக் கண்டான், பாட்டி! அவன் அப்பாதானே டிக்கெட் வாங்குகிறார்!

பாட்டி: ஏண்டாப்பா குழந்தை, காசி அங்கிருந்து ரொம்பக் கிட்ட இருக்கிறதோ?

(பாலு திகைக்கிறான்.)

சோமு: இவன் இன்னும் காசிக்குப் போகவில்லை பாட்டி.

பாட்டி: ஏண்டா பசங்களா, இவன் என்ன வாயே திறக்க மாட்டேன் என்கிறானே. அவனுக்குப் பதில் நீங்கள் பேசுகிறீர்களே.

மணி: அதை ஏன் கேழ்க்கிறே? பையன் ரொம்பச் சாது. வாயே திறக்கமாட்டான். தவிர, தினமும் ஒவ்வொரு வீட்டிலும் விருந்து சாப்பிட்டு உடம்பே சரியில்லையாம். இன்று இங்கே வரவில்லை என்று தான் சொன்னான். நான்தான் அழைத்து வந்தேன். சரி, இலை போடுகிறாயா?

பாட்டி: நல்ல வேளை, நானும் அவன் வயிற்றுக்கு ஏற்றதுபோல் தான் விருந்து செய்திருக்கிறேன். இதோ, இலை போடுகிறேன்.

(எல்லாரும் சாப்பிட உட்காருகிறார்கள். பாட்டி சாதம் போட்டு நெய் ஊற்றுகிறாள்.)

பாட்டி: ஏண்டாப்பா, நீ இந்தத் துவையலைச் சாப்பிட்டிருக்கிறாயோ? (துவையல் போடுகிறாள்.)

மணி: ஏன் பாட்டி, பருப்புப் போடல்லே?

பாட்டி: எதுக்கடா பருப்பு? பாவம் குழந்தை, நாலு நாளா விருந்து சாப்பிட்டுச் சாப்பிட்டு வயிறு கெட்டுப் போயிருக்கும். இந்தத் துவையலைச் சாப்பிட்டால் வயிற்றிலே இருக்கும் அஜீரணம் எல்லாம் பறந்து போகும். இது முடக்கித்தான் துவையல்.

(எல்லாரும் சலித்துக்கொள்கிறார்கள்.)

மணி: ஏன் பாட்டி, கறி செய்யல்லியா?

பாட்டி: ஓ, கீரையை மசித்திருக்கிறேன். நன்னா வெண்ணெயாட்டமா மசித்திருக்கிறேன், பார்.

பாவம், இந்தக் குழந்தைக்குக் கல்கத்தாவிலே சொந்தத் தோட்டத்திலே அப்பொழுதே பறித்து சமைக்கக் கீரை கிடைக்காதே என்று இவனுக்காக ஸ்பெஷலாகச் சமைத்தேன். என்ன இருந்தாலும் அந்த ஊரெல்லாம் இந்த ஊரைப் போல் ஆகுமாடா?

மணி: (கோபத்துடன்) என் பாட்டி, நன்னு பருப்புக் குழம்பு, அவியல், வடை, பாயசத்துடன் விருந்து பண்ணச் சொன்னால் என்னவோ பண்ணியிருக்கிறாயே!

பாட்டி: என்னடா இது, உனக்குத்தான் புத்தியில்லை என்றால் எனக்குக் கூடவா இல்லை? பாவம், அந்தக் குழந்தை நாலு நாளாக் கண்டதைச் சாப்பிட்டுத் திணறிப் போயிருக்கும். நல்ல பத்தியமாகச் செய்து அவனுக்கு ஒரு நாளாவது போட்டால்தானே வயிறு சரியாக இருக்கும்!

மணி: என்ன ரஸம்?

பாட்டி: ஜோரான கண்டத் திப்பிலி ரஸம் செய்திருக்கேன். இதைச் சாப்பிட்டால் அஜீரணத்துக்காக டாக்டரிடம் ஓடவேண்டாம்.

மணி: (கோபத்துடன்) உன் கண்டத்திப்பிலியும் நீயும் நாசமாய்ப் போக. வாங்கடா எல்லோரும்! எழுந்திருங்கள்.

பாட்டி: ஐயைய, உன் அம்மா குணம் உன்னைவிட்டுப் போகுமா? பேஷாகக் கை அலம்பிக்கோ. (பாலுவை நோக்கி) நீ சாப்பிடடா குழந்தை. அந்த முசுடோடு சேர்ந்து நீயும் கெட்டுப் போகாதே. (பாலு வேறுவழியின்றி விழிக்கிறான்.)

மணி: அம்மாவுக்குத் தகுந்த பிள்ளை இல்லை நான். முசுட்டுப் பாட்டிக்குத் தகுந்த பேரன் என்று சொல். சரி, சாதம் போட்டு, மோர் ஊற்று.

பாட்டி: வெட்கமா இல்லை? மூடடா வாயை. ரொம்ப நல்லவனாட்டமா நடிச்சான். (பாலுவை நோக்கி) எண்டா குழந்தை, சளசளன்னு ஜலம் கொட்டின பழைய சாதத்தில் நல்ல தயிர் கொட்டி, கடுகு தாளிச்சுப் போட்டு நன்றாகப் பிசைந்து, தொட்டுக் கொள்ள நார்த்த இலைப் பொடி செய்திருக்கேன். போடட்டுமா?

பாலு: ஐயையோ, வேண்டாம் பாட்டி. வயிறு நிறைந்துவிட்டது. சாதம் போதும். (கையை அலம்ப ஓடுகிறான். கூடவே எல்லாரும் எழுந்து விடுகின்றனர்.)

பாட்டி: அடேய், கொஞ்சம் காசிக்குப் போகணும்னு கவனிச்சுக்கோடா!

[திரை]



முதல் கழுதை: உங்க எஜமான் தேவலை அப்பா. எழுத்தாளர் வீடெல்லாம் வாடிக்கை பிடிச்சிருக்காரு! உனக்குக் காகிதத்துக்குப் பஞ்சமே இல்லை.

இரண்டாம் கழுதை: அப்படித்தான் எல்லாரும் தப்பா நினைக்கிறாங்க! அவங்கள்ளாம் காகிதங்களை உங்க செட்டியார் கடையிலேதான் வாடிக்கையாப் போட்டுடறாங்களே!

—ஹமீது சிலேர்ன்.



அத்தான் கிளி

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

எனக்கு ஓர் அத்தான் இருக்கிறான். மனிதர்களைத்தான் அவனுக்குப் பிடிக்காது. பிராணிகள் என்றால் அவன் வெகு பிரியம் கொள்வான். இரண்டு செல்லப் பிராணிகளை அவன் வளர்த்தான். ஒன்று நாய்; மற்றது கொண்டைக் கிளி. இரண்டும் மிக அழகாய் இருக்கும். அத்தானுக்கு நாயிடமும் சரி, கிளியிடமும் சரி; பரம வாஞ்சை. அவைகளுக்கும் அத்தானிடம் ரொம்பவும் பிரியந்தான். ஆனால், தங்களுக்குள்ளே அவைகள் எப்படி என்கிறீர்களோ? கிளிக்கு நாயைக் கட்டோடு பிடிக்காது. நாய்க்குக் கிளியைக் கொஞ்சமும் பிடிக்காது.

நாயைக் கிளி அலட்சியமாய்ப் பார்க்கும். அந்தப் பார்வை எப்படி இருக்கும் தெரியுமா? "ஏ கேடு கெட்ட நாயே! நீ எதற்காக இந்த வீட்டிலே இருக்கிறாய்? உன்னால் பிராணி இனத்துக்கே அவமானம். மனிதர்கள் உன்னைப் புகழ்கிறார்களே, அது வெறும் பாசாங்கு. உன்னை அவர்கள் மதிப்பதே இல்லை. ஒரு மனிதர் மற்றொரு மனிதரைத் திட்டும் போது பார். 'கடை கெட்ட நாய், நீச நாய், திருட்டு நாய்' என்றெல்லாம் திட்டுவார்கள். அவ்வளவு மதிப்பு உன்னிடம்! உன் பிழைப்பும் ஒரு பிழைப்பா!" என்று பழிப்பதுபோல் இருக்கும்.

நாயும் கிளியைக் குரூரமாய்ப் பார்க்கும். வாலை வாலை ஆத்திரத்தோடு முறுக்கும். "நீதான் இங்கே தண்டச்சோறு தின்கிறாய். உனக்குப் பாலும் பழமும் வேறே அருமையாய் எஜமான் வாங்கிக் கொடுக்கிறார். பார் ஒரு நாள்;

உன்னை என்ன பாடு படுத்துகிறேன் என்று பார். உன் மென்னியைக் கவ்வி, ஒரே திருகாய்த் திருகி, இறக்கையைப் பிய்த்து, லட்டு மாதிரி விழுங்கி விடுகிறேன்'' என்பதுபோல் இருக்கும் நாயின் பார்வை.

கிளி கொண்டையைக் கொண்டையை ஆட்டும். "அட போடா மக்கு!'' என்று கேலி செய்வது போல் வேறு பக்கம் திரும்பிக் கொள்ளும்.

கிளிக்கு அத்தான் பேசக் கற்றுக் கொடுத்தான். கிளி சரியாகக் கற்க முடியவில்லை. 'பேச்சு இதற்கு வரமாட்டேன் என்கிறதே; என்ன செய்வது?' என்று அத்தான் யோசித்தான். "பேச்சு எளிதாக வராது. பாட்டு எவருக்கும் வரும். கற்றுக்கொடு'' என்று அத்தானுக்கு யாரோ சொன்னார்கள். "சரிதான்'' என்றான் அத்தான். அவனாக ஒரு பாட்டு இட்டுக் கட்டினான்:

வந்தானே சாமி, என் சாமி;
வந்தானே திருடன்!

கேட்க வேண்டுமா! எவ்வளவு பேஷான பாட்டு! இதைக் கிளிக்குக் கற்றுக் கொடுத்தான். இது உடனே வந்துவிட்டது அதற்கு. வேறு பேச்சோ பாட்டோ வரவேயில்லை. கிளி இதையே பாடும். அதுவும் யாராவது வீட்டுக்கு வந்தால் போதும், சட்டென்று கூச்சமில்லாமல் பாடும்;

வந்தானே சாமி,
என் சாமி;
வந்தானே திருடன்!

வருகிறவர்களுக்கு எப்படி இருக்கும்? கோபம் கோபமாய் வரும். அத்தானோ விழுந்து விழுந்து சிரிப்பான்.

வந்தவர்கள் முணுமுணுப்பார்கள்: "இவன் கிடக்கிறான் மரியாதை கெட்ட பயல்! ஊரிலே இவன் ஒருத்தன்தான் நல்லவனோ? மற்ற எல்லாரும் திருடரோ? இவனும் ஆச்சு; இவனுடைய கொண்டைக் கிளியுமாச்சு!'' என்று வாய்க்குள்ளே திட்டுவார்கள்.

'ஆட்டிடையன்' கதை இல்லையா? அந்த மாதிரி ஒரு நாள் நிஜத் திருடனே வந்து விட்டான். பாதி ராத்திரி வேளை. அத்தான் கும்பகர்ணன் மாதிரி தூங்கிக் கொண்டிருந்தான்.

'நாய் குரைக்கலாமா, வேண்டாமா?' என்று யோசித்துக் கொண்டிருந்தது. கிளிக்குத் தாங்கவில்லை. அதற்குத்தான் தெரியுமே ஒரு பாட்டு:





வந்தானே சாமி, என் சாமி
வந்தானே திருடன்!

இதைப் பாடியது கிளி.

அத்தானின் தூக்கம் கொஞ்சம் கலைந்தது. "சனியனே! இரவெல்லாம் பாடாதே; பகலிலே பாடினால் போதும்" என்று அவன் முணுமுணுத்தான். மறுபடியும் தூக்கத்தில் ஆழ்ந்தான்.

கிளி விடவில்லை; மறுபடியும் பாடியது:

திருடன் என்ன மற்றவர்மாதிரியா? அவன் நல்ல புத்திசாலி. விட்டான் கையைக் கூண்டுக் கம்பிகளின் இடுக்கிலே. பிடித்தான் கிளியின் குரல்வளையை. எடுத்தான் வெளியே. திருகினான் ஒரு திருகல். எறிந்தான் நாயின் முன்னே! 'இந்த நாளும் வருமோ, வருமோ?' என்றுதானே இத்தனை நாளும் நாய் காத்திருந்தது. அது 'லபக்' என்று கிளியை விழுங்கிவிட்டது. பிறகு பரம திருப்தியோடு வாலைச் சுருட்டிக் கீழே படுத்துக்கொண்டது. திருடன் 'ஜாம், ஜாம்' என்று தன் வேலையை முடித்தான்.

அடுத்த நாள் காலையில் அத்தான் எழுந்தான். முதல் முதல் அவன் கண்ணிலே தட்டுப்பட்டது சுவரிலே இருந்த பெரிய புதிய ஓட்டைதான்.

அத்தான் கிளிக் கூண்டைப் பார்த்தான். அது காலியாயிருந்தது. நாய் பாதி மூடிய கண்ணுடன் தூங்கிக்கொண்டிருந்தது.

அத்தான் உள்ளே போனான். பெட்டி நண்ட பிண்டலாய் நசுங்கி உடைந்து கிடந்தது. அதிலிருந்த பொருளையெல்லாம் காணவில்லை.

திரும்பி வந்தான். சுவரிலே தெரிந்த ஓட்டையைப் பார்த்தான். "ஓ!" என்று தலையிலே கையை வைத்துக்கொண்டான். தன் பொன்னும் வெள்ளியும் பரதேசம் போனது இந்த வழியாகத்தான் என்று விளங்கிவிட்டது.

(1 முதல் 9 வரையில்)

'மூட்டை'

எண்ணிலே படங்கள்

புளியமரத்துப் பேய்

பெ. தூரன்

வீராசாமியும் அண்ணாமலையும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். இருந்தாலும் அவர்களுக்குள்ளே நெருங்கிய சிநேகமோ பழக்கமோ கிடையாது. எப்பொழுதாவது தற்செயலாகச் சந்திக்கும்போது பேசிக் கொள்வார்கள்; இரண்டு பேரும் தனித்தனியாகச் செட்டுப் பண்ணி ஜீவனம் செய்து வந்தார்கள். செட்டுப் பண்ணுவதென்றால் உங்களுக்குத் தெரியுமா? பெரிய அளவில் இல்லாமல் சாமான்களைச் சில்லறையாக வாங்கிவந்து, கிராமங்களிலும சந்தைகளிலும் வியாபாரம் செய்வதற்குச் செட்டுப் பண்ணுதல் என்று பெயர்.

இவர்கள் இரண்டு பேரும் கடுகு, மிளகு, சீரகம் போன்ற சாமான்களை விற்று அதில் கிடைக்கும் லாபத்தைக்கொண்டு குடும்பம் நடத்தி வந்தார்கள். வாரத்திலே வெவ்வேறு நாட்களில் வெவ்வேறு இடங்களில் சந்தை கூடும். அங்கெல்லாம் இவர்கள் போவார்கள்.

வெகு தூரத்தில் இருந்த சந்தை ஒன்றிற்கு ஒரு நாள் இரண்டு பேரும் செட்டுப் பண்ணப் போக வேண்டியதாயிற்று. எப்பொழுதும் அவர்கள் தங்கள் வியாபாரத்தை முடித்துக்கொண்டு இருட்டாவதற்கு முன்னாலேயே வாடகை வண்டிகளிலோ. ரெயிலிலோ ஊருக்குத் திரும்பிவிடுவது வழக்கம். ஆனால் அன்று எதிர்பாராதவிதமாகக் காற்றும் மழையும் அடித்ததால் அவர்கள் சீக்கிரமாகச் சந்தையிலிருந்து புறப்பட முடியவில்லை. சாயங்காலம் நான்கு மணிக்குமேல் மழை நின்ற பிறகுதான் சந்தை கூடிற்று. அதனால் அவர்கள் தங்கள் சரக்குகளை விற்றுவிட்டுத் திரும்பும்போது நன்றாக இருட்டிவிட்டது.

இரவு பத்து மணிக்குப் புறப்படும் ரெயிலில் ஏறி அவர்கள் தங்கள் சொந்த ஊரான வீரமுத்துப் பட்டியை நோக்கி வரலானுர்கள். அந்த ஊர் அருகிலேயே ரெயில்வே ஸ்டேஷன் கிடையாது. ஊருக்கும் ஸ்டேஷனுக்கும் இரண்டு மைல் தூரமிருக்கும். அங்கிருந்து ஊருக்கு நடந்துதான் வரவேண்டும். இரவு நேரங்களிலே வாடகை வண்டி ஒன்றும் அங்கே கிடைக்காது.

வீராசாமியும் அண்ணுமலையும் அந்த ஸ்டேஷனில் இரவு பதினெரு மணிக்கு வந்து இறங்கினுர்கள். இறங்கிய பிறகுதான் ஒருவரை ஒருவர் சந்தித்தார்கள். அவர்களைத் தவிர வேறு யாரும் அந்த ரெயிலிலிருந்து இறங்கவில்லை. அதனுல் இரண்டுபேரும் ஒருவருக்கொருவர் துணையாகப் பேசிக்கொண்டே ஊருக்குப் போகலாம் என்று புறப்பட்டார்கள்.

எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. கிராமங்களுக்குச் செல்லும் பாதைகளிலே விளக்கு ஏது? இருட்டிலேதான் நிதானமாக வழியைப் பார்த்துக்கொண்டு செல்லவேண்டும்.

ஸ்டேஷனை விட்டுக் கொஞ்ச தூரம் சென்றதும் வீராசாமி பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தான். "இருட்டிலே உனக்குப் பயமில்லையே? நான் கொஞ்சங்கூடப் பயப்பட மாட்டேன். தனியாகக்கூட எந்த இருட்டிலும் நான் போவேன்" என்று அவன் கூறினுன். உடனே அண்ணுமலை, "எனக்கா பயம்? அந்த ஒன்று மாத்திரம் என்னிடம் கிடையாது. பேய் பிசாசு எதையும் நான் லட்சியம் செய்ய மாட்டேன்" என்று உரத்த குரலில் பதில் சொன்னுன்.

அவன் பேய் என்று சொன்னதிலிருந்து அதைப்பற்றியே பேச்சு ஆரம்பமாயிற்று. ஒவ்வொருவனும் பேயைப்பற்றித் தான் கேள்விப்பட்டிருந்ததை யெல்லாம் சொல்ல ஆரம்பித்தான்.

"நம்ம ஊரிலே அங்கப்பன் என்று ஒருத்தன் இருந்தானே அவனை உனக்குத் தெரியுமா? அவன் திடீரென்று செத்துப் போனதற்குக் காரணம் என்னவென்று கேள்விப் பட்டிருக்கிருயா? அவன் நடுச் சாமத்திலே வயலுக்குப் போனுனும். அங்கே பேயடித்து விட்டது. அப்படியே வயலுக்குள்ளேயே விழுந்து இறந்து போனுன்" என்று வீரப்பன் சொன்னுன்.

"இதெல்லாம் வெறும் கட்டுக்கதை. நான் நம்பவே மாட்டேன். பேயாவது அடிக்கிறதாவது? இந்தக் கதையைக் கேட்டு நான் பயப்படுகிற ஆசாமியல்ல" என்றான் அண்ணுமலை.

"எனக்கும் பயம் கிடையாது. நானும் இதை நம்பவில்லை" என்று கூறினுன் வீரப்பன்.

"புளியமரத்தில்தான் பேய் உட்கார்ந்துகொண்டிருக்குமாம். அதிலும் பாதையோரத்துப் புளியமரமென்ருல் அதற்கு ரொம்பக் கொண்டாட்டமென்று சொல்லுகிருர்கள். இது நிஜமா?" என்று அண்ணுமலை ஒரு கேள்வி போட்டான்.

"அது நிஜந்தான். ஆனுல் நான் நம்புகிறதில்லை. புளியமரத்துப் பேய் என்னிடம் வந்தால் ஒரே அடியாக அடித்து விடுவேன்" என்று தன் தைரியத்தை வெளிப்படுத்தினுன் வீரப்பன்.

"நீ அடிக்கிற வரையில் நான் காத்துக்கொண்டிருக்க மாட்டேன். முதலடி நான்தான் கொடுப்பேன். எனக்குப் புளியமரத்துப் பேயை அடிக்கிறதில்தான் ரொம்ப உற்சாகம்" என்று அண்ணமலை பதில் கூறினன்.

"வேப்ப மரத்தைக் கண்டால் பேய் பயந்து கிட்டவே வராதாம். அந்த மரத்தடியில் நிற்பவர்களை அது ஒன்றும் செய்ய முடியாது என்கிறார்கள். நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?" என்று வீரப்பன் கேட்டான்.

"ஆமாம், அது எனக்குத் தெரியும். ஆனல் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. நான்தான் பேயின் வாயைப் பிளந்து பல்லை எண்ணிப் பார்க்கிறவனயிற்றே!" என்று கூறிக்கொண்டே அண்ணமலை வீரப்பனை உற்றுப் பார்த்தான். வீரப்பனும் அவனை உற்றுப் பார்த்தான்.

இருவரும் ஒருவரை ஒருவர் அப்படிப் பார்த்துக்கொண்டே கொஞ்ச தூரம் சென்றார்கள். ஒருவனுடைய தைரியத்தைக் கண்டு மற்றவன் ஆச்சரியப்பட்டு அப்படி விறைத்துப் பார்த்துக்கொண்டேகாலெடுத்து வைத்தான்.

மறுபடியும் அண்ணமலை பேச்சைத் தொடங்கினன். பேசாமல் இருட்டிலே நடப்பது சங்கடமாக இருந்தது. "சில சமயங்களிலே பேய் நமக்குத் தெரிந்த ஆளைப் போலவே வடிவம் எடுத்துக்கொள்ளுமாம். கூடவே இருட்டில் துணையாக வருவது போலப் பேச்சுக் கொடுத்துக் கொண்டே வந்து அடித்துவிடும் என்று சொல்லுகிறார்கள். இதை நீ நம்புகிறாயா?" என்று அவன் கேட்டுக்கொண்டே லேசாகச் சிரித்தான்.

அவனுக்கு ஒரு பல் கொஞ்சம் நீளமாக இருக்கும். அவன் சிரிக்கும்போது அது இருட்டிலே கோரமாகக் காட்சியளித்தது.

"பெரிய வீட்டுக் கறுப்பண்ணனை ஒரு பேய் ராத்திரியிலே அவனுடைய ஆள்காரனைப் போல வந்து தோட்டத்திற்குத் தண்ணீர் இறைக்கப் போகலாம் என்று கூப்பிட்டதாம். ஆள்காரன்தான் வந்திருக்கிறான் என்று நம்பிக்

கொண்டு அவன் கூடப்போனானாம். போகிற வழியிலே பேய் அவனை ஒரே அறையாக அறைந்துவிட்டதாம்'' என்று வீரப்பன் தான் கேள்விப்பட்டிருந்த ஒரு சம்பவத்தைச் சொன்னான்.

இருவரும் வெறிக்க வெறிக்க ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். "இதெல்லாம் சுத்தப் பொய்'' என்று இருவரும் ஒரே சமயத்தில் உரத்த குரலில் கூறினார்கள். "வீரப்பா, நீ ஒரு நாள் கூட இருட்டுகிற வரையில் சந்தையில் இருக்க மாட்டாயே, இன்றைக்கு எப்படி இருந்தாய்? நிஜமாக நீ வீரப்பன் தானா?'' என்று அண்ணாமலை கேட்டான். வீரப்பன் பதில் சொல்லாமல் அதே மாதிரி கேள்வியைத் திருப்பிக் கேட்டான். ஒரு கணம் இருவரும் ஒருவனை ஒருவன் பிதுங்கிய விழிகளோடு உற்றுப் பார்த்தார்கள். மறுகணத்திலே மின்னல் போல இருவரும் பாதையின் இரு புறத்திலும் எதிர் எதிராக இருந்த மரத்தை நோக்கிப் பாய்ந்தார்கள். அந்த மரங்களைக் கெட்டியாகத் தாவிப் பிடித்துக்கொண்டு இருவரும், "அடே பேயே, என் கூடவே வந்து என்னை ஏமாற்றவா பார்த்தாய்? இதோ இந்த வேப்ப மரத்தை நான் பிடித்துக்கொண்டிருக்கிறேன். என்னை நீ ஒன்றும் செய்ய முடியாது'' என்று கத்தினார்கள்.

இப்படி ஒரு மணிநேரம் அவர்கள் மாறி மாறி வீரம் பேசினார்கள். பிறகு ஒவ்வொருவனும் தான் பேயல்லவென்றும், உண்மையில் வியாபாரிதான் என்றும் சத்தியம் செய்ய ஆரம்பித்தான். அதனால் பயன் ஒன்றும் ஏற்படவில்லை.

"ஓகோ! பேயல்லவென்று சொல்லி என்னை ஏய்க்கப் பார்க்கிறாயா? நான் இந்த வேப்ப மரத்தை விட்டு நகரவே மாட்டேன்'' என்று இருவரும் மாறி மாறிக் கூறினார்கள்.

அவர்களுடைய கூக்குரல் அதிகமாய்க் கொண்டே இருந்தது. ஆனால் அவர்கள் மரத்தைப் பிடித்த பிடியை

கேடி: எலே, எம் மவனுடா நீ? பேனாவை நான் கொண்டு போய் வித்தா அந்தப் பயலுக பிடிச்சுப்பாங்களேன்னு உங்கிட்ட கொடுத்து வித்துக்கிட்டு வரச் சொன்னா? இங்...

கேடியின் மகன்: இல்லேப்பா, உன்னைப்போல ஒரு ஆசாமிதான் பிடிங்கிக்கிட்டு, 'இதைக் கொண்டு போடா'ன்னு ரெண்டு முதுகிலே கொடுத்தனுப்பிச்சான்!

விடவே இல்லை. வயிற்றுப் பசி அவர்களை வாட்டியது; மரத்தைச் சுற்றி வளை தோண்டிக் குடியிருந்த கட்டெறும்புகள் கடித்தன. அவர்களால் இந்தத் துன்பங்களைப் பொறுக்க முடியவில்லை.

"வீரப்பா, நான் பேயல்லடா. பேயாயிருந்தால் நான் இந்த வேப்ப மரத்தடியிலே வர முடியுமா? கொஞ்சம் தயவு செய்து என்னைக் கூட்டிக்கொண்டு போ. உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு'' என்று அண்ணாமலை அலறினான்.

''நானும் வேப்பமரத்தடியில் தானே இருக்கிறேன்? என்னை மட்டும் நீ என் சந்தேகப்படுகிறாய்? உண்மையிலே நீ பேயல்லவென்றால் என்னிடம் வா. பிறகு நான் உன்னைக் கூட்டிக்கொண்டு போகிறேன்'' என்று வீரப்பன் பதில் கொடுத்தான்.

மறுநாள் கிழக்கு வெளுத்ததும் சில்லறை வியாபாரிகள் இருவரும் ஒருவனை ஒருவன் திரும்பிக்கூடப் பார்க்காமல் அந்த இடத்தை விட்டு எப்படியோ மறைந்துவிட்டார்கள். இரவெல்லாம் அவர்கள் அங்கே பேயுடன் வாதாடிக் கொண்டிருந்ததற்கு அவர்கள் கட்டிப் பிடித்துக்கொண்டிருந்த இரண்டு புளியமரங்களே சாட்சி. ஆனால் அவற்றால் யாருக்கு என்ன பிரயோஜனம்? அவை வாய் திறந்து பேசினால்தானே?

வீரமுத்துப்பட்டியிலே அன்று காலைமுதல் எங்கே பார்த்தாலும் பேயைப் பற்றியே பேச்சாக இருந்தது. அந்த ஊருக்கும் ரெயில்வே ஸ்டேஷனுக்கும் உள்ள பாதைக்குப் பக்கத்திலே ஒரு காட்டுச் சாலையிலே காவலுக்காக அந்த இரவில் ஒருவன் படுத்திருந்தான். அவன் இரவெல்லாம் புளியமரத்திலிருந்து இரண்டு பேய்கள் வீரிட்டுக்கொண்டிருந்ததைத் தன் காதாலேயே கேட்டதாகப் பலபேரிடம் சொன்னான். ஸ்டேஷனிலிருந்து கூடவே வந்த ஒரு பேயிடமிருந்து சாமர்த்தியமாகவும் தைரியமாகவும் தப்பித்துக்கொண்டு வந்த விதத்தைப் பற்றி வீரப்பனும் அண்ணாமலையும் தனித் தனியாகத் தம் நண்பர்களிடம் ரகசியமாக வெளியிட்டார்கள். பிறகு ஊரிலுள்ள மக்கள் பேயைப் பற்றிப் பேசாமலிருக்க முடியுமா?

ஜெட் விமானம்
புரொபஸர் விஞ்ஞானம்
ஆகாச வாணம்
டெலிபோன்
நிலச் சக்கரம்
ஒற்றைவெடி

1
கங்கா ஸ்நானம் ஆச்சா?
வாணங்கள் எல்லாம் விட்டீர்களா?
வாணங்கள் எல்லாம் வாங்கி விட்டோம். வாண வேடிக்கையும் பார்த்தோம்! அதைப்பற்றிக் கேட்கத்தான் வந்தோம். ஒரு வாணம் சுற்றுகிறது. டெலிபோன் வாணம் அங்கும் இங்குமாகப் பாய்கிறது. அவுட்டு மேலே போய் வெடித்துப் பூப்பூவாகச் சொரிகிறது. ஆகாசவாணம் சீறிக்கொண்டே போகிறது. இதெல்லாம் எப்படி?
2
இதோ ராதா ஊதுகிறளே, சுழலும் குழல், இப்படித்தான் அவைகளும்! இதையும் பாருங்கள்.
சுழலும் குழல்
இந்தக் கருவியில் ஜலம் விழுகிறது. உள்ளே விழும் ஜலம் அடியிலுள்ள குழாய்களில் இருக்கும் துவாரங்களின் வழியாக வெளியே பாய்கிறது. இதனுல் அந்தக் கருவியே சுழலுகிறது. தோட்டங்களில் உள்ள நீர் ஊற்றும் இப்படித்தான் சுற்றுகிறது.
3


4
இன்னொன்று: ஊஞ்சலிலிருந்து கீழே குதித்தால் ஊஞ்சல் சட்டென்று பின்னால் போவதைப் பார்த்திருப்பாய்.
ஆமாம்; பார்த்திருக்கிறோம்!
5
இதெல்லாவற்றிலுமே ஒரே மாதிரித் தத்துவம்தான் அடங்கியிருக்கிறது. ஒரு குச்சி என்று இருந்தால் இரண்டு நுனிகள் இருந்தாக வேண்டும். அதே போல எந்த விசைக்கும் செயல் (action), எதிர்ச் செயல் (re-action) என்ற எதிர்த் திசையாக உள்ள இரண்டு பயன்கள் உண்டு. இவை இரண்டும் சமமாக இருக்கும். இதைத்தான் நியூட்டனின் மூன்றாம் விதி என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். அதாவது
ஊஞ்சலிலிருந்து நீ எவ்வளவு வேகமாகக் குதிக்கிறாயோ அவ்வளவு வேகமாக ஊஞ்சல் பின்னோக்கிச் செல்லும். இதுதான் எதிர்ச் செயலின் தத்துவம். இந்தத் தத்துவம்தான் ஆகாச வாணம் முதலியவைகளில் அடங்கியிருக்கிறது.
6
இதோ ஆகாச வாணம்! இந்தக் குழாயிலுள்ள வெடி மருந்து எரிந்து அடிப்புறமாகச் சீறிக்கொண்டு கீழ்நோக்கி வருகிறது. இது செயல். இதற்கு எதிர்த் திசையாக அதாவது ஆகாயத்தை நோக்கி வாணமே மேலே செல்லுகிறது. இது எதிர்ச் செயல். இந்த எதிர்ச் செயலை யந்திரங்களில் உபயோகிக்கச் சமீபத்தில்தான் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.
ஆகாச வாணம்

அதில் ஜெட் விமானம் ஒன்று

முன்னெல்லாம் விசையின் செயலை மட்டும் பயன்படுத்திக்கொண்டார்கள். கப்பல், ரெயில், ஏரோப்பிளேன் இவைகளில் உள்ள நீராவி, பெட்ரோல், ஆயில் என்ஜின்களில் விசையின் செயல் மட்டுமே இப்போதும் பயன்படுகிறது. இவற்றை விசை முன்னோக்கித்தள்ளுகிறது.

புதிய முறையில் அமைத்த எதிர்ச் செயல் ஜெட் விமானங்களில் செயலைப் பயன்படுத்தாமல் எதிர்ச் செயலை மட்டுமே பயன்படுத்துகிறார்கள். ஜெட் விமானம் போகும் போது பார்த்தால் ஆகாசவாணத்திலிருந்து சொரியும் பொறிகளைப்போலப் புகை சீறிக் கொண்டு பின்னோக்கிச் செல்லும். இதுதான் செயல். எதிர்ச் செயல்தான் ஜெட் விமானத்தை வெகு விரைவாகச் செலுத்துகிறது.

இந்தத் தத்துவத்தைக் கொண்டு வி. 1 வி. 2 என்ற கொடிய ராக்கெட் வெடி குண்டுகளைத் தயாரித்தார்கள். சாய்வான தளங்களிலிருந்து ஏவினார்கள்.

இப்பொழுது ஜெட் விமானங்களைப் பிரயாணத்துக்குப் பயன்படுத்துகிறார்கள் அதில் ஒன்றுக்குக் காமெட் என்று பெயர் காலையில் பம்பாயில் ஏறினால் சாயங்காலத்துக்குள் லண்டனுக்குப் போய் விடலாம். அதாவது கிட்டத்தட்ட மணிக்கு 500 மைல் வேகத்தில் இந்த விமானம் ஆடாமல் அசையாமல் செல்லுகிறது.



ஹீரோ செய்த என்ஜின்



வி. 1 என்ற ராக்கெட்



வி. 2 என்ற ராக்கெட்



கடற்சிலந்தி.



ஜெட் விமானம்

கணவாய் மீன்கள் எதிரியிடமிருந்து தப்பிச் செல்லுதல்

84200

நீலப் பாவாடை

ஸரோஜா ராமமூர்த்தி

ராஜி அந்த வீட்டுக்குள் நுழைந்ததும் அவளுக்கு அதிருஷ்டம் அடிக்க ஆரம்பித்தது. சாரதாவைப் போன்ற எஜமானி கிடைத்தது பற்றி மிகவும் சந்தோஷப்பட்டாள். ராஜிக்கு மூன்று வயசில் முத்தம்மா என்று ஒரு பெண் குழந்தை இருந்தாள். கறுப்பாக இருந்தாலும் குறுகுறுவென்று கண்களும் களை சொட்டும் முகமும் சாரதாவை மிகவும் கவர்ந்தன. அத்துடன் சாரதாவுக்குக் குழந்தைகள் இல்லை. தன்னந்தனியாகப் பெரிய பங்களாவில் சுற்றி வரப் பிடிக்காமல் ராஜியை வீட்டுடன் இருக்கும்படி சொல்லி விட்டாள். முத்தம்மாவுக்கு விதம் விதமாகப் பூப்போட்ட சீட்டிச் சொக்காய்கள் தைத்துக் கொடுத்தாள்.

"கொஞ்சம் பெரியவள் ஆகட்டும், நல்ல பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிறேன்" என்று ராஜியிடம் கூறினாள் சாரதா. "நீங்க நல்லா இருக்கணும் அம்மா. தங்கம்போலக் குழந்தை ஒண்ணு உங்களுக்குப் பிறக்கணும்" என்று மனமார வாழ்த்தினாள் ராஜி.

* * *

ராஜி அந்த வீட்டுக்குள் நுழைந்த வேளை இரண்டு வருஷங்களுக்கெல்லாம் சாரதாவக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தை ரொம்பவும் அழகாக இருந்தது. கீதா என்று பெயர் வைத்துச் செல்லமாக வளர்த்தாள் சாரதா. சாரதாவை விட ராஜிக்குக் குழந்தை மேல் உயிர். அவளை விட முத்தம்மாவின் குழந்தையுள்ளம் சின்னக்குழந்தையைப் பார்த்துச் சந்தோஷப்பட்டது. பாப்பாவுக்குச் சின்னக்கால்களும் கைகளும் இருப்பதைப் பார்த்துப் பூரித்துப் போனாள் முத்தம்மா.

கீதா பிறந்து மூன்று வயசுக் குழந்தையாக வளரும் வரையில், முத்தம்மாவுக்கு முன்பு அந்த வீட்டில் காண்பிக்கப்பட்டு வந்த சலுகைகள் எல்லாம் மாறாமல் இருந்தன. ஆனால், 'வேலைக்காரியின் பெண்ணுக்கு இவ்வளவு செலவு செய்ய வேண்டியது அவசியந்தானா?' என்று சாரதா நினைக்க ஆரம்பித்தாள்.

'அம்மாவுக்கும் குழந்தை இருக்கிறது. அவுங்களுக்கும் செலவு இருக்கும்' என்று நினைத்துக் கொண்டாள் ராஜி. குழந்தை கீதா வைத்துக்கொண்டு விளையாடும் விலை உயர்ந்த சாமான்களை முத்தம்மா தொட்டு விட்டால் சாரதா கடிந்துகொள்வாள்.

"நீ அதையெல்லாம் தொடாதே, கண்ணு" என்று ராஜி எவ்வளவு தான் சொன்னாலும் முத்தம்மாவின் விளையாட்டுக் குணம் மாறவில்லை.

கூடிகார முள் சுற்றி வருவது போல், மனிதர்களின் மனமும் மாறுகிறது என்பதை ராஜி புரிந்து கொண்டாள். ஆனால், முத்தம்மா அதைப் புரிந்து கொள்ளவில்லை. முன்பெல்லாம் மாதிரி இல்லாமல் இப்பொழுது ஏன் கட்டுப்பாடுகள் ஏற்படுத்துகிறார்கள்?

அவளுக்கு இதெல்லாம் புரியாத புதிராக இருந்தது.

வழக்கம்போல் அந்த வருஷம் தீபாவளி வந்தது. எஜமானி அம்மாள் தாராள மனசுடன் இல்லை என்பதுதான் ராஜிக்குத் தெரியுமே? ஆகையால் முத்தம்மாவுக்குப் பிரமாதமாசப் பரிசு ஒன்றும் கிடைக்காது என்று அவள் தீர்மானித்துவிட்டாள். முத்தம்மா மட்டும் அழகிய பரிசை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். இதை அம்மாவிடம் சேட்டாள். "பைத்தியமே! வாயை மூடிக்கிட்டு இரு!" என்று அதட்டினாள் ராஜி.

அன்று மத்தியான்னம் தீபாவளிக்குத் துணிகள் வாங்குவதற்காகச் சாரதாவும் கீதாவும் கடைக்குப் புறப்பட்டார்கள். போவதற்கு முன்பு சாரதா ராஜியிடம், "முத்தம்மாவுக்கும் ஏதாவது வேண்டுமானால் சொல். நான் வாங்கி வருகிறேன். பிறகு சம்பளத்தில் பிடித்துக்கொண்டுவிடுகிறேன்" என்றாள்.

"ஒண்ணும்வேண்டாம் அம்மா. அவ அப்பா ஏதானும் வாங்குவாரு" என்று கூறிவிட்டாள் ராஜி.

கடையிலிருந்து சாரதா பல விலையுயர்ந்த துணிகளும் பட்டாசுக் கட்டுகளும் வாங்கி வந்தாள். கீதாவுக்கு வாங்கியிருந்த நீலப்பட்டுப் பாவாடை ஜரிகைக் கரையுடன் பளபளவென்று மின்னியது. கீதாவுக்கு ஒரே சந்தோஷம். தன் சந்தோஷத்தைத் தன்னை ஒத்த சிநேகிதியுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. தொலைவில் தனியாக நின்று இதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த முத்தம்மாவை அருகில் வரும்படி அழைத்தாள். கீதா அவளைமாடிக்கு அழைத்துச் சென்றாள். சத்தம் போடாமல் உள்ளே போய் அந்தப் பாவாடையை எடுத்து முத்தம்மாவுக்குக் கட்டிப் பார்த்துவிட வேண்டும் என்று கீதாவுக்கு ஆசையாக இருந்தது.



பெட்டியைத் திறந்த பாவாடையை மட்டும் எடுத்துக்கொண்டு இருவரும் வெளியே வந்தார்கள். கதவை நன்ருக மூடிவிட்டார்கள். அறைக்குள் சென்று கீதா முத்தம்மாவுக்கு அந்தப் பாவாடையைக் கட்டி அழகு பார்த்தாள்.

இதற்குள், "கீதா, கீதா! காப்பி சாப்பிட வருகிருயா?" என்று கூப்பிட்டாள் சாரதா.

குழந்தைகள் இருவரும் பயந்து போய்விட்டார்கள். அவசரமாகக் கீழே பாவாடையை அவிழ்த்துச் சுருட்டினுள். ஆனுல், அதற்குள் அம்மா மேலும் நாலுதரம் இரைந்து கூப்பிட்டுவிட்டாள்.

கீதா கீழே ஓடினுள்.

* * *

தீபாவளிக்கு முதல் நாள் கடையிலிருந்து வாங்கி வந்த துணிகளைப் பொறுக்கி வைத்துக் கொண்டிருந்தாள் சாதா. எவ்வளவு தேடியும் நீலப்பாவாடை மட்டும் அகப்படவில்லை.

'எங்கேபோச்சு, எங்கேபோச்சு?' என்று ஓயாமல் தேடினுள். அவள். கடைசியில் அவள் சந்தேகம் ராஜியின் மேலும், முத்தம்மாவின் மேலும் ஏற்பட்டது.

"அம்மா! நாங்கள் வயிற்றுக்கு இல்லாதவங்கதான். இருந்தாலும், உண்ட வீட்டுக்குத் தீங்கு செய்ய மாட்டோம்" என்று கண்ணீர் பெருகக் கூறினுள் ராஜி.

குழந்தைகள் இருவரும் அன்று தாங்கள் விளையாடிய விளையாட்டை அடியோடு மறந்து விட்டார்கள்!

சந்தோஷமாக இருக்க வேண்டிய நாளில் ராஜி பல வருஷங்களாக உழைத்த வீட்டை விட்டுக் குழந்தை முத்தம்மாவுடன் திருட்டுப் பட்டம் சூட்டிக்கொண்டு வெளியேறினள். கீதாவுக்கு இன்னொரு பட்டுப் பாவாடை கிடைத்தது.

தீபாவளி கழிந்தபிறகு இவ்வளவு காலமாகப் பூட்டிக்கிடந்த பக்கத்து வீட்டுக்கு யாரோ குடி வந்தார்கள். வீட்டைப் பெருக்கி அலம்பிச் சுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். விளையாட்டில் கவனம் செலுத்தாமல் மாடியில் உட்கார்ந்து அதைப் பார்த்துக்கொண்டிருந்தாள் கீதா. திடீரென்று பெருக்கிக்கொண்டிருந்த வேலையாள் ஒருவன் நீலப் பாவாடை ஒன்றைத் தூசுடன் எடுத்துத் திருப்பி திருப்பிப் பார்த்தான். கீதாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "என் பாவாடை அது!" என்று உரக்கக் கூவிக்கொண்டு அவனிடம் இருந்து பாவாடையை வாங்கிக்கொண்டு கீழே ஓடினள் அவள்.

"பக்கத்து வீட்டு மாடியிலே கிடந்தது அம்மா இது! அன்னிக்கி நான்தான் அங்கேபோட்டுட்டேன் அதை" என்று கூறினள் கீதா.

"வயத்துக்கில்லாதவங்க தான் நாங்க. இருந்தாலும் உண்ட வீட்டுக்குத் தீங்கு செய்யமாட்டோம்" என்று கூறிய ராஜியின் வார்த்தைகள் சாரதாவின் செவிகளில் ஒலித்தன.

அகப்பட்டுண்டியா?

உம்..ம்..

அப்படி!

போட்டோ: என். ராமகிருஷ்ணா

நம்ப முடியாத கதைகள்

'தம்பி'

நாலு இளைஞர்கள். நாலு பேரும் சுத்தச் சோம்பேறிகள். அவர்கள் ஒரு சத்திரத்தின் திண்ணையில் உட்கார்ந்துகொண்டார்கள். போவோர் வருவோரை ஏமாற்றிப் பறிப்பதுதான் அவர்கள் வேலை. அவ்வழியே போகும் பிரயாணிகளை அடித்துத் துன்புறுத்த மாட்டார்கள்; வலியத் திருட மாட்டார்கள். அதற்கும் சோம்பல்! ஆனால், திருடுவதைச் சாமர்த்தியமாகச் செய்வார்கள்.

அன்று வெளியூர்க்காரன் ஒருவன் அந்தச் சத்திரத்துக்கு வந்தான். நாலு சோம்பேறிகளும் அவனைப் பேச்சுக்கு இழுத்தார்கள்.

ஒரு சோம்பேறி சொன்னான்: "நல்லது. நீங்கள் யார் வேண்டுமானாலும் என்ன கதை வேண்டுமானாலும் சொல்லுங்கள். நான் நம்புகிறேன். நானும் ஒரு கதை சொல்லுகிறேன். அதை நீங்கள் நம்ப வேண்டும். மறுப்பவன் என் அடிமை. நீங்கள் சொல்வதை நான் நம்ப மறுத்தால், நான் உங்கள் அடிமை! பந்தயம் சரியா?"



இப்படிச் சொல்லிவிட்டு அவன் தன் சகாக்களுக்குக் கண்சிமிட்டினான். அவன் சொன்னதைப் புரிந்துகொண்ட மற்றொரு சோம்பேறி, "ஆகா! உன் பந்தயத்தை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் வெளி மனிதர் ஒருவர் வந்திருப்பதைப் பார். பந்தயம் அவ்வளவு கடுமையாக இருக்கக்கூடாது!" என்றான்.

இவர்கள் எண்ணப் போக்கை வெகு சுலபமாகக் கண்டுவிட்டான் வழிப்போக்கன். 'இவர்கள் நம்ப முடியாத கட்டுக் கதைகளைச்சொல்வார்கள். ஏதாவது தப்பு என்றால், நம் பணத்தைப் பறிக்கப் போகிறார்கள். இவர்களுக்கு ஒரு பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும்' என்று தீர்மானித்தான்.

ஆனால் வெறும் அப்பாவிபோல, "கதையா சொல்லுவீர்கள்! எனக்கு ரொம்பப் பிடிக்குமே. நான் பந்தயத்துக்குத் தயார்!" என்றான்.

பந்தயத்துக்குத் தீர்ப்புச் சொல்ல ஒரு முதியவரை அவன் அழைத்து வந்தான். பந்தயம் தொடங்கியது.

முதல் சோம்பேறி ஒரு கதை சொன்னான்: "அப்போது

நான் பிறக்கவே இல்லை. என் தாய் வயிற்றில் இருந்தேன். ஒரு நாள் என் அம்மா மாம்பழம் வேண்டும் என்று என் அப்பாவைக் கேட்டாள். வீட்டுத்தோட்டத்திலேயே மாமரம் இருந்தது. ஆனால் தம்மால் மரம் ஏற முடியாது என்று என் அப்பா சொன்னார். அதைக் கேட்ட எனக்கு வருத்தமாய் இருந்தது. என் அருமைத் தாய் ஆசையோடு கேட்பதை எப்படியாவது கொண்டுவர எண்ணினேன். உடனே என் தாயின் வயிற்றிலிருந்து, யாருக்கும் தெரியாமல் வெளி வந்து மாமரத்தின் மேல் ஏறி, நிறையப் பழம் பறித்தேன். வீட்டு அடுக்களையில் அவற்றைக் கொட்டிவிட்டு மறுபடியும் என் அம்மா வயிற்றுக்குள் போய்விட்டேன். மாம்பழத்தைப் பார்த்த என் தாய் சந்தோஷப்பட்டாள்.

முதல் சோம்பேறி தன் கதையை முடித்துவிட்டு வெளியூரானைப் பார்த்தான். அவன் தடை எதுவும் சொல்லவில்லை. மற்ற மூன்று பேரும் வாய் திறக்கவில்லை.

இரண்டாவது சோம்பேறி சொன்னான்: "எனக்கு மூன்று நாலு வயதாயிருந்தபோது ஒரு நாள் காட்டுக்குப் போய் ஒரு பெரிய மரத்தின் மேல் ஏறினேன். அதற்குள் இருட்டிவிட்டது. 'சரி, இரவு மரததின் மேலேயே தங்கலாம்' என்று நினைத்தேன். கட்டில் இல்லாமல் எனக்குத் தூக்கம் வராது. ஆகவே வீட்டிலிருந்து என் கட்டிலைக் கொண்டுவர எண்ணினேன். இருட்டாயிருந்ததால் இறங்க முடியவில்லை. உடனே பக்கத்துக் கிராமத்துக்குப் போய் ஒரு பெரிய ஏணி கொண்டு வந்து போட்டு, பிறகு இறங்கினேன். வீட்டுக்குப் போய என் கட்டிலை எடுத்து வந்து, அன்று இரவு மரத்தின் மேலே தூங்கினேன்."



இரண்டாவது சோம்பேறி தன் கதையை முடித்துவிட்டு, வெளியூரானைப் பார்த்தான். அவன் ஓர் ஆட்சேபமும் சொல்லவில்லை. மற்ற மூவரும் மறுத்துப் பேசவில்லை.

மூன்றாவது சோம்பேறி சொன்னான்: "ஒரு முயலைப் பிடிக்க நான் காட்டுக்குப் போனேன். ஒரு புதரில் ஏதோ சத்தம் கேட்டது. அருகே போனதும் அது முயல் அல்ல; சிங்கம் என்று தெரிந்தது! 'சீசீ! உன்னை யார் கூப்பிட்டது? நீ போய் எனக்கு ஒரு முயலை அனுப்பு' என்றேன். சிங்கம் உறுமிக் கொண்டே என்னிடம் வந்தது. என் தலையைக் கடித்துத் தின்று விட்டது. உடனே எனக்குக் கோபம் கோபமாக வந்தது. என் கையால் அதன் வயிற்றைக் கிழித்து, என் தலையை வெளியே எடுத்து, ஒட்ட வைத்துக் கொண்டேன். அன்று முதல்

சிங்கம் என் வீட்டில் நாய் போல இருந்து வந்தது. சற்று முன் தான் அதைக் கொன்றேன்.''

மூன்றாவது சோம்பேறி கதையை முடித்தபோதும் ஒருவரும் பேசவில்லை.

நாலாவது சோம்பேறி சொன்னான்: ''நாலு நாளைக்குமுன் கடலில் மீன் பிடிக்கச் சென்றேன். இரண்டு நாள் முழுதும் வலை வீசிப் பார்த்தும் ஒருமீன் கூடக் கிடைக்கவில்லை. 'சரி, விஷயம் என்ன பார்ப்போம்' என்று எண்ணிக் கடலில் முக்குளித்தேன். இப்படி மூன்று நாள் தண்ணீரில் நீந்திக் கடல் அடியை அடைந்தேன். அங்கே ஒரு ராக்ஷஸ மீன், குட்டி மீன்களை விழுங்கி ஏப்பமிட்டுக் கொண்டிருந்தது. 'ஓகோ! இது தானா விஷயம்?' என்று என் முஷ்டியால் ஓங்கி ஒரு குத்து விட்டு அந்த மீனைக் கொன்றேன். எனக்குப் பசியாயிருந்ததால் அங்கேயே தீமூட்டி, மீனை வாட்டித் தின்றேன். பிறகு இன்னும் மூன்று நாள் நீந்திக் கடல் மட்டத்துக்கு வந்து நேற்று மாலைதான் திரும்பினேன்.''

இப்பொழுதும் யாரும் எதுவும் மறுத்துப் பேசவில்லை. 'அடடா! இவன் நம்மிடம் ஏமாறவில்லையே!' என்று வருத்தப் பட்டார்கள் அந்தச் சோம்பேறிகள்.

அப்போது வெளியூரான் தன் கதையைச் சொன்னான்: ''இப்



''பாலன் அடிச்சுட்டான், அப்பா!''

''நான் வெறுமே இருந்தேன். அவனா வந்து..''
''வா, அந்தப் பயலை நொறுக்கி..''

போது நான் சொல்வது உண்மையாக நடந்தது. பத்து வருஷத்துக்கு முன் நான் ஒரு பருத்தித் தோட்டம் போட்டிருந்தேன். அதில் ஒரு பருத்திச் செடி மட்டும் பெரிதாக வளர்ந்தது. ஒரு நாள் திடீரென்று நாலு காய் காய்த்தது. நான் அவைகளைப் பறித்து உடைத்தேன். ஒவ்வொன்றிலிருந்தும் பலசாலியான ஓர் இளைஞன் வெளிவந்தான். 'சரி, நம் தோட்டத்துக்கு வேலை செய்யச் சரியான ஆட்கள்!' என்று சொல்லி, அவர்களை வேலை வாங்கினேன். ஆனால் அவர்கள் சோம்பேறிகள். ஒரு நாள் எனக்குத் தெரியாமல் நாலு பேரும் ஓடிப் போய்விட்டார்கள். அன்று முதல் இன்று வரை அவர்களைத் தேடி வந்தேன். இன்றுதான் அவர்களைக் கண்டேன். **நீங்கள்தான் அந்தச் சோம்பேறிகள். எழுந்திருங்கள்! வேலைசெய்ய வாருங்கள்!"** என்று அவன் அவர்களை அதட்டினான்.

இந்தக் கதையை அவர்கள் நம்புவது எப்படி? நம்பினாலும் நம்பாவிட்டாலும் அடிமையாக வேண்டும்!



"என்ன, ஒப்புக்கொள்கிறீர்களா? இல்லையா?" என்று கேட்டார் முதியவர். சோம்பேறிகள் விழிக்கவே, "ஐயா, இவர்கள் உங்கள் அடிமைகளே" என்று தீர்ப்பளித்தார்.

உடனே சோம்பேறிகள் வெளியூரான் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டார்கள். அவனும் மன்னித்துவிட்டான். அன்று முதல் அவர்கள் யாரிடமும் வாலாட்டுவதில்லை.



"அவ அப்பாகூட.."
"அவ அப்பனையும் சேர்த்து.. அவன் அப்பா யாரு?"

"ராமசாமி!"
"ஹா!"

நாணயம்

எல்லார்வி

முருகேசஞ் செட்டியார் ஒரு பெரிய வியாபாரி. அவரிடம் பல நல்ல குணங்கள் உண்டு. அவைகளில் மிகவும் முக்கியமாகக் குறிப்பிடக் கூடியது அவருடைய நாணய முறைதான்.

வியாபாரம் என்ருல் ஏராளமான பணத்தை முதலீடு செய்தால்தானே முடியும்? சில சமயம் போட்ட முதல் திரும்பவும் கைக்கு வந்துசேரத் தாமதமாகும். அப்போது பணம் தேவைப்படும். அப்படித் தேவைப்படும் போது அக்கம் பக்கம் உள்ள பிரபுக்களிடம் கடன் வாங்குவார் செட்டியார். செட்டியாரின் நாணய முறையை உத்தேசித்து யாரும் தயங்காமல் கொடுப்பார்கள்.

ஒரு பிரபுவினிடம் போய், 'எனக்கு இவ்வளவு ரூபாய் பணம் வேண்டும்; இன்ன தேதியிலே திருப்பித் தருகிறேன்' என்பார். பிரபு அவர் கேட்ட தொகையை அட்டி சொல்லாமல் கொடுப்பார். செட்டியார் என்னதான் செய்வாரோ என்னவோ, குறித்த தேதியிலே கடன் தொகையைத் திருப்பிக் கொடுத்து விடுவார். சீட்டுக் கிடையாது, அடைமானம் கிடையாது - வெறும் வாய் வர்த்தை தான்.

அந்த வட்டாரம் பூராவிலுமே முருகேசஞ் செட்டியாரின் நாணயம் மிகப் பிரசித்தம். அதனலேயே அவருடைய வியாபாரமும் வெற்றிகரமாய் நடந்து வந்தது.





கருப்பஞ் செட்டியார் முருகேசஞ் செட்டியாரின் பக்கத்து வீட்டுக்காரர். கருப்பஞ் செட்டியாரிடம் நேர் மாறுன கெட்ட குணங்கள் மலிந்து கிடந்தன. அவரும் ஒரு வியாபாரிதான். ஆனல் அவரது வியாப்ாரம்செழிக்கவில்லை. அதற்குக் காரணம் அவருடைய கெட்ட குணங்களே. தம் துர்க்குணங்களால்தான் தம் வியாபாரம் செழிக்கவில்லை; முருகேசஞ் செட்டியாரின் நல்ல குணங்களால்தான் அவர் வியாபாரம் நன்கு நடைபெறுகிறது என்பதை மனத்தில் கொள்ளாமல் வீணே முருகேசஞ் செட்டியார்மீது அசூயையும் ஆத்திரமும் கொண்டார் கருப்பஞ் செட்டியார். அவரைப் பற்றிக் கண்டவர்களிடமெல்லாம் கண்டவாறு ஏசிவந்தார். அதனல் முருகேசஞ் செட்டியாருக்கு ஒரு குறைவும் ஏற்பட்டுவிடவில்லை.

ஒரு சமயம் கடல் கடந்து வியாபாரம் செய்யப் போனர் முருகேசஞ் செட்டியார். அவர் முந்திப் போய் அங்கே கொள் முதல் செய்ய வேண்டிய சாமான்களை விலை பேசினர். அவர் அங்கே விற்று முதல் செய்ய வேண்டிய சரக்குப் பின்னல் கப்பலில் வந்துகொண் டிருந்தது. அதை நம்பித்தான் அவர் அங்கே சாமான்களைக் கொள்முதல் செய்தார். ஆனல் தெய்வச் செயலாக நேர்ந்த புயல் விபத்தினல் அவருடைய கப்பலுக்குச் சேதம் ஏற்பட்டுவிட்டது. பாவம், செட்டியார் என்ன செய்வார்? கொள்முதல் செய்த சரக்குகள் அங்கிருந்து புறப்படுகிற வேருெரு கப்பலிலே ஏற்றிக்கூட ஆகிவிட்டது. என்ன செய்வதென்று புரியாமல் திகைத்தார் செட்டியார். சரக்குக் கொடுத்தவரிடம் தமது நிலைமையை விளக்கி ஊர் போய்ச் சேர்ந்ததும் அவருக்குச் சேரவேண்டிய தொகையை அனுப்பி வைப்பதாகக் கூறினர். தம் மேல்துண்டிலிருந்து ஓர் இழை நூலை எடுத்தார். “இது என் நாணயத்திற்கு அடைமானம். நான் பணம் அனுப்பினதும் தயவுசெய்து ஜாக்கிரதையாக இதை எனக்குத் திருப்பி யனுப்பிவிடுங்கள்” என்று கூறிக் கொடுத்தார்.

“பல லட்ச ரூபாய்க்கு இவருடைய மேல் துண்டின் ஓர் இழை நூல் அடைமானமா?” என்று அந்த வியாபாரி ஆச்சரியப்பட்டுப் போனர். பிறகு அதற்குச் சம்ம

தித்து அந்த நூலிழையை வாங்கிப் பத்திரப் படுத்திக்கொண்டார்.

செட்டியார் சுகமாய் ஊர் வந்து சேர்ந்தார். குறிப்பிட்ட தொகையை உடனே அனுப்பி வைத்தார். அயல் நாட்டு வியாபாரியிடமிருந்து அநேக வந்தனங்களுடன் அந்த நூலிழை வந்துசேர்ந்தது. இதையெல்லாம் பற்றி யாரிடமும் பெருமையடித்துக் கொள்ளவில்லை செட்டியார். ஆனாலும் தம் மனைவி கேட்ட போது மட்டும் சுருக்கமாகக் கூறினார். 'பக்கத்து வீடல்லவா? கருப்பஞ் செட்டியாருக்கு அது காதில் விழுந்தது. உடனே தமக்குள் ஏதோ திட்டம் போட்டுக்கொண்டு மறுநாளே அயல் நாடு சென்றார்.

முருகேசஞ் செட்டியார் எந்த வியாபாரியிடம் போய் வியாபாரம் செய்தாரோ அவரிடமே போய்த் தாமும் வியாபாரம் செய்தார். தம் கப்பலும் விபத்துக்குள்ளாகி விட்டதாகக் கூறி நடித்தார். அந்த வியாபாரியும் சிறிது நம்பினார். 'முருகேசஞ் செட்டியாரின் ஊர்க்காரராயிற்றே, இவரும் நல்ல நாணயஸ்தராக இருப்பார்' என்று எண்ணினார். அவர் யோசனை செய்துகொண்டிருக்கிறபோதே, "என்ன பிரமாதமாக யோசிக்கிறீர்கள்? எங்களூர் முருகேசஞ் செட்டியாரைப் போல் நான் அற்பனல்ல. அவர் மேல்துண்டிலிருந்து ஒரே இழைதானே அடைமானமாகக் கொடுத்தார்? இந்தாருங்கள்: நான் என் மேல் துண்டையே உங்களிடம் தருகிறேன். இதில் எத்தனையோ இழைகள் இருக்கின்றன" என்று கூறித் தம் மேல்துண்டை எடுத்து அலட்சியமாகப் போட்டார் கருப்பஞ் செட்டியார்.

உடனே விழித்துக்கொண்டார் அந்த வியாபாரி. 'ஓ! இந்த ஆசாமி நாணயஸ்தரல்ல' என்று தம்முள் எண்ணிக்கொண்டார். முருகேசஞ் செட்டியார் அந்த ஓரிழை நூலுக்குக் கொடுத்த மதிப்பு எங்கே, இவருடைய அலட்சியமான பேச்சு எங்கே?' என்று எண்ணிக் கப்பலிலே ஏற்றிய சரக்குகளையெல்லாம் திரும்ப இறக்கிக்கொண்டு கருப்பஞ் செட்டியாரை வெறுஞ் செட்டியாராக விரட்டிவிட்டார்.

ஊர் திரும்பிய கருப்பஞ் செட்டியார் வெட்கத்தால் குன்றிப் போனார். முருகேசஞ் செட்டியாரிடம் போய், தாம் நடந்து கொண்ட முறைகளையெல்லாம் விவரமாகக் கூறி மன்னிப்பும் கோரினார்.



மாப்பிள்ளை: அப்பா! காசு கொடுக்காமல் கிச்சு போக மாட்டேன்னான். அவனை விரட்டப் பட்ட பாடு!

அம்மாவின் கவலை

அழ. வள்ளியப்பா

குழந்தை பிறந்தது. பிறந்ததுமே,
'குவாக்குவா' சப்தம் எழுந்ததுவே.
அம்மா அந்தக் குழந்தையினை
ஆர்வத் துடனே பார்த்தனளே.
கண்ணைப் பார்த்தாள், ஆசையுடன்,
கண்டாள் அதனில், ஒளியினையே.
'என்றன் குழந்தை குருடல்ல'
என்றே அம்மா மகிழ்ந்தனளே.
முகத்தைப் பார்த்துச் சிரித்திடுமாம்
மூன்று மாதக் குழந்தையினைக்
கையைத் தட்டி அழைத்திடுவாள்.
காதால் கேட்டுத் திரும்பிடுமாம்.
'என்றன் குழந்தை செவிடல்ல'
என்றே அம்மா மகிழ்ந்திடுவாள்.
ஒன்பது மாதம் சென்றதுமே
'உப்புப் புப்பெனக் கூறிடுவாள்.
அம்மா சொல்வ தைஅழகாக
அந்தக் குழந்தையும் கூறிடுமாம்.
'என்றன் குழந்தை ஊமையென
எவரும் கூறார்' எனமகிழ்வாள்.
பத்து மாதம் ஆனதுமே
தத்தித் தத்தித் தவழ்ந்திடுமாம்.

அத்துடன் நிற்கப் பழகிடுமாம்.
அம்மா அதனைக் கண்டதுமே,
'என்றன் குழந்தை சப்பாணி
இல்லை' என்றே மகிழ்ந்திடுவாள்.
அப்புறம் ஒருசில மாதங்கள்
ஆனதும், அந்தக் குழந்தையுமே,
நன்றாய் நின்று, நேராக
நடக்கப் பழகிடும்; அதுகண்டு,
'என்றன் குழந்தை முடமில்லை'
என்றே அம்மா மகிழ்ந்திடுவாள்.
கூனாய்க் குருடாய் இல்லாமல்,
கூப்பிடும் குரலைக் கேட்பவனாய்
இருந்தும் நல்ல குணமெதுவும்
இல்லா திருந்தால் என்னபயன்?
அம்மா மகிழ்ச்சி கொள்ளுவளோ?
அதிகம் துயர்தான் அடைந்திடுவாள்.
'பத்து மாதம் சுமந்தென்ன?
பாடு பட்டு வளர்த்தென்ன?
எத்தனை கஷ்டப் பட்டென்ன?
இதுபோல் பிள்ளை இருக்கிறதே!'
என்றே எண்ணி வருந்திடுவாள்.
என்றும் கவலை கொண்டிடுவாள்.

கண்ணன் ஒரு திருடன்

சங்கர சுப்பு

தமிழ் ஆசிரியர் முருகபூபதி பாடம் சொல்லிக்கொண்டிருந்தார்: "மந்தரை சொன்ன சொல் கேட்ட கைகேயி கோபம் மிகக் கொண்டாள். கண்களில் கனல் பறக்க ஹம்ஸதூளிகா மஞ்சத்தை விட்டெழுந்து வெறியுடன் தலையில் சூடியிருந்த மணம் மிகுந்த மலரைக் குரங்குபோல் பிய்த்து, அழகாயிருந்த தலையை அலங்கோலமாக்கிக் கொண்டாள்..."

வகுப்பில் திடீரென்று பேச்சுச் சத்தம் கேட்டவுடன், புத்தகத்தில் இருத்தியிருந்த பார்வையை நிமிர்த்தினர்.

"டேய், யாரங்கே பேசுகிறது? விசுவநாதம்...எழுந்திரு!" கடைசிப் பெஞ்சியில் உட்கார்ந்திருந்த விசுவநாதன் என்னும் மாணவன் தன் இடம் விட்டு எழுந்தான்.

"என்னடா பேச்சு, நடுவிலே?"

"ஒரு பேச்சுமில்லே, சார். நான் கவனமயாய்க் கேட்டுவருகிறேன்."

"ஐ வி! சரி, கடைசியாக என்ன சொன்னேன்?"

"கேவிக் கேவி அழுதுகொண்டிருக்கிறன்.."

"கொண்டிருக்கிறனு?"

"ஆமாம் சார்."

"ஆமாம் சாரா? எங்கேடா கவனம், கழுதை? யார் கேவிக் கேவி அழுதுகொண்டிருக்கிறர்கள்?"

"வடதீர்த்தம், சார்!"

"என்னது?"

"ஆமாம், சார். அதோ பாருங்கள்" என்று எதிர்ப்பெஞ்சியில் உட்கார்ந்துகொண்டிருந்த வடதீர்த்தத்தைச் சுட்டிக் காட்டினன் விசுவம்.

"வடதீர்த்தம்..என்னடா அழுகை?"

ஒரு மாணவன் தன் இடத்தில் அமர்ந்த வண்ணமே, அதிகப்பிரசங்கித்தனமாக, "வடதீர்த்தத்திற்குக் கைகேயின் துக்கம் தாளவில்லே போலும்" என்றுன்.

வகுப்பில் எல்லாரும் சிரித்தார்கள். தமிழ் ஆசிரியரும் இலக்கண சுத்தமாக, ஆனல் மெல்லச் சிரித்தார். உடனே முகத்தைக் கடுமையாக வைத்துக்கொண்டு, "எந்த அதிகப் பிரசங்கி அது? எழுந்து நிற்கட்டும்" என்றார். கண்ணன் என்னும் இளைஞன் எழுந்து நின்றுன்.

"கண்ணு, என்னடாது? இது வகுப்பா, இல்லே சந்தைக் கடையா? உன் கண்ணேப் பிடிங்

கிப்பிடுவேன், இனிமேல் குறுக்கே பேசினுயோ! மார்க்கடம், உட்கார்ந்து தொலே. முழிக்காதே'' என்று கண்ணனைப் பார்த்துக் கூறிவிட்டு, "என்ன வடதீர்த்தம், ஏன் அழுகிருய்? சமாசாரம் என்ன?'' என்று வினவினுர்.

விக்கிக்கொண்டே, "சார்.... என் தீபாவளி மலரைக் காணேம்.. சார்......''

"உன் மலரைக் காணவில்லேயா? என்னடா புலம்புகிருய்? என்னது அது?''

"என்ன, சார்! இது தெரியவில்லே, தீபாவளி மலர், சார்!'' என்று குறுக்கிட்ட பராங்குசத்தை முறைத்துப் பார்த்துவிட்டு, "ஆமாம், காணேம் என்ருல் என்னே என்ன செய்யச் சொல்கிருய்? 'வாத்தியாரே உனக்கு வேறு வேலே என்ன? என் தொலேந்து போன புஸ்தகத்தைத் தேடிக் கொடு' என்கிருயா?'' என்று கேட்டார்.

"இல்லே, சார். அப்படிச் சொல்லவில்லே, சார். 'லஞ்சு ஹவரி'ல் டிபன் சாப்பிட்டு விட்டுப் பாத்திரத்தை அலம்பி வரப் போனேன். திரும்பி வந்தபோது என் மற்றப் புஸ்தகங்களோடு வைத்திருந்த மலரைக் காணேம்!''

"பத்திரிகைகளே யெல்லாம் என் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டுவருகிருய்?''

"கொண்டு வந்தது பிசகு தான். ஆனுல் அதை யாராவது திருட வேண்டுமா, சார்?''

"இந்தப் பேச்சுப்பேசத் தெரிகிறவனுக்குப் புஸ்தகத்தையும் ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளத் தெரிந்திருக்க வேண்டுமே.''

"சார், நீங்கள் விசாரியுங்கள். முழுசாய் ரூபாய் ஒன்று, சார். கிடைக்காது சார்; தீபாவளி மலர் சார்'' என்ருன் அழுதுகொண்டே.

"அழுகையை நிறுத்து. டேய், யாரெல்லாம் டிபன் நேரத்திலே வகுப்பில் இருந்தது?''

ஆறு மாணவர்கள் எழுந்தார்கள். அறுவரையும் விசாரித்தார். 'எனக்குத் தெரியாது', 'எனக்குத் தெரி

யாது' என்று எல்லோரும் ஒரே முகமாகக் கூறினார்கள்.

"உங்களுக்குத் தெரியாது என்றால் எங்கே போய்விடும்?"

"எங்கேயாவது போய்விட்டால் எங்களுக்குத் தெரிந்துதான் இருக்க வேண்டுமா, சார்?" என்றான் நின்ற ஆறு பேர்களில் ஒருவனான கஸ்தூரி.

"டேய் கஸ்தூரி மாத்திரை! என்னடா குதர்க்கம்?"

"பின்னே என்ன, சார்? நாங்கள் டிபன் வேளையிலே வகுப்பில் இருந்தோம் என்ற காரணத்துக்காக எங்களைத் திருடனாக்கி விடமுடியுமா? சந்தர்ப்பம் மாத்திரம் போதாது, சார்" என்று சட்டம் பேசினான் கஸ்தூரி.

"வடதீர்த்தம், ஒருவரும் தெரியாது என்கிறார்கள். இப்போது என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?"

"எடுத்தவன் சொல்லிவிடுவானா?" என்று ஒரு குரல் கிளம்பியது.

"டேய், தக்ஷிணாமூர்த்தி, இதென்ன ஹைகோர்ட் என்று நினைச்சுண்டிருக்கயா, தலைக்குத் தலை பேச? வக்ரப்பயலே, பெஞ்சு மேலே ஏறி, தெற்கே பார்த்து நில்லு."

அப்போது அந்த வகுப்பின் பக்கமாகச் சென்ற தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் கணேசமூர்த்தி தம் பார்வையை வகுப்பில் திருப்பினார். உடனே வகுப்பினுள் நுழைந்து, "என்ன சமாசாரம்? வகுப்பில் ஒரே கூச்சலாயிருக்கே! சந்தை இரைச்சல் தோற்றுவிடும்போல் இருக்கிறதே!" என்றார்.

தமிழ் ஆசிரியர் முருகபூபதி விஷயத்தைத் தெளிவாகச் சொன்னார்.

தலைமை ஆசிரியர், "டிபன் நேரத்தில் வகுப்பில் இருந்த ஆறு பேர்களும் எழுந்து நில்லுங்கள்" என்றார்.

முதலில் நின்ற ஆறு மாணவர்களும் மறுபடி எழுந்து நின்றார்கள். ஒவ்வொருவரையும் விசாரித்தார் தலைமை ஆசிரியர். 'எனக்குத் தெரியாது', 'எனக்குத் தெரியாது' என்ற பழைய பல்லவியையே திரும்பப் பாடினார்கள்.

"அப்போ புஸ்தகம் போனவழி? ஹூம், எடுத்தவன் உண்மையை ஒப்புக்கொண்டுவிட்டால் நான் தண்டிக்க மாட்டேன்" என்றார் தலைமை ஆசிரியர்.

"என்ன, ஆழ்வார்?"

"எனக்குத் தெரியாது."

"மதவடை?"



"எனக்குத் தெரியாதுங்க, சார்."

"பன்னீர்செல்வம்?"

"வாஸ்தவமாக நான் புஸ்தகத்தை எடுக்கவில்லை."

"கண்ணன்?"

"அப்படி ஒரு புஸ்தகம் இருந்ததாகவே எனக்குத் தெரியாது சார்."

"கஸ்தூரி, உனக்குத் தெரியுமா? நீ எடுக்காவிட்டாலும் யார் எடுத்தார்கள் என்பதாவது தெரியுமா?"

"அந்தப் புஸ்தகத்தின் வாசனை கூட எனக்குத் தெரியாது."

"எத்திராஜூ.. உனக்கும் ஒன்றும் தெரியாதோ?"

"ஆமாங்க, சார்."

"அப்படியா? சரி. நான் இப்போது ஒரு சிறிய கதை சொல்லுகிறேன், கேளுங்கள். உங்களில் அநேகருக்கு அந்தக் கதை தெரிந்திருக்கும். இருந்தாலும் சொல்லுகிறேன்.

"முன்னொரு காலத்தில் ஒரு ராஜா நாட்டை ஆண்டுவந்தார். அவரிடம் மதியூகி என்பவர் பிரதான மந்திரியாய் இருந்து வந்தார்.

"ஒரு சமயம் அரண்மனையில் ஒரு திருட்டு நடந்தது. அரசனின் வைர மோதிரம் களவு போய் விட்டது. யாருக்கும், எப்படி மோதிரம் மாயமாய்ப் போயிற்று என்பது விளங்கவில்லை - திருடனைத் தவிரத்தான். 'கட்டுக்காவல் பலமாய் இருப்பதால் வெளியிலிருந்து திருடன் வரவில்லை. அரண்மனையிலேயே யாரோ களவாடியிருக்கிறார்கள்' என்று மதியூகி நிச்சயம் செய்தார்.

"அரசனின் அந்தரங்க அறையைக் கவனித்துக்கொள்ளும் பத்து வேலைக்காரர்களும் தமக்குத் தெரியாதென்று சொன்னார்கள்.

"உண்மையை லேசில் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்போல் இருக்கிறது என்று எண்ணி மந்திரி சற்று நேரம் யோசனை செய்தார். பிறகு ஒரு சேவகனைக் கூப்பிட்டு ஒரே அளவு நீளமும் பருமனும் உள்ள பத்துச் குச்சிகளைக் கொண்டு வரச் சொன்னார். பத்துக் குச்சிகளையும் தலைக்கு ஒன்றாகக் கொடுத்து, 'இதை நீங்கள் உங்களுடன் எடுத்துச் சென்று நாளை திருப்பிக் கொண்டு வாருங்கள். எவன் ராஜாவின் மோதிரத்தைத் திருடியிருக்கிறானோ அவனுடைய குச்சி நாளைக்குள் ஓர் அங்குலம் வளர்ந்துவிட்டிருக்கும். ஆகையால் நாளை எல்லோரும் மறக்காமல் குச்சிகளுடன் என்னை வந்து பார்க்க வேண்டும்' என்று கூறினார்.

"மறுநாள் பத்துப் பேரும் மந்திரி முன் அவரவர்களுக்குக் கொடுத்த குச்சிகளுடன் ஆஜரானார்கள்.

"மந்திரி ஒவ்வொருவனிடமும் இருந்த குச்சியைப் பரிசோதித்தார். ஒன்பது பேருடைய குச்சிகளும் கொடுத்தபடியே இருந்தன;

(125-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வளரவில்லை. ஒரு வேலையாளின் குச்சி மாத்திரம் ஓர் அங்குலம் குறைந்து காணப்பட்டது. காரணம் என்ன தெரியுமா? மோதிரத்தைத் திருடியவன் தன் குச்சி ஓர் அங்குலம் வளர்ந்து விட்டிருக்கும் என்று பயந்து அதன் நீளத்தில் ஓர் அங்குலத்தை வெட்டிவிட்டான். அதனால் மந்திரி அவனிடம் கொடுத்த குச்சி ஓர் அங்குலம் குறைந்துவிட்டது. மந்திரி திருட்டைக் கண்டுபிடித்து விட்டார்.

‘‘அதேபோல் நான் இப்போது உங்கள் ஆறு பேருக்கும் தலைக்கு ஒரு பிரம்பு கொடுக்கப் போகிறேன். நீங்கள் ஆறுபேரும் அதை உங்களுடன் எடுத்துக்கொண்டு போய் நாளை பள்ளிக்கூடம் வரும் போது திருப்பிக் கொண்டு வாருங்கள். எனக்குத் தெரிந்துவிடும், மலரைத் திருடியவன் யாரென்று. என்ன, சரிதானா?’’

‘‘ஓஹோ, சரி’’ என்று ஆறு பேரும் சேர்ந்து கூவினார்கள். உடனே தலைமை ஆசிரியர் ஆறு பிரம்புகளை எடுத்துவரச் சொன்னார். ஆறு பேரிடமும் ஒவ்வொன்றைக் கொடுத்தார். நாளை மறக்காமல் கொண்டு வர வேண்டும். யாரும் ‘ஆப்ஸெண்ட்’ ஆகக் கூடாது’’ என்று கூறிவிட்டுத் தம் அறைக்குச் சென்று விட்டார்.

* * *

மறு நாள் ஆறு மாணவர்களும் தம் தம் பிரம்புகளுடன் தலைமை ஆசிரியரின் அறை வாசலில் நின்றார்கள். பிறகு ஒவ்வொருவராக அறைக்குள் சென்றார்கள்.

முதலில் மதவடை சென்றான். அவனிடமிருந்த பிரம்பை வாங்கிப்

பார்த்துவிட்டு, "உன்னுடைய பிரம்பு ஏன் ஓர் அங்குலம் வளர வில்லை?" என்று கேட்டார்.

"நான் புஸ்தகத்தைத் திருட வில்லை" என்று அவன் பதில் அளித்தான். இம்மாதிரியே ஆழ்வார், பன்னீர் செல்வம், கஸ்தூரி, எத்திராஜு ஆகிய நால்வரையும் விசாரித்தார். கடைசியாகக் கண்ணன் அவர் அறைக்குள் நுழைந்தான்.

எல்லோரையும் கேட்டது போலவே, "உன்னுடைய பிரம்பு ஏன் ஓர் அங்குலம் வளரவில்லை?" என்று வினவினார்.

உடனே கண்ணன் தயங்காமல், "நான் என்ன சர்வமுட்டாளா? அந்த ராஜா வேலைக்காரன் மாதிரி பிரம்பில் ஓர் அங்குலத்தை வெட்டிக்கொண்டு வந்துவிடுவேன் என்று எதிர்பார்த்தீர்களா?" என்று 'என் அப்பன் குதிருக்குள் இல்லை' என்னும் தினுசில் பதில் சொன்னான்.

தலைமை ஆசிரியர் கண்ணனின் இந்தப் பதிலை எதிர்பார்த்தவர்போல் சிரித்துவிட்டு, "கண்ணன், நீ இப்போதே உன் வீட்டிற்குச் சென்று வடதீர்த்தத்தின் மலரைக் கொண்டு வந்து கொடுத்துவிடு. ஏன் இந்தமாதிரி திருட்டுக் காரியம் செய்கிறாய்? உனக்கு நான் என்ன தண்டனை கொடுக்கட்டும்?" என்று கேட்டார்.

கண்ணன் வகையாக மாட்டிக் கொண்டுவிட்டோமே என்று வருந்திக் கண்ணீர் உகுத்தான். தன் நாக்கே தனக்குச் சத்துருவாய் வாய்த்துவிட்டதே என்று வருந்தினான்.

இருந்தாலும், தைரியத்துடன் நிலைமையைச் சமாளிக்க, "சார், என்னை மன்னித்துவிடுங்கள். நான் திருடவேயில்லை. அவனேதான் கொடுத்தான். அதை அவன் அடியோடு மறந்துவிட்டான். இந்த வயசில் இவ்வளவு மறதியா? அப்புறம் விசாரணை நடந்தது. அதனால் என்னதான் நடக்கிறது பார்க்கலாம் என்று எடுத்துக்கொண்டு போய்விட்டேன்" என்றான்.

"ரொம்பக் கெட்டிக்காரத்தனமாகப் பேசுகிறாயே!" என்று கண்ணனை வகுப்பிற்குக் கூட்டிச் சென்றார் தலைமை ஆசிரியர்.

"வடதீர்த்தம் உன் மலர் கிடைத்து விட்டது. கண்ணன் தான் மலரைத் திருடினான். அவன் அதை வேண்டுமென்றே திருடவில்லை. அவன் திருடினதற்கு நீயும் ஒரு விதத்தில் காரணம்" என்று கூறிவிட்டு, கண்ணனின் கையில் ஒரு சாக்பீஸைக் கொடுத்தார்.

"போர்டில் 'கண்ணன் ஒரு திருடன்' என்று பத்துத் தடவை எழுது" என்றார் கணேசமூர்த்தி.

அவ்வளவு பையன்களுக்கு மத்தியில் - நல்லவேளை வகுப்பில் பெண்கள் எவருமில்லை! - தன்னை அவ்விதம் அப்பட்டமாக மானத்தை வாங்குகிறாரே என்று மனம் நொந்தான். உடனே ஏதோ தோன்றினவனாய், "சரி, சார்" என்று போர்டில் குண்டு குண்டாய்ப் பத்துத் தடவை எழுதினான்.

அதைப் பார்த்துவிட்டு வகுப்பே கொல் என்று சிரித்தது. கண்ணன் தைரியமாக, "ஏன் சிரிக்கிறீர்கள்? நான் எழுதியிருப்பதில் என்ன தவறு? கண்ணன் ஒரு திருடன் தான் சந்தேகமேயில்லை. கோபியரின் உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொண்டவனாயிற்றே!" என்று கூறினான்.

சங்கரன் சாமர்த்தியம்

சத்திய மோதிரம்

கி.ரா.

சந்திரன் ஸ்கூல் கிரவுண்டிலிருந்து திரும்பும்போது மணி ஏழு ஆகிவிட்டது. வீட்டுக்குப் போனதும் அப்பா கோபித்துக் கொள்வார். அதற்கு என்ன சாக்குச் சொல்லலாம் என்று அவன் யோசனை பண்ணிக்கொண்டு நடந்து வந்தான். அப்போதுதான் கீழே அந்த மோதிரம் கிடந்தது. தெரு விளக்கின் ஒளியில் பளிச்சென்று மின்னிற்று. அதைக் குனிந்து கையில் எடுத்துப் பார்த்தான். கொஞ்சம் அழுக்கேறியிருந்தாலும் சில இடங்களில் தங்கத்தைவிடப் பளபளப்பாய் மின்னிற்று. அதைக் கையில் போட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்தான்.

அவனுடைய அப்பா அவனுக்காக வாசலில் காத்துக்கொண்டு நின்றார்.

அவர், "எங்கேடா போனாய்?" என்று உறுமினார். சிநேகிதப் பையன் வீட்டில் போய்ப் பாடம் படிக்கப் போனதாகத்தான் சொல்ல வேண்டும் என்று மனத்திற்குள் திட்டம் போட்டிருந்தான். ஆனால் அவனையும் அறியாமல் வாய், "கிரவுண்டில் பந்து விளையாடிக் கொண்டிருந்தேன், அப்பா" என்று உண்மையைச் சொல்லிவிட்டது.

அப்பாவுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. "அயோக்கியப் பயலே! ராத்திரி எட்டு மணி வரையில் பந்து விளையாடுகிறாயா?" என்று முதுகில் ஓங்கி ஓர் அறை வைத்தார். அழுது கொண்டே உள்ளே போனான்.

மறுநாள் காலையில் எழுந்திருக்கும்போதே சந்திரனுக்கு மனத்தில் உற்சாகமாயிருந்தது. காபி சாப்பிட்டதும் அவனுடைய சிநேகிதன் ராஜு கோலி விளையாடக் கூப்பிட்டான். எட்டு மணி வரையில் போய் விளையாடிய பிறகு வீடு திரும்பி வந்ததும் குளித்து விட்டு ஸ்கூலுக்குப் புறப்படத்தான் அவகாசம் இருந்தது. அதனால் அன்று வகுப்புக்குப் போட்டுக்கொண்டு போகவேண்டிய கணக்குகளைப் போட்டுக்கொண்டு போகவில்லை.

வகுப்புக்குப் போனதும் உபாத்தியாயர், "கணக்குப் போட்டாயா?" என்று கேட்டார்.

"நான் போடவில்லை, ஸார்" என்றான் சந்திரன்.

"என்?"

"காலையில் கோலி விளையாடப் போய்விட்டேன். அதனால் அவகாசம் இல்லை."

உபாத்தியாயருக்கு வந்து விட்டது கோபம். "என்டா போக்கிரிப் பயலே! கணக்கைப் போடாமல் கோலி விளையாடப் போனாயா! ஏறு பெஞ்சிமேலே!" என்றார்.

பேசாமல் பெஞ்சியின் மேல் ஏறி நின்றான் சந்திரன். அவன், "வயிற்றை வலித்தது, ஸார். அதனால் கணக்குப் போடவில்லை"

என்று பொய் சொல்லியிருக்கலாம். உபாத்தியாயரும் பேசாமல் இருந்திருப்பார். அவனுக்கு என்னவோ பொய் சொல்ல வரவில்லை.

இப்படி இரண்டு நாள் ஆயிற்று. பல சமயங்களில் அவன் பொய் சொல்லவேண்டும் என்று நினைத்தான். ஆனால் அவனால் சொல்ல முடியவில்லை. அவனையும் அறியாமல் உண்மைதான் வந்தது. அதனால் அவனுடைய சங்கடங்கள் அதிகம் ஆயின.

கடைசியில் அவன் யோசனை செய்து பார்த்தான். இத்தனை சங்கடங்களுக்கும் அந்த மோதிரந்தான் காரணம் என்ற முடிவுக்கு வந்தான். என் என்றால் அந்த மோதிரத்தை அவன் கையில் போட்டுக்கொண்ட பிறகுதான் அவனுடைய கஷ்டங்கள் ஆரம்பமாயின.

ஆகையினால் ஒரு நாள் ஸ்கூலிலிருந்து வரும் வழியில் அந்த மோதிரத்தைக் கழற்றி வீசி எறிந்துவிட்டான். அந்த மோதிரம் நடுப் பாதையில் கிடந்தது.

2

செல்வி என்பவள் பால்கார கோவிந்தனின் மகள். ஒரு நாள் காலையில் அவள் பால் எடுத்துக்கொண்டு அந்த வழியாகப் போகும் பொழுது கீழே கிடந்து மின்னும் அந்த மோதிரத்தைப் பார்த்தாள். உடனே அதை எடுத்துக் கையில் போட்டுக் கொண்டாள்.

அடுத்தாற்போல் பால் ஊற்றும் வீட்டுக்குப் போனதும் அந்த வீட்டு அம்மா, "என்னடி குட்டி! பால் இத்தனை தண்ணியாயிருக்கிறது! இப்படிக் கொடுத்தால் வாங்க முடியாது. போய் உங்க அப்பா கிட்டச் சொல்லு" என்று சொன்னதும் அந்தப் பெண் என்ன சொல்லவேண்டியது, "சரி" என்று தானே சொல்லவேண்டும்? செல்வி அப்படிச் சொல்லவில்லை. "எங்கயினுதான் அம்மா குழாத்தண்ணியைப் பிடிச்சு ஊத்தினுங்க" என்று நிஜத்தைச் சொல்லி விட்டது.

மறுநாள் பால்கார கோவிந்தனை வீட்டம்மா கோபித்துக் கொள்ள, கோவிந்தன் வீட்டுக்குப் போனதும் தன் மகளை, "என் உண்மையைச் சொன்னாய்?" என்று அடி அடி என்று அடித்தான். அப்போது அவள் கையில் இருந்த மோதிரத்தைப் பார்த்த



தும், ''எது?'' என்று கேட்டான். பெண்ணும் உண்மையைச் சொன்னாள். உடனே அதை அவன் வாங்கிக்கொண்டு போய்விட்டான்.

மோதிரத்தை வாங்கிக் கொண்ட கோவிந்தன் அதைக் கையில் போட்டுக்கொள்ளவில்லை. நேராக மார்வாடிக் கடைக்குப் போய் அதைப் பத்து ரூபாய்க்கு அடகு வைத்து விட்டான்.

பல மாதங்கள் ஆயின. அந்த மோதிரம் முழுகிப் போய்விட்டது என்று சொல்லி மார்வாடி அதை உருக்கி ஓர் அழகான பொத்தானாகச் செய்து தன் கடையில் வைத்திருந்தான். ஒரு நாள் ஒரு வக்கீல் கடைக்கு வந்தார். அந்தப் பொத்தானைப் பார்த்ததும் அதை விலைக்கு வாங்கிக்கொண்டு போய் விட்டார்.

அன்றைக்கு மறுநாள் அந்த வக்கீல் கோர்ட்டில் ஆஜராகி நடத்த வேண்டிய ஒரு வழக்கு வந்தது. சோமுமுதலி, குப்புமுதலி

என்று இரண்டு பேர் அடி தடி சண்டை செய்து கொண்ட வழக்கு அது. குப்புவைச் சோமு நன்ருக அடித்துக் காயம் பண்ணி விட்டான். சோமுவின் மேல் தான் வழக்கு. நமது வக்கீல் சோமுவுக்கு ஆஜராகி, அவன் மேல் குப்பு பொய் வழக்குக் கொண்டு வந்து இருப்பதாக ருஜூச் செய்ய வேண்டும். அதற்கு அவருக்கு ஆயிரம் ரூபாய் பீஸ் என்று பேச்சு. ஆனல் உண்மையில் சோமு அடித்தது அவருக்குத் தெரியும். ஆனலும் அவருடைய சாமர்த்தியத்தினல் வழக்கை ஜயித்து விடுவார்.

அன்று என்ன ஆயிற்று? கோர்ட்டுக்குப் போனதும் அவருக்கு என்னவோ மாதிரி இருந்தது. அவருடைய வாயிலிருந்து ஒரு பொய் வார்த்தைகூட வரவில்லை. அப்படியே தன்னுடைய கட்சிக்காரனுக்கு நேர்எதிராக வாதம்பண்ணத் தொடங்கினர். அதைக் கேட்டு ஜட்ஜுகள் எல்லாரும் திகைத்துப் போனர்கள். வழக்கு மறுநாளைக்கு ஒத்திப் போடப்பட்டது.

வெளியில் வந்ததும் சோமு முதலில் வக்கீலை அடிக்கவே வந்து விட்டான். வழக்கையும் வேறு ஒரு வக்கீலிடம் கொடுத்து விட்டான். வீட்டுக்கு வந்ததும் நமது வக்கீல் எல்லாவற்றையும் தம் மனைவியிடம் சொன்னர்.

அதைக் கேட்டதும் அவருடைய மனைவி, "யாரோ மந்திரம் பண்ணித்தான் உங்கள் புத்தியைக் கட்டி விட்டார்கள். நேற்றுப் புதிதாக ஒரு பொத்தான் வாங்கிப் போட்டுக் கொண்டீர்களே, அதனல் வந்ததுதான் இந்த விபரீதம்! அது மந்திரித்த பொத்தான்!" என்று சொல்லி அந்தப் பொத்தானை வாங்கித் தெருவில் வீசி எறிந்து விட்டாள்.

3

ஸ்கூலிலிருந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்த சந்திரனின் கண்ணில் அந்தப் பொத்தான் பட்டது. அதைப் பார்த்ததும் அவன் எடுத்துச் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

(118-ஆம் பக்கம் பாருங்கள்)

அன்று இரவு சந்திரன் ஒரு சொப்பனம் கண்டான். அதில் தேஜசுடன் விளங்கின ஒரு ராஜா வந்து சந்திரனைப் பார்த்துப் பின் வருமாறு சொன்னார்: "சந்திரா! என்னை யார் என்று தெரிகிறதா? நான்தான் அரிச்சந்திர ராஜா! முன்பு சத்தியம் பேசவேண்டும் என்பதற்காக நாடு நகரமெல்லாம் விட்டு விலகிப்போய் மனைவியையும் மகனையும் விற்றுக் கஷ்டப்பட வில்லையா, இந்த அரிச்சந்திர ராஜா? உன் கையில் முதலில் கிடைத்ததே அது என்னுடைய மூத்திரை மோதிரந்தான். அதனால்தான் அதை அணிந்துகொண்டவர்கள் பொய் பேச முடியவில்லை. அதை ஒரு மார்வாடி அழித்துப் பொத்தானாய்ப் பண்ணி விற்று விட்டான். அதுதான் இப்போது உன் கையில் அகப்பட்டது. அதை நீ ஜாக்கிரதையாய் வைத்துக் கொள். உன்னால் இனி பொய்யே பேச முடியாது. இந்த உலகத்தில் பொய் பேசுபவர்கள் அதிகமாகப் போய்விட்டபடியால் யாராவது நிஜம் பேசினால் அவர்களைப் பைத்தியம் என்கிறார்கள். நீ அதற்காகக் கவலைப்படாதே. முதலில் உன்னைக் கண்டு பரிகாசம் பண்ணுகிறவர்கள் கடைசியில் உன்னையே அறிவாளி என்றும் கொண்டாடுவார்கள். இந்த உலகமே எப்போதும் அப்படித்தான். பைத்தியக்கார உலகம்!"

பொழுது விடிந்ததும் சந்திரன் தான் கண்ட கனவைத் தன் சிநேகிதர்களிடம் சொன்னான். எல்லோ அவனை, "டேப் விடாதே!" என்று பரிகாசம் செய்தார்கள்.

பொழுதுபோக்கு

எஸ். சுந்தரம்



கேட்டீர்களா!

காந்தி ஜயந்தி தபால்

அக்டோபர் மாதம் 2-ஆம் தேதி மகாத்மா காந்தி பிறந்த நாள். இந்த ஜயந்தியை நாம் ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடுகிறோம். இந்திய சர்க்கார் தபால் இலாகா இந்த ஜயந்தியை முன்னிட்டு மகாத்மா காந்தியின் நாலுவித போட்டோக்களைத் தபால் கார்டுகளில் அச்சிட்டு வெளியிட்டார்கள். காந்திஜியின் அரை உருவப் படம், சர்க்காவில் நூல் நூற்கும் படம், காந்திஜியும் அன்னை கஸ்தூரி பாயும் உள்ள படம், காந்தியும் குழந்தையும் இருக்கும் படம் ஆகிய இந்தத் தபால் கார்டுகள் அன்று விற்பனை செய்யப்பட்டன. இதன் விலை ஒவ்வொன்றும் ஒன்றரையணா.

குழந்தைப் புத்தகக் காட்சி

குழந்தை எழுத்தாளர்கள் சங்கத்தின் ஆதரவில் குழந்தைகள் புத்தகக் கண்காட்சி ஒன்று மயிலாப்பூரில் பி. எஸ். ஹைஸ்கூலில் 26, 27 தேதிகளில் நடைபெற்றது. தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் டாக்டர் சுப்பராயன் தலைமை வகித்தார். ஸ்ரீ கே. பால சுப்பிரமணிய ஐயர் குழந்தைகள் இலக்கியத்தைப் பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார். கதைப் போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகள் மூவருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

சென்னை ராஜ்யத்தில் தேர்தல்

சென்னை ராஜ்யம் முழுவதும் இந்த மாதம் நகரசபைத் தேர்தல்கள் நடைபெற்றன. இந்தத் தேர்தல்களில் வெற்றி பெற்றவர்கள் நகர பரிபாலன சபைகளில் அங்கத்தினர்கள் ஆவார்கள்.

பைலெட் பேனாத் தொழிற்சாலை

புழலேரிக்கு அருகே உள்ள 'பொலல்' என்ற இடத்தில் பைலெட் பேனாத் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது இந்தியருக்குச் சொந்தமான தொழிற்சாலை. இங்கே ஒரு மாதத்தில் 50,000 உயர்ந்த ரகப் பேனாக்கள் உற்பத்தி செய்ய முடியுமாம். 30,000 டஜன் இங்கிப் புட்டிகள் தயாரிக்க முடியுமாம்.

கல்லூரிகளில் தொழில் பயிற்சி

புத்தகப் படிப்புடன் தொழில் நுணுக்கப் பயிற்சியும் அளிப்பதற்கான ஒரு புதிய திட்டத்தை, சர்வகலாசாலை உப அத்தியட்சகர் டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார் தயாரித்து வருகிறார். இந்தத் திட்டப்படி மெட்ரிகுலேஷன் படித்த பின் ஏதாவது தொழிலில் தேர்ச்சியடைய மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்குமாம்.

பொழுதுபோக்கு விடைகள்

இ. வ: 1. கலைமகள். 3. பானை. 4. பூ. 5. கண். 6. டிராம். 8. வரன். 10. கடிகாரம். 12. ஆணி. 13. மாடு. 14. தூண். 15. கை.

மே. கீ: 1. கண்ணாடி. 2. மணி. 3. பாடகன். 7. ராட்டினம். 8. வடம். 9. ஏணி. 11. ரதம். 12. ஆடு. 13. மான்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

ஊரைக் கண்டுபிடி!

REG. No. M. 5542

அன்றலர்ந்த மலர்போல்
புதுமையாகவும் மோகன
காந்தியுடனும் விளங்குங்கள்...

ஹமாம்

டாய்லட் ஸோப்பு

உபயோகியுங்கள்

ஹமாம் புதிய
வாசனை பொருந்தியது...
அதிக நாள் வரவும்
செய்கிறது!

தி டாடா ஆயில் மில்ஸ்
கம்பெனி லிமிடெட்

A TATA PRODUCT

டாடா தயாரிப்பு

TS6928